# புதுயுகத் தமிழர்

**2 ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி**

பரிசு பெற்ற
கவிதைகளின் தொகுப்பு



# புதுயுகத் தமிழர்

(2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
பரிசு பெற்ற கவிதைகளின் தொகுப்பு)

தொகுப்பாசிரியர்கள் :
பொன். பாலசுந்தரம்
ஐ.தி. சம்பந்தன்

*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*

சுடரொளி வெளியீட்டுக் கழகம்
**CHUDEROLI PUBLICATIONS SOCIETY**
15, Rutland Road, London E7 8PQ, U.K.

வெளியீடு – 15
புதுயுகத் தமிழர்
முதற்பதிப்பு : தி.ஆ. 2036 ஐப்பசி (நவம்பர் 2005)
பிரதிகள் : 1000
உரிமை : சுடரொளி வெளியீட்டுக் கழகத்துக்கு மட்டும்.

விலை ரூபாய் : 30/– (இந்தியாவில்)
ரூபாய் : 60/– (இலங்கையில்)
£ 2/- (பிற நாடுகளில்)

இலங்கையிலும்
புலம்பெயர் நாடுகளிலும்
இந்நூல் விற்பனைக்குண்டு.

அச்சிடல் – நூல் உருவாக்கம் :
**உலகத் தமிழர் பதிப்பகம்**
4, சௌராட்டிரா நகர் 7ஆம் தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
பேசி : 55180155 / 9444111951
மின்னஞ்சல் : eramathi@rediff.com

வெளியீடு :
**சுடரொளி வெளியீட்டுக் கழகம்**
**Chudaroli Publications Society**
**15, Rutland Road,**
**London E7, 8PQ, U.K.**
Tel : 0044-208 552 6992
Email:itsampanthan@hotmail.com

முு. கருணாநிதி

தலைவர், தி.மு.க.

அலுவலகம்: 24320280
இல்லம் : 28111133


17.10.2005

# வாழ்த்துச் செய்தி

இங்கிலாந்து நாட்டின் தலைநகரான இலண்டன் மாநகரில் இயங்கி வருகின்ற 'சுடரொளி வெளியீட்டுக் கழகம்' உலகம் தழுவிய அளவில் மாபெரும் தமிழ்க் கவிதைப் போட்டி ஒன்றினை நடத்தியிருப்பதையும், அதில் சுமார் 400-க்கு மேற்பட்ட கவிஞர்கள் கலந்து கொண்டதையும் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

அந்தக் கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிஞர்களுக்குப் பரிசளிப்பு விழாவும், அதனையொட்டிச் சிறப்பு மலரையும்,பரிசுபெற்ற கவிதைகளின் தொகுப்பாக ''புதுயுகத் தமிழா'' எனும் நூலையும் வெளியிடுவது பாராட்டுதற்குரிய செயலாகும்.

நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்றவர் நம்முடைய கவிவேந்தர் வேழவேந்தன் என்ற செய்தி மேலும் மகிழ்ச்சியைத் தரத்தக்க செய்தியாகும்.

அந்த அரிய நிகழ்ச்சியை நடத்திய சுடரொளி வெளியீட்டுக் கழகத்துக்கும், பரிசுகளைப் பெற்ற கவிஞர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(மு. கருணாநிதி)

பெறுநர் :

**திரு. பொன். பாலசுந்தரம்**
***தலைவர்,***
***சுடரொளி வெளியீட்டுக் கழகம்,***
***இலண்டன்.***


அலுவலகம் :
அண்ணா அறிவாலயம்,
367-369, அண்ணா சாலை,
சென்னை - 600 018.

இல்லம் :
நெ.15, 4-வது தெரு,
கோபாலபுரம்,
சென்னை - 600 086.

சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் காப்பாளர்

டாக்டர் எஸ். நவரத்தினம் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

ஓர் இனத்தின் நாகரிக வளர்ச்சி கணிக்கப்படும் போது, அவர்களுக்குரிய கலை, கலாச்சாரப் பொக்கிஷங் களே கருதுபொருளாக உள்ளன. அவற்றின் வளர்ச்சிக் குத் தகுந்த கவனம் செலுத்தப்படுகிறதா? என்பதனைக் கவனிப்பது வழக்கம்.

உலகில் மிகப் பெரிய பரிசாகக் கருதப்படும் நோபல் பரிசு பெறும் இலக்கியத்துக்கு ஒரு முக்கியத் துவம் கொடுப்பதை நாம் அறிவோம்.

இதே வகையில் தமிழ் – தமிழர் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்ட 'சுடரொளி வெளியீட்டுக் கழகம்' 2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியைச் செவ்வனே நடத்தி அதற்குரிய பரிசளிப்பு விழாவை ஒழுங்காக நடத்தும் பணியை நாம் வாழ்த்துகிறோம்.

இக்கவிதைப் போட்டியில், தமிழர்கள் எங்கெங்கு வாழ்ந்தாலும், பங்கெடுத்துத் தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பங்களிப்பது கடமையாகும்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்க் கவிஞர்கள்!

# வாழ்த்துகிறோம்



*செந்தமிழ் செழிக்கச் செய்வார்!*
*சீர்தமிழ் இசையைப் போற்றி*
*நின்றவர்! தமிழ மைப்பில்*
*நிறைபொது நலத்தின் தொண்டர்!*
*மன்றலில் இந்த நூலும்*
*மலர்ந்திடத் துணையாய் நின்றார்!*
*வென்றிடும் நவரத் தினம்நின்*
*வேர்ப்பலா பணிகள் வாழ்க!*

– **இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம்**

# முன்னுரை

- 'உணர்ச்சிக் கவிஞர்' காசி ஆனந்தன்

உலகத் தமிழ்ப் பா இலக்கியப் போட்டியில் கலந்து கொண்ட வர்கள் 'புதுயுகத் தமிழர்' எனும் தலைப்பில் உருவாக்கிய பாக்களின் தொகுப்பு இது.

போட்டியை நடத்திய இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினரைப் போற்றுகிறேன்.

ஆங்கிலம் கலந்து தமிழ் அழிந்து கொண்டிருக்கும் காலத்தில் இவர்கள் பணி தமிழின் ஆணி வேரில் நீர் பாய்ச்சுகிறது.

தமிழ் தோய்ந்த புலவர்களை எழுத வைப்பதும் தமிழ்மொழியை வாழ வைப்பதும் ஒன்றுதான்.

இத்தகைய தூய பணியில் ஈடுபடுகிறவர்கள் கொஞ்சம் விழிப்பாக இருக்க வேண்டும்.

குற்றம் சுமத்தும் நோக்கில் அல்ல. உங்கள் மீது அடுத்தவர்கள் குற்றம் சுமத்தக் கூடாது என்னும் நோக்கில் சொல்லுகிறேன். பா இலக்கியப் போட்டிக்கு நீங்கள் தந்த தலைப்பில் குற்றம் இருக்கிறது.

'புதுயுகத் தமிழர்' என்னும் தலைப்பில் வரும் 'யுகம்' தமிழல்ல - சமற்கிருதம். தமிழை ஒரு காலத்தில் புதைகுழியில் தள்ள முயன்ற வடமொழி தமிழில் மீண்டும் புகலாமா?

**'ஆங்கிலக் குடும்பத் துக்குள் அயல்மொழி நுழைவதில்லை**
**மாங்குயில் கூவும் சோலை மாத்தமிழ்க் குடும்பத் துக்குள்**
**பாங்கிலாப் பிறமொ ழிக்கால் பதிந்திட வைக்கலாமோ?**
**ஏங்கியே செந்த மிழ்த்தாய் எட்டியே நிற்க லாமோ?**

என இப்போட்டியில் கலந்து கொண்ட அவை அமுதன் பாடுகிறார். அவர் கலந்து கொள்ளும் போட்டியின் தலைப்பு புது'யுகத்' தமிழர் என அமையலாமா?

கி.பி.3-ஆம் நூற்றாண்டில் வடமொழி கலந்த மணிப்பிரவாளம் தமிழில் நுழைந்தது. கி.பி.19-ஆம் நூற்றாண்டிலேயே வடமொழிக் கலப்பை - மணிப்பிரவாளத்தை நம்மால் வெல்ல முடிந்தது. 1,700 ஆண்டுகள் வடமொழியை எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடத்தியே வென்றோம்.

நேற்றைத் தமிழுணர்வாளர்கள் இந்த நீண்ட நெடிய காலத்தில் பட்டபாடுகளை இற்றைத் தமிழர்கள் நெஞ்சில் பதித்தல் வேண்டும்.

இனி,

பா இலக்கியப் போட்டியை நடத்திய தமிழுணர்வாளர்களின் அரிய முயற்சியால் வெளிவரும் இப்'பா' நூல் தொகுப்பினைப் பார்ப்போம்.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழுணர்வாளர் உருவாக்கம் இது.

முதல் பரிசு வேழவேந்தனார்க்கு வழங்கப்பட்டிருப்பது முற்றிலும் சரியானதே.

தமிழ்நாட்டில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் பாவலர்களில் வேழவேந்தனார்க்குச் சிறப்பான இடம் உண்டு. எண்சீர் விருத்தம் அவர் எழுதுகோலில் தனி எழில் பெறும். சொற்களைக் கையாள்வதில் அவருக்கென ஒரு சொந்த நடை. எடுத்துக்கொண்ட பொருளைச் சுற்றியே சுழலும் எழுத்துக்கள். வேழவேந்தனார் எல்லா வகையிலும் பாராட்டுக்குரியவரே.

இளஞ்சித்திரன் பாக்களையும் எனக்குப் பிடிக்கும். தமிழை - தமிழனை - தமிழ் மண்ணை மறக்காத இலக்கியம் படைப்பவர்.

தூய தமிழுணர்வை திருமதி. கற்பகம் தன் பாவில் தூவியிருக்கிறார்.

**'உலகமெங்கும் பாலமாக**
**உயர்ந்த மொழியாய்த் தமிழ்மொழி...**
**உலகமெங்கும் மதிக்கத் தக்க**
**உயர்ந்த நிலையில் தமிழினம்!'**

'தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டாமா?' என முழங்கி ஆங்கிலத்துக்குத் தோள் தருகிறவர்கள் இருக்கிறார்கள்.

'உலகமெங்கும் பாலமாக ஏன் தமிழ் உயரக் கூடாது?' என்னும் கற்பகத்தின் உறுமலில் உண்மைத் தமிழுணர்வு வெளிப்படக் காண்கிறேன்.

தமிழீழப் பாவலரிடையே முதல் பரிசை யாழ்ப்பாணத்தின் கணேசன் சேந்தன் தட்டிச் செல்கிறார்.

இரண்டாம் பரிசு பெற்ற மட்டக்களப்பு முரளீஸ்வரனின் இலக்கிய வரிகள், கற்பகத்தின் ஏக்கத் தொடராக - உறுமல் எதிரொலியாகக் கனிந்துள்ளன.

**'ரோமில் கூடத் தமிழனாய் இருப்போம்!**
**ரஷ்யப் பனியினைத் தமிழ்மொழி பெயர்ப்போம்**
**தேம்சின் கரையினில் தமிழ்ப் பாட்டிசைப்போம்!**
**சீனத்துச் சுவரில் திருக்குறள் வரைவோம்!'**

தமிழர் ஏக்கத்தின் எரிமலை வெடிப்பாய் இந்நூலின் பாக்கள் அனைத்தும் தழல் கொட்டக் காண்கிறேன்.

**'ஈராயிரம் நரிகள் இணைந்தூளை இட்டாலும்**
**ஓரரிமா தன்னின் உயர் முழக்கை வெல்வதில்லை!**
**தன்னுணர்ச்சி கெட்டழிந்த தாழ்ந்த தமிழ்க்குலத்தை**
**உன்றன் உயிரால் உயர்த்தி நிமிர்த்திடுவாய்!**

என்கிறார் காசி பிச்சை.

**'மெய்கூனிய இனத்தின்**
**இருள் மேகம் கிழிக்கப் பெய்தது**
**விழிப்பு எனும் பெருமழை!**

**உடலையே வெடியாக்கினான்**
**ஈழத்தில்'**

இது மட்டுவில் ஞானக்குமரனின் இடி முழக்கு.

பா இலக்கணம் ஆங்காங்கே மீறப்பட்டிருப்பினும் - தூய தமிழுணர்வின் பாய்ச்சலை நூல் முழுவதும் பார்க்கிறோம்.

அருந்தமிழ்ப்பணி ஆற்றி வரும் இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினரை மீண்டும் அகம் நெகிழ வாழ்த்துகிறேன்.

பாவலர்கள் அனைவர்க்கும் பாராட்டுகள்.

*தமிழீழம்*
*18.10.2005*

# அணிந்துரை

– கவிநாயகர் **வி. கந்தவனம்**

ஈழகத்தில் தரமான கலை, இலக்கிய, சமய, அரசியல் ஆக்கங்களை வெளியிடுவதற்கும் எழுத்தாளர்களை மதித்து அவர்களுக்கு ஊக்கமும் உதவிகளும் அளிப்பதற்கும் அமைக்கப் பட்ட சுடரொளி வெளியீட்டுக் கழகம் தற்பொழுது இலண்டனைத் தலைமைக் களமாகக் கொண்டு அதன் நோக்கங்களை உலகளாவிய முறையிற் செயற்படுத்தி வருகின்றது.

இச்செயற்பாட்டின் ஒரு கூறாக உலகத்துக் கவிஞர்களை ஊக்குவிக்குமுகமாகவும் கவிதைத் துறையை வளர்க்குமுகமாகவும் இதுவரை இரு கவிதைப் போட்டிகளை இக்கழகம் நடத்தியுள்ளது.

இரண்டாவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி 2004இல் 'புதுயுகத் தமிழர்' என்ற பொருளில் நடத்தப்பட்டது. தமிழீழத்துக் கவிஞர்களிடமிருந்து வந்தவை தனியாகவும் ஏனைய தமிழ்கூறும் நல்லுலகத்துக் கவிஞர்கள் அனுப்பியவை வேறாகவும் மதிப்பிடப் பெற்றுப் பரிசுக்குரியவை தெரிவு செய்யப்பட்டன. இரு பிரிவு களிலும் பரிசு பெற்ற கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளி வருகின்றது.

கவிதை என்பது அனுபவத்தோடு கூடிய உள்ளத்து உணர்வுக்குப் படிப்பவர் உள்ளத்தை அள்ளும் வகையில் கற்பனையும் விற்பனமும் கலந்து, அளவானதும் பொருத்தமானதும் அழகானதுமான சொற்களால் ஆக்கப்பெற்ற அடிகளாலோ வரிகளாலோ கொடுக்கப்படும் வடிவம். இவ் வரைவிலக்கணத்தில் 'அடிகள்' மரபு வடிவத்தையும் 'வரிகள்' புதிய வடிவத்தையும் குறித்து நிற்கின்றன என்பது சொல்லாமலே போதரும்.

இந்த இடத்திலே 'புதுயுகத் தமிழர்' என்ற தலைப்பு ஒன்றைக் கொடுத்துக் கவிஞர்களைக் கவிதை பாடுங்கள் என்று கேட்கப் படுகையில் அதுகுறித்த அனுபவத்தை அவர்கள் பெற்றிருப்பார்களா என்ற கேள்வியை ஒருவர் எழுப்பலாம். அல்லது ஆழிப்பேரலையின் பாதிப்புப்பற்றி, அதனாற் பாதிக்கப்படாத நாடுகளில் வாழும் கவிஞர்கள் பாடலாகாதா என்று வினாவலாம்.

கொடுத்த தலைப்புக் குறித்துச் சிந்திப்பதே ஓர் அனுபவந்தான். அனுபவங்களை நேரடியாகத்தான் பெறவேண்டும் என்றில்லை. புறவாரியாகவும் பெறலாம். 'சுனாமி'யால் ஏற்பட்ட பாதிப்புகளைத் தொலைக்காட்சியிலே பார்த்து ஆயிரக்கணக்கானவர் கண்ணீர்விட்டு அழுதிருக்கிறார்கள். கண்ணீர்விட்டு அழுதார்கள் என்ற செய்தியை வானொலிகளிற் கேட்டவரும் பத்திரிகைகளிற் படித்தவரும் நெகிழ்ந் திருக்கிறார்கள். இவை எல்லாம் 'சுனாமி' தொடர்பான அனுபவங்கள்தாம்.

அனுபவங்கள் நிகழ்கால அனுபவங்களாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை. இறந்தகால அனுபவங்கள் எல்லோரிடமும் தேங்கியிருக்கின்றன. கவிதைப் பொருள் குறித்துச் சிந்திக்கையில் அடிமனத்தில் அடங்கியிருக்கும் அனுபவ வங்கியிலிருந்து அதற்குப் பொருத்தமான உணர்வொன்று மேலெழலாம்.

'புதுயுகத் தமிழர்' கவிதைகள் எல்லாவற்றிலும் இத்தகைய அனுபவங்கள் பின்னிப் பிணைந்துள்ளன. முதற் பரிசு பெற்ற கவிவேந்தர் கா. வேழவேந்தன் நல்லதொரு கற்பனையுடன் கவிதையை இப்படித் தொடங்குகின்றார்.

**அன்றொருநாள் கடலோரம் அமர்ந்தி ருந்தேன்**
**அலையோசைத் தாலாட்டால் உறங்கிப் போனேன்**
**பொன்னொளியும் புன்னகையும் பொலிய ஓர்பெண்**
**புதிர்போல வந்தென்றன் எதிரில் நின்றாள்**
**என்னம்மா யார்நீங்கள் என்றேன் உன்னை**
**ஈன்றெடுத்த தமிழன்னை நான்தான் என்றாள்**
**நன்மகனே நீஎங்கும் புதுயு கத்தை**
**நானுனக்குக் காட்டுகிறேன் உடன்வா என்றாள்.**

கனவுக் கற்பனை கவிதையுலகுக்கு ஒன்றும் புதியதன்று. பொருளைக் கையாண்டிருக்கும் மதிநுட்பங் கருதியே கவிவேந் தருக்குப் பரிசு வழங்கப்பட்டிருக்கிற தென்று நினைக்கிறேன். எடுத்த எடுப்பிலேயே விடயத்துக்கு வந்துவிடுகிறார்கள். சொல்ல வேண்டியதை ஐந்து கவிதைகளில் அடக்கி விடுகிறார். அடுத்த செய்யுளிற் சட்டென்று முடித்துவிடுகின்றார். இந்த எடுப்பும் தொடுப்பும் முடிப்பும் அவரை ஒரு புதுயுகக் கவிஞராகவே எமக்குக் காட்டுகின்றன.

புதயுகக் கவிஞர் புதுக் கவிதைதான் பாடவேண்டும் என்றில்லை என்பதனையும் அவர் உணர்ந்திருக்கின்றார். பிழையில்லாத எண்சீர்

விருத்தத்தில் சொல்ல வேண்டிய பொருளைப் புதுயுகத் தமிழருக்கு எப்படிச் சொல்லுதல் வேண்டும் என்பதனை நன்கு அறிந்திருக் கின்றார் கவிவேந்தர். கூறியதனைக் கூறாது, நீட்டி முழக்காது நேரத்தைப் பொன்போலப் போற்றும் புதுயுகத் தமிழருக்குச் சொல்ல வேண்டியதனைச் சுருங்கக் கூறி விளங்க வைத்திருக்கும் முறை போற்றுதற்குரியது.

அவ்விதம் விளங்க வைப்பதற்கு மொழிவளம் இன்றியமை யாதது. செயற்கைத் தன்மை எதுவுமின்றித் தமிழ் வெகு இயல்பாகவே நடைபயில்கின்றது. 'ஒய்வதனை என்மைந்தர் புதைத்த தாலே உலகத்தின் முதன்மக்கள் ஆனார் பார்பார்" என்பது போன்ற பொருட் சுவையும் சொற்சுவையும் மிகுந்த அடிகளும் கவிதைக்கு அணி செய்கின்றன.

எனினும், கவிவேந்தருக்குப் புதுயுகம் இன்னமும் பிறக்க வில்லை. அவரைப் போலவே,

**ஈழந் தொடங்கி தமிழகம் கடந்து**
**இந்த உலகின் எல்லாத் திசையிலும்**
**யுகங்களைத் தமிழர்தம் கைகளில் எடுப்பர்**
**யுகங்களை வென்று சரித்திரம் படைப்பர்**
**உளவியல் மருத்துவம் பொறியியல் என்று**
**உலகின் வளங்களைத் தமிழில் தருவர்**
**தமிழர் தமிழ்மொழி உலக அரங்கினில்**
**தனிச்சிறப் பெய்தும் காலம் நிறுவுவர்!**

என்று பாடும் இரண்டாவது பரிசு பெற்ற கவிஞர். சி. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் புதுயுகம் வருங்காலத்திலேதான் வரவிருக்கின்றது.

ஆயின் மூன்றாம் பரிசுபெற்ற திருமதி கற்பகம் போன்ற ஒரு சில கவிஞர்களுக்குப் புதுயுகம் ஏற்கெனவே பிறந்துவிட்டது.

**தமிழருக்குத் தனியாய் நாடு**
**சரியாய் அமைந்து விட்டது**

என்று தொடங்கும் கற்பகத்திடம் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னதாகவே 'ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்' என்று பள்ளுப் பாடிய மகாகவி பாரதியாரின் நம்பிக்கையும் தொலை நோக்கும் கூர்மை பெற்றிருப்பதனைப் பார்க்கிறோம் எனினும்,

**சண்டை இல்லைச் சாதி இல்லை**
**சமத்து வத்தில் தமிழகம்**

**மண்டும் தமிழர் பெருமை யாவும்**
**மாண்பாய்க் கூட்டும் தமிழகம்!**
**வான வெளியில் புதிய கோளில்**
**வணங்கும் புதிய தமிழகம்**
**வானக் கோள்கள் பலவும் ஆய்ந்து**
**வாழும் நிலையில் தமிழகம்!**
**என்றெல்லாம் ஆசைகாட்டும் கற்பகமும் ஈற்றில்,**
**இந்தி யாவில் இருப்ப தல்ல**
**இந்த இனிய தமிழகம்**
**சொந்த மாகத் தனியாய் அமைந்த**
**துணிவு மிக்க தமிழகம்!**

என்று பாடிப் பாகிஸ்தானைப் போலவோ வங்கதேசத்தைப் போலவோ இந்தியாவிலிருந்து பிரிந்து தனி நாடாக இயங்கும் வருங்காலத் தமிழகத்திலேயே நம்பிக்கை வைத்திருப்பதாகத் தெரிகிறது.

புதுயுகம் என்பது திடீரெனப் பிறப்பதொன்றன்று. அது பிறப்பிக்கப்படுவது. உருவாக்கப்படுவது. அதன் உருவாக்கம் தொடங்கிவிட்டது என்று மிக யதார்த்தமாகவே கொடிபிடிக்கிறார் மட்டுவில் ஞானக்குமரன் :

**எல்லாத் துறைகளிலுமே**
**அடக்குமுறை உடைத்துக்**
**குன்றென எழுந்தான் சாம்பல் மேட்டிலிருந்து**
**பீனிக்ஸ் பறவையாகத் தமிழன்.**

**மேகம் கிழித்த கதிர் போலே**
**மண்ணிலே வந்துதித்தான்**
**தமிழுக்கு ஒரு படைத் தலைவன்**
**படைத் தலைவன் மட்டுமா**
**பாட்டுடைத் தலைவனுமாய்ப் பிரபாகரன்...!**

**விண்வெளியிலும் தமிழன் பெயர்**
**ஆகா வாழ்க அப்துல் கலாம்**
**உனக்குச் சலாம் நூறு!**

**முத்தையா நீ**
**விளையாட்டிலே காட்டுகிறாயே வித்தையை**
**உலக சாதனை இன்னும் உன் தோளிலே!**

**விழ விழ**
**எழுந்த புதுயுகத் தமிழனுக்கு**
**இனி விழ இருப்பதெல்லாம் வெற்றி எனும் மாலைகளே...!**

தமிழீழத்துக்கான பிரிவிலே முதற் பரிசைத் தட்டிக்கொண்ட கவிஞர் கணேசன் சேந்தனின் கவிதை உள்ளத்தைத் தொட்டிழுக்கும் உயர்ந்த படைப்பாகவுள்ளது. தமிழ் அழகு காட்டும் இக் கவிதையில்,

**தாயணைக்கும் பாசமெனத் தண்ணிலவு காயும்**
**தவழுகின்ற காற்றினூடு தமிழ்கலந்து பாயும்**
**தீயெரித்த பின்னும்வனம் திரும்பவுமே தழைக்கும்**
**திகழுபுவி பொலிவளங்கள் சேர்ந்தழகை இழைக்கும்.**

என்று கவிஞர் பாடுவது புதுயுகத்தையன்று. பழைய யுகத்தை 'முரசறைந்து சங்கொலிக்க முன்னரெங்கள் ஆட்சி'யில் நடந்த மாட்சியைத் தொட்டுக் காட்டிவிட்டு அஃது 'இன்று வெறும் ஏட்டினிலே ஏனடங்கிப் போச்சு?' என்று கேட்கிறார். கேட்டுவிட்டுப் பதிலையும் தானே தருகின்றார். பின்னர்,

**எம்மினத்தை மொழியையெங்கள் ஏற்றமிகு நாட்டை....**
**எச்சிலாக்க வருபவரை எதிர்த்தவர்க்குச் சாட்டை**
**செம்மையாக வீசிடவே செருக்களங்கள் ஏறும்**
**சீலர்களால் தமிழுக்கின்னும் சீவனுண்டு தேறும்!**

என்று ஆறுதலடைகிறார். எமக்கும் நம்பிக்கை ஊட்டுகின்றார்.

W.H. Auden (1907 - 1973) சிறந்தவோர் ஆங்கிலக் கவிஞர். ஆக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் கவிதைப் பேராசிரியராக இருந்தவர். அவர் 'The poet hangs around words' என்ற கருத்துடையவர். அவரது நினைவு சேந்தனின் கவிதையைப் படிக்கையில் தலையெடுக்கின்றது.

இரண்டாவது பரிசு பெற்ற கவிஞர் ஆர். முரளீஸ்வரனின் கவிதையில் சொல்நயம் குன்றியிருப்பினும் பொருள்நயம் பொலிந்து விளங்குகின்றது :

**பிள்ளைகள் கவனிக்க நேரங்க ளற்றுப்**
**பெற்றவர் வாழ்வைத் தனிமையில் விட்டே**
**உள்ளத்தை இரும்பாய் இயந்திரப் படுத்தி**
**ஓடிடும் வாழ்வை மாற்றி யமைப்போம்.**
**வீழ்ந்ததிற் பெருமை நயாகரா வீழ்ச்சி**
**சாய்ந்ததிற் பெருமை பைசா கோபுரம்**
**ஆழ்ந்ததிற் பெருமை டைட்டானிக் கப்பல்**
**அழிந்ததில் எழுந்தோம் அதுஎம் பெருமை!**

என்று பாடும் கவிஞர் கற்பனையால் விற்பனம் நாட்டுகின்றார்.

இவ்விதமான கற்பனை நயம் பிற கவிதைகள் பலவற்றில் பஞ்சம் கொட்டுகிறது என்பதையும் சுட்டிக் காட்டவே வேண்டும்.

எனினும் இத்தொகுதியின் நன்மைகள் பல :

1. உலகளாவிய நிலையில் திறமை சான்ற கவிஞர்கள் பலரை இனங்காணவும்,
2. அவர்களை ஒன்று சேர்க்கவும்,
3. தற்காலக் கவிதையின் போக்கினை மதிப்பிடவும்.
4. கவிதைக் கலையின் மேன்மையை வலியுறுத்தவும்,
5. புதுயுகத் தமிழர் பற்றிக் கவிஞர்கள் கொண்டிருக்கும் கருத்துகளை அறியவும்.
6. அக்கருத்துகள் தமிழ்கூறும் நல்லுலகத்தவருக்கு எந்த அளவுக்குப் பயனுடையதாகும் என்பதனை விவாதிக்கவும்.
7. தமது எதிர்காலம் பற்றித் தமிழ் மக்களைத் தீவிரமாகச் சிந்திக்க வைக்கவும்,

இத்தொகுதி உதவவல்லது.

போட்டியில் ஆர்வத்துடன் பங்குகொண்ட எல்லாக் கவிஞர் களையும், பாராட்டுகின்றேன். வெற்றி பெற்றவர்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன். வெற்றி பெறாதவர்கள் மேலும் வாய்ப்புகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு கவிதைகளைத் தொடர்ந்து எழுதி முன்னேறுதல் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகத்துத் தமிழ்க் கவிஞர்களை ஊக்குவித்துக் கவிதைத் துறையை வளர்ப்பதற்கு இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் எடுத்துவரும் முயற்சிகள் போற்றுதற்குரியவை.

வாழ்க அதன் தமிழ்த்தொண்டு! வளர்க கவிதைக் கலை!

— **வி. கந்தவனம்**

# பதிப்புரை

## ஐ.தி. சம்பந்தன்,

*செயலாளர், இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம்.*

2000-ஆண்டிற்(மிலேனியத்திற்கு)குப் பின்னர் உலகில் பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மக்கள் வாழ்விலும் வளத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் அவசியம். 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்பதற்கிணங்க வாழ்கிறோம்.

தமிழர் என்றோர் இனமுண்டு; தனியே அவற்கோர் குண முண்டு. கலை, கலாச்சாரப் பாரம்பரியம் படைத்த இனமென்று நம் தமிழினம் போற்றப்படுகிறது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த இனம். மூவேந்தர் ஆண்ட பரம்பரையினர். மொழிவளம், இலக்கிய வளம் கொண்ட தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இனம். ஒன்பது கோடிக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட இனம். உலகில் 56-க்கும் மேற்பட்ட நாடுகளில் பரந்து வாழ்கின்றவர்கள்.

தமிழர்களுக்கென்று ஒரு சுதந்திரத் தனிநாடு இல்லை. தமிழ்நாடு என்ற பெயருடன் இருக்கும் தமிழகமும் இந்திய மத்திய அரசுக்குக் கட்டுப்பட்ட - பூரண சுதந்திரமற்ற நாடாகவே இருக்கிறது. எனவே ஒன்பது கோடித் தமிழ் மக்களின் சார்பில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கக் கூடிய சுதந்திர நாடு ஒன்றை அமைப்பதற்கே ஈழத் தமிழர்கள் போராடுகிறார்கள் என உலகத் தமிழ்க் கவிஞர்கள் பலரின் குரல் இக்கவிதைத் தொகுப்பில் ஒலிக்கிறது. எனவே இக்கவிதைத் தொகுப்பு தமிழர் தாயகத்திற்கு வித்திடும் கவி மலராக அமைகிறது.

இந்த நிலையில், ''புதுயுகத் தமிழர்'' ஊடாக, எதிர்காலத் தமிழர் சமுதாயத்தை உலகக் கவிஞர்கள் எவ்வாறு நோக்குகிறார்கள் என்பதனை இக்கவிதைத் தொகுப்பு வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

மூத்த கவிஞர்கள், இடைநிலைக் கவிஞர்கள், இளம் கவிஞர்கள் எல்லோரும், தமிழர் எதிர்காலத்தை எப்படி நோக்கு

கிறார்கள் என்பதனை இக்கவிதைத் தொகுப்பில் பாருங்கள்; படியுங்கள்.

ஒரு கவிஞனின் படைப்புதான் சமுதாயத்தைச் சிந்திக்க வைக்கும். மகாகவி பாரதியாரின் கவிதைகள் பாரதத்தின் விடுதலைக்கு மெருகூட்டியது. 'ஆண்ட இனம் மீள நினைப்பதில் தவறென்ன?' என்னும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் கவிதை உணர்வுகளே தமிழீழப் போராட்டத்தை முன்னெடுக்க வித்திட்டது. இது போன்றே, ஆங்கில நாட்டை வளமுள்ள, வீரமுள்ள, பாரம்பரியமிக்க நாடாகக் கட்டியெழுப்ப வழி வகுத்தது ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளே.

உலகெலாம் பரந்து வாழும் தமிழ்க் கவிஞர்களில் 426 கவிஞர்கள் 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் பங்கு கொண்டு, தங்கள் கருத்துகளைப் பல கோணங்களிலிருந்து தந்துள்ளனர். அவற்றில் வடித்தெடுக்கப்பட்ட கவிதைத் தொகுப்பை உலகத் தமிழர்களின் நலன் கருதி வெளியிடுவதில் சுடரொளி வெளியீட்டுக் கழகம் பெருமை கொள்கிறது. மேற்குநாட்டுச் சூழலிலிருந்து கொண்டு இக்கடினமான பணியை நாங்கள் செய்துவருகிறோம். அதற்கு உலகத் தமிழர்கள் அளிக்கும் ஆதரவே தெம்பூட்டுகிறது.

இதனைச் சிறப்புடன் வெளியிட உதவிய ஈழத் தமிழ்ப் பற்றாளர்களை எம்மால் மறக்க முடியாது. இக்கவிதைத் தொகுப்பை மிகச் சிறப்பாகவும் அழகாகவும் அச்சிட்டு உதவிய உலகத் தமிழர் பதிப்பகமும் அதன் இயக்குநர் உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் அவர்களும் நம் பாராட்டிற்குரியவராவர்.

அறுசுவையுடன் சமைத்தளித்த விருந்தான இக்கவிதைத் தொகுப்பை வாங்கிப் படித்து உங்கள் ஆதரவை நல்குமாறு உலகத் தமிழ் உடன்பிறப்புகளை அன்பாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

20.10.2005

**ஐ.தி. சம்பந்தன்**

# நன்றியுரை

உழைப்புச் செம்மல் **இரா. மதிவாணன்**

*ஒருங்கிணைப்பாளர்,*

*பரிசளிப்பு விழா ஏற்பாட்டுக் குழுவின் தமிழக உபகுழு*

நல்வாழ்வு தேடி மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றோரில் இலண்டன் வாழ் புலம் பெயர் தமிழர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய **'சுடரொளி வெளியீட்டுக் கழகம்'**, தமிழ் - தமிழர் இன மேம்பாட்டுப் பணிகளைச் செவ்வனே ஆற்றி வருகிறது.

அந்த வகையில், 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியை அண்மையில் நடத்தியது. இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பிரிட்டன், கனடா, ஜெர்மனி, மொரிசியசு முதலான நாடுகளிலிருந்து 426 கவிஞர்கள் இதில் பங்கேற்றனர். வெற்றி பெற்ற கவிஞர்களுக்கான பரிசளிப்பு விழாவை, உலகளாவிய நிலையிலும், பிராந்திய நிலையிலும் பல நாடுகளில் நடத்திட ஏற்பாடுகளைச் செய்து வந்தனர்.

உலகளாவிய நிலையில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவைத் தமிழகத்தில் நடத்துவதற்காக, மதுரா டிராவல்ஸ் தலைவர் கலமைாமணி வி.கே.டி. பாலன் அவர்களைத் தலைவராகவும் உலகத் தமிழர் மையத்தின் பொதுச் செயலாளரான என்னை ஒருங்கிணைப்பாளராகவும் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற இயக்குநர் வா.மு.சே. திருவள்ளுவர், மதுரைக் கவிஞர் இரா. இரவி ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு தமிழக உபகுழுவை சுடரொளி வெளியீட்டுக் கழகச் செயல் அவையினர் நியமித்தனர். அதைத் தொடர்ந்து பரிசளிப்பு விழா ஏற்பாடுகள் நடைபெறலாயின.

அதே வேளையில், வெற்றி பெற்ற கவிதைகளைத் தொகுத்து **'புதுயுகத் தமிழர்கள்'** எனும் நூலை உருவாக்கும் பணியையும், **சுடரொளி சிறப்பு மலரை** அச்சிடும் பணியையும் மேற்கொள்ளுமாறு உலகத் தமிழர் பதிப்பக உரிமையாளரான என்னைப் பணித்தனர். இப்பணிகளை உடனே மேற்கொண்டு, கவிஞர்களின் கவிதைகளும், ஒளிப்படங்களும் திரட்டப் பெற்று அச்சுப் பணிகள் நிறைவேறின.

உங்கள் கரங்களில் அழகுறத் தவழ்ந்து கொண்டிருக்கும் இந்நூலில் 37 கவிதைகள் இடம் பெற்றுள. புத்துலகம் படைக்க விரும்பும் கவிஞர்களின் அறிவியல் இணைந்த தொலைநோக்குப்

பார்வைகள் இவற்றில் பதிவு செய்யப் பெற்றிருக்கின்றன. தமிழ் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு முதலானவற்றை இளம் தலை முறையினர் நன்கு பேணுவதற்கான வழி வகைகள் அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றன.

மேற்கத்திய கலாசாரச் சூழலில் வாழ்ந்து கொண்டு, உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற கவிஞர்களைச் சிறப் பிப்பதற்கும், பரிசுகள் வழங்கி ஊக்குவிப்பதற்கும் அயராது பாடுபட்ட இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினர் நம் பாராட்டு தலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள்.

இத்தகையதொரு சிறப்பான தமிழ்ப்பணியில் நாங்களும் பங்கேற்கும் வகையில் நல்வாய்ப்பு நல்கிய சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் செயலவையினருக்கு நன்றி. குறிப்பாக அதன் தலைவர் **திரு. பொன். பாலசுந்தரம்** அவர்களுக்கும், செயலாளர் **திரு. ஐ.தி. சம்பந்தன்** அவர்களுக்கும் நெகிழ்ச்சியான நன்றி.

இந்நூலும் சிறப்பு மலரும் உருவாக, உடனிருந்து உதவியோர் பலரும் நம் நன்றிக்குரியவர்கள். ஓய்வறியா தொடர்பணிகளுக்கிடை யிலும் நாம் வேண்டிய உடன் வாழ்த்துச் செய்தி வழங்கிய, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் **டாக்டர் கலைஞர்** அவர்களுக்கு உளமார்ந்த நன்றி. பல்வேறு பணிகளுக்கிடையிலும் வாழ்த்துச் செய்தி வழங்கியுள்ள சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் காப்பாளர் டாக்டர் **எஸ். நவரத்தினம்** அவர்களுக்கும் நன்றி. ஐந்து நாள்களிலே நூலைப் படித்து, ஆழமானதொரு முன்னுரையை உடன் வழங்கிய தமிழீழ உணர்ச்சிக் கவிஞர் **காசி. ஆனந்தன்** அவர்களுக்கும் நன்றி. திறனாய்வுப் பார்வையோடமைந்த அணிந்துரையை வழங்கிய கனடா எழுத்தாளர் ஒன்றியப் பொறுப்பாளர் **கலாநிதி கந்தவனம்** அவர்களுக் கும் நன்றி. பிழையின்றி இந்நூல் வெளி வரவேண்டுமென்பதில் கவனமாய் இருந்தோம். பிழை திருத்தும் மெய்ப்புப் பணிகளை மேற்கொண்ட பாவேந்தர் விருது பெற்ற பாவலர் **புலவர் வெற்றியழகன்** அவர்களுக்கும் நன்றி.

பல நாடுகளிலும் பரந்து வாழ்கின்ற தமிழர்கள் இந்நூலை வாங்கிப் பயனுறுவர் என்று நம்புகிறோம்.

அன்புடன்,

24/10/05

**இரா. மதிவாணன்**



# புதுயுகத் தமிழர்

**2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004**

**(முதற்பரிசு பெற்ற கவிதை)**

**-கவிவேந்தர் கா. வேழவேந்தன்**

அன்றொருநாள் கடலோரம் அமர்ந்தி ருந்தேன்;
அலையோசைத் தாலாட்டால் உறங்கிப் போனேன்.
பொன்னொளியும் புன்னகையும் பொலிய ஓர்பெண்
புதிர்போலே வந்தென்றன் எதிரில் நின்றாள்!
"என்னம்மா, யார்நீங்கள்?" என்றேன். "உன்னை
ஈன்றெடுத்த தமிழன்னை நான்தான்!" என்றாள்.
"நன்மகனே! நீஏங்கும் புதுயு கத்தை
நான்உனக்குக் காட்டுகிறே றன் உடன்வா!" என்றாள்.

அழகான வான்தேரில் ஏற்றி என்னை
அண்டவெளி கொண்டுசென்ற அன்னை சொன்னாள்:
"சுழற்கோள மீதினிலே அமெரிக் காபார்!
சுடர்ஒளிரும் ஐ.நா.பார்; அதன்மு கப்பில்
எழில்காட்டும் பன்னாட்டுக் கொடிக ளோடே
ஈழத்தின் தமிழகத்தின் கொடிக ளைப்பார்!
வழிகாட்டும் தமிழ்த்தலைவர் ஐ.நா. மன்றில்
வாதாடும் முழக்கம்கேள்!" என்றாள்; கண்டேன்.

"அதோஆங்கே புலம்பெயர்ந்த தமிழர் இன்றோ
அனைவருமே பெருஞ்செல்வர்! பிறஇி னத்தார்
உதவிக்கே அவர்களினை அண்டி வாழ்வார்!
உயர்வாழ்வை நம்தமிழர் பெற்ற தெங்ஙன்?
புதுமைகளில், கணினிகளில், விஞ்ஞா னத்தில்
பூவுலகில் என்மக்கள் முதலில் நின்றார்!
கதிரொளியை, வீசுகின்ற காற்றைக் கூடக்
கச்சிதமாய் ஏவல்செய வைத்தார்; பார்,நீ!

தாயகத்தின், ஈழத்தின் கடலோ ரம்பார்;
    தவங்கிடக்கும் அயல்நாட்டார் கப்பற் கூட்டம்
நேயமுடன் இயந்திரங்கள், மின்பொ ருள்கள்
    நேர்த்தியுடன் பெறுவதற்கே காத்தி ருக்கும்!
போய்வானை முட்டுகின்ற கட்ட டங்கள்
    பொன்குவிக்கும் தொழிலகங்கள் நிறைந்த தைப்பார்!
''ஓய்''வதனை என்மைந்தர் புதைத்த தாலே
    ''உலகத்தின் முதல்மக்கள்'' ஆனார், பார்,பார்!

''சாதிஎன்றால் அதுஎன்ன?'' என்றே இன்று
    தமிழ்இளைஞர் சமுதாயம் கேட்ப தைப்பார்!
பாதியிலே ஓதியநால் வருண பேதம்
    பாடையிலே போனதைப்பார்! என்றன் மக்கள்
மீதியுள்ள வாழ்க்கையினைச் சுவைப்ப தற்கு
    மேவுகின்ற ஏவுகணைக் கப்பல் ஏறிச்
சீதளத்து நிலவுக்கும், தொலைவில் உள்ள
    செவ்வாய்க்கும் உலாச்செல்லும் மாட்சி யைப்பார்!

மாயவலை வீசிஎனை மேய வந்த
    மாற்றாரின் வேற்றுமொழி ஓய்ந்த தைப்பார்!
தூயதமிழ்ப் பெயர்களுடன் என்றன் செல்வர்
    சுழன்றுவரும் அழகினைப்பார்! உலக நல்லோர்
ஆய்ந்தென்னைச் ''செம்மொழி''யாய் ஏற்ற தாலே
    அகிலப்பல் கலைக்கழகம் எல்லாம் ஈங்கே
தோய்ந்தாயும் ''தமிழ்த்துறைகள்'' கண்ட தைப்பார்!
    தொன்மையினால் ''முதல்மொழி''நான் என்றார்; பார், பார்!

உலகத்தின் பொதுமறையாம் ''குறள்சட் ட''த்தை
    ஒருமுகமாய் வையகத்தார் ஏற்ற தாலே,
கலகவெறி, போர்க்களரி ஒழிந்த தைப்பார்!
    காசினியின் தலைவரெலாம் தமிழ்மண் வந்து
பலவற்றை அறிந்துசெலும் பொற்கா லம்பார்!''
    பாசஅன்னை இவைகூற மயங்கிப் போனேன்.
அலைக்கரங்கள் உறக்கத்தைக் கலைத்த போதில்,
    ''அருங்கனவும் நனவாக'' ஏங்கி நின்றேன்!



2- ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(இரண்டாம் பரிசு பெற்ற கவிதை)

-கவிஞர் சி. பன்னீர்செல்வம்

கண்ணி வெடிகளை வயல்களில் விதைத்துக்
கால் நூற்றாண்டும் நெருங்கிவிட்டது!
குண்டு துளைத்த பூமியில் இன்னும்
குருதியின் ஈரம் காய்ந்திட வில்லை!
இறந்த மனிதர்கள் எரிந்த நூல்களின்
இழப்புகள் உயிரின் ரணமாய் உள்ளன.
இரவும் பகலும் அலைந்திடும் காற்றில்
ஈழப் பூமியின் துயரொலி கேட்குது!

தாய்மண் இழந்து புலம்பெயர் தமிழராய்த்
தேசம் பலவிலும் பிரிந்தே கிடப்பினும்
நாடு மொழியும் உயிரில் சுமந்து
நாளைய தமிழரின் நலங்களைத் தேடுவர்
அகதிகள் என்று அயலவர் தூற்றினும்
அடுக்கடுக் கான இடுக்கண் சுமப்பினும்
அறிவியல் கணிப்பொறி இலக்கியத் தளங்களில்
இந்தத் தமிழர்கள் புதுயுகம் படைப்பர்!

''செம்மொழி'' கண்ட பூமியின் தெருக்களில்
தமிழில் பேசாத் தமிழர்கள் உண்டு;
அயல்மொழி புகழ்ந்து அயல்பொருள் நாடும்
அகக் குருடான மனிதர்கள் உண்டு!
தங்கம் சொத்து பதவியை மதிக்கும்
தன்னலச் சிறுமைகள் பலப்பல உண்டு;
அன்னிய மான தாய்மொழி அகதிகள்
இல்லம் தோறும் இன்றும் உண்டு!

ஆயினு மிந்தத் தமிழகப் பூமியில்
உயிரும் பொருளும் தமிழென வாழ்ந்தோர்
எல்லா யுகத்திலும் நிறைந்தே உள்ளனர்
இனிவரும் யுகத்திலும் தோன்றவே செய்வர்!
தீரா நதிகள் பலப்பல இருப்பினும்
தமிழ்மேல் தாகம் தீரா மனிதர்கள்
காலந் தோறும் நாடுகள் தோறும்
தேனீயைப் போலத் தமிழ்வளம் சேர்ப்பர்!

ஈழம் தொடங்கித் தமிழகம் கடந்து
இந்த உலகின் எல்லாத் திசையிலும்
யுகங்களைத் தமிழர்தம் கைகளில் எடுப்பர்
யுகங்களை வென்று சரித்திரம் படைப்பர்!
உளவியல் மருத்துவம் பொறியியல் என்று
உலகின் வளங்களைத் தமிழில் தருவர்!
தமிழர், தமிழ்மொழி உலக அரங்கினில்
தனிச்சிறப் பெய்தும் காலம் நிறுவுவர்!

திரவியம் தேடத் திரைகடல் கடப்பினும்
தேசம் இழந்த அகதிகள் ஆயினும்
தாய்மண், தாய்மொழி மறவாத் தமிழர்கள்
தமிழரின் யுகத்தைப் படைக்க உதவுவர்!
உலகின் தமிழரை ஒன்றாய் இணைக்கும்
இணைய தளங்களை எங்கும் நிறுவுவர்!
ஊடகம் அனைத்திலும் தமிழரின் மாண்பை
உரத்தொலி செய்தே இழந்தவை மீட்பர்!

தமிழரைப் பிரிக்கும் சாதியச் சிறுமையைத்
தமிழ்நிலம் எங்கிலும் வேருடன் அழிப்பர்!
உலக அரங்கினில் தமிழரின் குரலை
ஒன்றாய் இணைத்தே உலகையே வெல்வர்!
செம்மொழி என்பதன் உண்மைப் பொருளைத்
தேச வெளிகளில் விளங்கிடச் செய்வர்!
தமிழின் ஒளியில் உலகைப் படிக்கும்
காலம் தன்னைக் கைவசப் படுத்துவர்!



## 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
### (மூன்றாம் பரிசு பெற்ற கவிதை)

-திருமதி. கற்பகம்

தமிழ ருக்குத் தனியாய் நாடு
சரியாய் அமைந்து விட்டது;
தமிழ ராலே "ஐ.நா." மன்றம்
சரியாய் இயங்க லானது!

தமிழில் சிறந்த அறிஞர் பலரால்
சங்கம் ஒன்ற மைந்தது;
தமிழர் உலக மெங்கும் போற்றும்
தனித்த புகழும் வந்தது!

அறிவி யலிலும் ஆய்வுக் கூடம்
அங்கே புதிதாய்ப் பிறந்தது;
பொறியி யலிலும் பலவாய்ப் புதுமை
பொழுதும் கண்டு சிறந்தது!

வான வெளியில் விண்க லங்கள்
வரிந்தே விரைந்து பறந்தது;
ஆன மட்டும் புத்தம் புதிய
ஆய்வும் அங்கே விரிந்தது!

உலகம் எங்கும் உயர்ந்த தமிழே
ஓங்கும் மொழியாய் ஆனது;
பலரும் போற்றும் ஆய்வி னாலே
பாரே போற்ற லானது!

வள்ளு வர்தம் திருக்கு றள்நூல்
வைய மறையாய் மலர்ந்தது;
தெள்ளு தமிழே சிறந்த மொழியாய்த்
தேர்ந்தே உலகம் ஏற்றது!

உலகம் முழுதும் தமிழர் கையில்
உயர்ந்த நிலையில் தமிழகம்!
பலரும் வியக்கும் வலிமை யாகப்
பரந்து விரிந்த தமிழகம்!

உலக மெங்கும் பால மாக
உயர்ந்த மொழியாய்த் தமிழ்மொழி!
உலக மெங்கும் மதிக்கத் தக்க
உயர்ந்த நிலையில் தமிழினம்!

புதிய புதிய பொருள்க ளெல்லாம்
பொழுதும் உலகம் முழுதிலும்;
அதிக மான "ஏற்று மதி"யால்
ஆக்கம் குவிக்கும் குதூகலம்!

நாடு பலவும் கடன்கள் கேட்க
நாளும் நாளும் வழங்கிடும்;
நாடு யாவும் போற்றும் நிலையில்
நமது நாடு தமிழகம்!

சண்டை இல்லை; சாதி இல்லை;
சமத்து வத்தில் தமிழகம்!
மண்டும் தமிழர் பெருமை யாவும்
மாண்பாய்க் கூட்டும் தமிழகம்!

வான வெளியில் புதிய கோளில்
வணங்கும் புதிய தமிழகம்!
வானக் கோள்கள் பலவும் ஆய்ந்து
வாழும் நிலையில் தமிழகம்!

மண்ணில் அன்றி விண்ணில் கூட
மலர்ச்சி யோடே தமிழகம்!
எண்ண எண்ண முடிந்தி டாத
எழுச்சி நிலையில் தமிழகம்!

இந்தி யாவில் இருப்ப தன்று
இந்த இனிய தமிழகம்;
சொந்த மாகத் தனியாய் அமைந்த
துணிவு மிக்க தமிழகம்!

புதுயு கத்துத் தமிழர் வாழ்க்கை
போற்றத் தக்க வகையிலே!
புதுமை! புதுமை! புதுமை யாலே
பொழுதும் போற்றும் உயர்விலே!



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 1)

-சே. அப்துல் லத்தீப்

செம்மொழி என்றொரு சிறப்புக் கிடைத்தது
சீரிய புகழ் அன்னை - அவள்
செயல்திறன் இன்னும் சிறப்புற வேண்டும்
சிந்தையில் எடு உண்மை.

சங்கம் இருந்ததும் சாட்சி கிடைத்ததும்
சாதனை ஆகிடுமா? - நாம்
சக்தி முழுவதும் பேச்சில் கழித்தால்
சரியாம் புகழ் வருமா?

அறிவியல் மாறும் நிலையை உணர்ந்தும்
அன்னைத் தமிழுக்கும் - நாம்
ஆக்க உணர்வில் ஆய்வுகள் செய்தால்
அதுவே புகழ் சேர்க்கும்.

கணினி இணையம் காட்டும் வலைகள்
கருத்தில் கொண்டிடுவோம் - அக்
கலையில் தமிழைச் செம்மொழி யாக்கிடும்
கடமையில் வென்றிடுவோம்.

பணியில் இதுவே தலையாய் எண்ணிப்
பலநூல் படைத்திடுவோம் - ஆம்
பள்ளித் தலத்தில் சொல்லிக் கொடுத்திடப்
பயிற்சி கொடுத்திடுவோம்.

தாளில் தமிழை எழுதிப் பார்த்திடும்
தகைமை இருக்காது - ஆம்
தட்டில் வட்டில் சில்லில் எழுதிடும்
தலைமுறை இப்போது.

நூலில் ஆயிரம் இருந்தால் கூட
நுண்ணிய தகட்டாலே - நாம்
நூலகம் அமைத்துப் பார்த்திட முடியும்
நிச்சயம் கைக்குள்ளே.

சேற்றில் உழன்று பழைமை பேசிடும்
சிந்தனை விட்டிடுவோம் - இனிச்
செயலில் வேகம் காட்டி உழைத்துச்
சிகரம் எட்டிடுவோம்.

ஏற்ற வகையில் இன்னருந் தமிழை
இயல்வாய் வடிவமைப்போம் - அஃது
இமயம் தாண்டியும் நம்புகழ் உயர்த்தும்
இதில்நாம் முடிவெடுப்போம்.

(வேறு)

அறிவியலை உள்வாங்கி ஆக்க முள்ள
அதன் துறைகள் தமிழின்வழி ஏற்க வேண்டும்;
செறிவுடைய புதுச்சொற்கள் சிறப்பாய் ஆக்கிச்
செயல்வடிவில் உலவிவர உழைக்க வேண்டும்;
பெரியவனின் உளத்திலெழும் ஆசை போலப்
பேரறிவு ஆசையேநம் நோக்க மாகும்;
சரியிதனை உருவாக்கி முடிப்ப தற்குச்
சத்தியமாய் நம்மிடத்தில் உறுதி வேண்டும்.

புவிமுழுதும் ஏற்றுவரும் மாற்ற மெல்லாம்
புண்ணியத்தாய் தமிழவளும் ஏற்க வேண்டும்;
கவியெழுதும் கவிஞர்களும் இலக்க ணத்தைக்
காப்பாற்றும் அறிஞர்களும் போற்ற வேண்டும்;
எத்துறையின் கலைச்சொல்லும் மரபுங் காத்தே
இயற்றும்பணி ஊக்கமுடன் முடித்தல் வேண்டும்;
வித்தகராய் விளங்கிடுவோர் ஒருங்கு கூடி
விதிமுறைகள் உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும்.

புதுயுகத்துத் தமிழராகச் சிந்த னைக்குள்
புவியிலுள துறையெல்லாம் புகுத்த வேண்டும்;
விதையினையே இட்டதனால் செடிவ ளர்ந்து
விரிகிளையைப் பரப்பிடவே காணு கின்றோம்;
இதுசிறிய பகுதியேதான் இன்னும் இன்னும்
எத்தனையோ பணிகள்நாம் ஆற்ற வேண்டும்
கதவதனைத் திறந்தேநாம் திசைகள் காண்போம்
காலமதே திசைகளையே நமதாய் ஆக்கும்.



## 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 2)

- அதலை இராமன்

*(எண்சீர் விருத்தம்)*

தமிழ்மொழியோ தமிழர்களின் உயிரே யாகும்;
தமிழ்மொழியோ தமிழர்பண் பாட்டைச் சொல்லும்;
தமிழ்மொழியோ இனமானப் பெருமை கூட்டும்;
தமிழினத்தின் மாண்பிற்கோ வலிமை யூட்டும்;
தமிழ்மறவா! தமிழ்மொழியை இழந்தி டாதே;
தன்மானம் இழந்துவீரம் சிதைந்தி டாதே;
தமிழழிந்தால் தமிழரினம் அழிந்தே போகும்
தனிக்குணத்தான் எனும்பெருமை கதையாய் மாறும்!

புதுயுகத்துத் தமிழா!நீ மேலை நாட்டின்
பொன்பொருளைப் பலவாறு சேர்த்திட் டாலும்
விதவிதமாய்ப் பதவிகளைப் பெற்றிட் டாலும்
வேறுநாட்டார் என்றுதானே பழிப்பா ருன்னை!
மதுமயக்கப் போதையிலே சுற்றும் வண்டாம்
மனம்மயங்கி அயல்நாட்டில் மூழ்கி டாதே!
எதுவுனது தாய்நாடென் றெண்ணிப் பாராய்;
எழில்கூட்டும் உன் நாட்டை மீட்கப் பாராய்!

பறவையினம் கூடுவிட்டே இரையைத் தேடப்
பலவிடங்கள் சென்றாலும் கூட்டை நோக்கிப்
பறந்தேகி வந்துவிடும்; மாலைப் போழ்தில்!
பகுத்தாய்ந்தே இந்நிலையை எண்ணிப் பாரீர்!
பிறநாடுசென்றதிலே தவறே யில்லை;
பெரும்பொருளை ஈட்டுவதும் குற்ற மில்லை;
மறந்தேவுன் தாய்நாட்டை ஒதுக்கி விட்டு
மாற்றிடத்தில் மூழ்கியுமே, கிடக்க லாமோ?

உனக்கென்றே நாடுமொழி இருக்கும் போழ்தோ
உலகத்தில் நாடோடி வாழ்க்கை யேனோ?
மனக்குமுறல் கிஞ்சிற்றும் உனக்கி லையோ?
மறந்தேவுன் நாடுவிட்டே வாழ லென்னே?

திணைத்துணையும் நாடுமொழி மறந்தி டாதே;
திரும்பியுன்றன் தாய்நாடு சென்று வாழ்வாய்!
மனத்தூறும் அயல்நாட்டு மோக முன்னை
மயக்கியுமே பாழடிக்கும் மயங்கி டாதே!

முத்தனைய புதுயுகத்துத் தமிழா! நீயும்
முனைந்தெழுந்தே தமிழ்வீரம் கொள்வாய்; நன்றே!
எத்தனைநாள் வாழ்ந்திங்கே இருக்கப் போறாய்?
ஏன்தயக்கம்? உன்நாடு உனக்குத் தானே!
கத்துகடல் சூழ்வளமை கொண்ட நாடு;
கவிஞரெலாம் பாராட்டிப் போற்றும் நாடு;
எத்துணையோ செல்வவளம் கொழிக்கும் நாடு;
எழில்கூட்டி மகிழ்விக்கும் உனது நாடு!

ஆண்டஇனம் நீயன்றோ? உனக்கென் றேஓர்
அழகுதமிழ் நாடிருக்க வேண்டாம் கொல்லோ?
ஈண்டுபணம் ஈட்டியுமே செழித்தே ஓங்கி
இங்குள்ள பண்பாட்டில் மூழ்கல் நன்றோ?
மூண்டெழுவாய் உன்நாட்டுப் பற்றி னோடே;
மூழ்கியுமே அயல்நாட்டில் புதைந்தி டாதே!
மாண்புறும்உன் திருநாட்டை மீட்ப தற்கே
மாண்டவுயிர் எத்தனைபேர்? உணர்ந்து பாராய்!

புதுயுகத்துத் தமிழரெல்லாம் மொழிம றந்தால்
புகட்டியுமே தமிழுணர்வை ஊட்ட வேண்டும்;
புதுயுகத்தில் திளைக்கின்ற தமிழ ருக்குப்
புலம்பெயர்ந்த அவலத்தை உரைக்க வேண்டும்;
புதுமோகம் கொண்டலையும் இளைஞர் தம்மைப்
புத்துணர்ச்சி ஊட்டியுமே எழுப்ப வேண்டும்;
கதைகதையாய்த் தமிழ்வீரம் எடுத்துச் சொல்லிக்
கனன்றெழவே செய்திடுதல் கடமை யாகும்!

*நேரிசை வெண்பா*

தமிழா! விழித்தெழு; தாய்நாட்டுப் பற்றை
இமியள வேனும் இழந்து - குமைந்திடாதே!
உன்நாடு சென்றே உனக்கென ஓரிடம்கொள்;
நன்றே பெறுவாய்; நலம்!



## 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
## (ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 3)

-புதுமைக் கவிஞர் ப. சங்கரலிங்கனார்

*(குறட்டாழிசை)*

புதியதோர் உலகத்தைக் காண்போம்! அங்கே
புதுமைகள் படைத்திடுவோம்! ஒன்றாய் நிற்போம்!
புதியதோர் சிந்தனைகள்! எண்ணந் தன்னைப்
புவிபோற்ற புலமையினால் முன்னே வைப்போம்!

அன்பதனால் பண்பதனால் தொண்டு தன்னால்
அகிலத்தை ஒன்றாக்கி இணைந்து வாழ்வோம்!
நன்றினையே நலத்தினையே முந்திச் செய்து
நாமெல்லாம் ஓர்தாயின் மக்க ளென்போம்!

மொழியதுவே விழியாகும்! வழியாகும்! வாழ்வாம்!
மொழிவாழின் நாம்வாழ்வோம்! வளர்வோம்! தங்கள்
மொழியினால் உருசியர்கள் சப்பான் நாட்டோர்
முன்னேற்றம் மிகக்கண்டார்! உலக ரங்கில்!

நம்மொழியாம் செம்மொழியாம் தமிழை இந்த
நானிலமே அறிந்திடவே செய்வோம் நாளும்!
செம்மைமிகு தொகைஎட்டுப் பத்துப் பாட்டுச்
சிறப்பனைத்தும் பிறமொழியில் வரைந்து சொல்வோம்!

உலகத்துப் பொதுமறையாம் குறளின் சீரை
ஒப்பில்லாக் காப்பியரின் நெறியை நீண்ட
நிலமெல்லாம் வலம்வந்த தமிழர் பண்பை
நிலவெனவே ஒளிசிந்திக் காட்டி நிற்போம்!

தித்திக்கும் நந்தமிழின் செழுமை தன்னைத்
தேன்நுகரும் வண்டுகளாய் நுகர்வோம்! பின்னர்த்
திக்கெட்டும் சென்றிடுவோம்! அங்குள் ளோர்க்கே
தமிழ்த்திறத்தை அவர்விரும்பச் செய்வோம் வாரீர்!

அத்திக்கின் அம்மொழியின் சீர்கள் தம்மை
அருந்தமிழில் அனைவருமே அறியும் வண்ணம்
வித்தகநல் படங்களுடன் விளக்கம் கூட்டி
வீதியெலாம் தமிழ்மணக்கச் செய்வோம் நன்கே!

இந்நாட்டைப் பொன்னாடாய் மாற்றக் காலம்
 எதிர்நோக்கி நிற்கின்ற இளைஞர் நெஞ்சில்
இந்நாட்டுப் பற்றதனை மொழியின் சீர்மை
 எடுத்தியம்பி அச்செழுத்தாய்ப் பதியச் செய்வோம்!

இந்நாட்டை இமைபோன்றே காக்கும் பண்பை
 இன்னமிழ்தாய் அவருளத்தே ஊட்டி நிற்போம்!
இந்நாட்டில் எழிற்றமிழே எல்லா மாக
 இனித்திடவே கனிச்சாறாய்ச் செய்வோம் இன்றே?

ஆட்சிமொழி அலுவலக மொழிகள்! ஆளும்
 அருந்தொழில்கள் பயிற்றுமொழி தமிழாய்க் காண்போம்!
ஓட்சுகின்ற வழக்குமன்றம் சட்டம் எல்லாம்
 ஒண்டமிழால் பாமரரும் அறியச் செய்வோம்!

நாட்டாட்கள் நற்றமிழில் எழுதச் செய்வோம்!
 நறுந்தமிழர் நலம்பேணி உழைக்கச் செய்வோம்!
காட்சிநிறை தொலைக்காட்சி திரைப்ப டங்கள்
 கருத்துமேடை இசையெல்லாம் தமிழாய்க் காண்போம்!

தமிழ்நாட்டு வீட்டிலெல்லாம் தமிழைக் கேட்போம்!
 தமிழவனின் பேரெல்லாம் தமிழாய்க் காண்போம்!
தமிழனவன் தெருவெங்கும் வணிக மன்றில்
 தமிழ்த்தாயே திருநடமே புரியக் காண்போம்!

தமிழ்வாழ இனம்வாழ வழிகள் கண்ட
 தக்கோர்க்கே சிலைவடிப்போம்! கோயில் காண்போம்!
தமிழ்விழாக்கள் நாள்தோறும் எடுப்போம்! போற்றித்
 தக்கவண்ணம் அவர்வழியில் நிற்போம்! வாழ்வோம்!

தமிழரெல்லாம் மணம்பெறவே மகிழ்ச்சி பூக்கத்
 தம்முயிராய் அன்னவரைப் போற்றிக் காப்போம்!
தமிழுக்குத் தமிழனுக்குத் தீங்கு என்றால்
 தலைதனையும் கொடுத்திட்டுக் காப்போம் முந்தி!

தமிழினமே! உலகாண்ட மரபே! பண்பே!
 திரும்பிடுவாய்! எழும்பிடுவாய்! ஒன்று சேர்வாய்!
தமிழ்வளர்ப்போம்! தாய்காப்போம்! விழியைக் காப்போம்!
 தாரணியில் முன்னிற்போம்! உலகில் வெல்வோம்!



2–ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 4)

- ஜீ. மஞ்சுளா

தமிழா எனக்கு ஒரு கனவு இருக்கிறது!
கனவின் வெளிச்சமாய்
ஒரு கவிதையும் பிறக்கிறது!
புது யுகமா?
அது என்னவென்று ஒரு வினாவும் பிறக்கிறது!
தமிழா, இப்போது நாம் இருப்பது எந்த யுகத்தில்?
வினா வலுக்கிறது!

பல்லாயிரம் கோடி மணித்துளிகள்
கடந்து வந்த தமிழ்ப் பாதையை
எக்கால நுண்நோக்கியால் ஆராய்வது?

யுகங்களின் வரலாறுகள்
மண்ணில் புதைந்து கிடக்கின்றன!
கண்ணுக்குத் தென்படும் நட்சத்திரங்களாய்
அஃது ஆராயப்படுகின்றது!

நேற்றுப் பிறந்த குழந்தையாய்த்
தமிழ்ச் சந்தங்கள் சப்தமிட்டு அழுகின்றன!
மழலைத் தாலாட்டில் மகிழ்ந்துபோய்த்
தமிழ்மணம் இன்று தனியாய் உறங்குகின்றது!

தமிழைத் தாலாட்டி, சீராட்டி, பாராட்டி,
வளர்த்தவர் யாவரும்
எங்குப் போய்விட்டார்கள்?

ஓ! அதன் குழந்தைப் பருவம் முடிந்தவுடன்
அவர்களின் கடமையும் முடிந்துவிட்டதோ?
ஆம், அவர்களின் கனவுக்கு
அன்று அவள் குழந்தைதான்!
தமிழா, இன்று அவள் தேடுவது?
ஜதியோடும், தாளத்தோடும், நடைபயின்று நடைபயின்று,
அவளுக்கும் அலுத்துவிட்டது.

அவள் தோழமைக்குக் கைகுலுக்க,
உங்கள் தோள் சுமந்த சுவடிகளைக்
கொஞ்சம் இறக்கி வையுங்கள்.

வாட்போரும், விற்போரும்
காலாவதியாகிவிட்ட பிறகு
வேண்டாத சொற்போர் எதற்கு?

புதுக் கவிதையை மறுப்போரும்
செல்லரித்த வார்த்தைகளையே
செக்கிழுப்போரும்
புதிய வார்த்தைக் கிரணங்களின் பிரகாசத்தில்
தங்கள் பழைய ரணங்களைக்
கொஞ்சம் ஆற்றுப்படுத்தட்டும்!

யுகங்களின் வேர்கள்
மண்ணுக்குள் மறைந்திருப்பது
அந்த விருட்சத்தைத் தாங்குவதற்குத் தானே!

எங்களுக்கு வேண்டுவது
விருட்சத்தின் நிழல் மட்டுமே!

நாற்றங்காலை ஊன்றி விட்டவர்கள்
பயிர் விளையக் காத்திருக்கிறார்கள்
அமோக விளைச்சலாய்த் தமிழின் சொற்கள்.



**2–ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004**
**(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 5)**

- எல். ஆறுமுகம்

என்அத்தான், ஏதோதான் சிந்தனையாய்
இருந்திட்டார்; தூவல்,தாள் கைக்கொண் டே!நான்
''என்னஅத்தான் தீவிரசிந் தனையில் உள்ளீர்!
இயம்பிடுக!'' என்று,அவரின் தோளைத் தொட்டேன்!
தன்கண்ணை உயர்த்தி,எனை அவரும் பார்த்தார்!
''தமிழர்களின் எதிர்கால நிலையை என்றன்
உன்னெஞ்சில் ஓடவிட்டுப் பார்க்கின் றேன்!அவ்
வொளிமயத்தில் மூழ்கி, மகிழ்கின்றேன்!'' என்றார்!

''அப்படியா! அடடா,அத் தான்எ னக்கும்
அவ்வரிய காட்சிதனை விளக்க மாகச்
செப்பிடுவீர்! செவ்வியலாள் நானும் அந்தச்
சீர்க்காட்சி தனைஎன்றன் மனக்கண் கொண்டே
அப்படியே பார்க்கமிக ஆவல் கொண்டேன்!
அத்தான்,வாய் திறந்திடுவீர்!'' என்று கூறி
அப்படியே அவர்மார்பில் தஞ்சம் ஆனேன்!
அகல்விழியை உயர்த்திட்டே கெ(ா)ஞ்ச லானேன்!

''கண்ணே,என் கண்மணியே! புதுயு கத்தில்
கனித்தமிழர் உலகெங்கும் கெ(ா)டிசெ லுத்திக்
கண்ணேறு படுமாறு தமிழி னத்தைக்
காணியிலே முதலிடத்தில் நிலைநி றுத்திப்
'பண்பாடு' மாறாமல் பரவ லாகப்
பல்வேறு துறைகளிலும் புதுமை (ெ)க(ா)ண்டு
'பண்,பாடிப்' பேரின்பில் திளைப்பர்! அந்தப்
பயன்பாட்டைக் கேள்!''என்றே செப்ப லானார்.

''உலகரங்கில் கணினியிலே ஓங்கி நிற்கும்
உயர்தமிழர், புதுயுகத்தில் மேலும் ஓங்கிப்
பலமாற்றங் கள்செய்வர்! அதனால் பாரோர்
பார்வையிலே நம்தமிழர் முதன்மை யாவர்!
நலக்கருத்து விளக்கங்கள் அதிலே கேட்க,
நாடெல்லாம் நம்தமிழர் கதவைத் தட்டும்!
வலம்வருவர் தினந்தோறும் உலகைச் சுற்றி,
வாழ்தமிழர் கணினியுக வேந்த ராலே!

தொலைத் தொடர்பில் சாதனைகள் பலஉண் டாகும்!
தூரங்கள் மிகச்சுருங்கும்! தமிழர் கற்ற
கலைகளினால் காணியெங்கும் புதுமை ஓங்கும்!
கையடக்க ''செல்பேசி'' பரவி, எங்கும்
விலைமலிவாய்த் தாம்கிடைக்கும்! கணினி தன்னை
வீழ்த்தும்இது! வேண்டுவன எல்லாம் நல்கும்
நிலையிலிதன் உருவாக்கம் அமைந்தி ருக்கும்!
நேரொன்றுள் நூறென்றே இதன்பே ராகும்!

எடுத்துக்காட் டாக,இதில் உள்ள பொத்தான்
இயக்கத்தில் ஒன்றைநாம் அழுத்திக் கையில்
உடும்பெனவே பிடித்துக்கொள் வோம்என் றிட்டால்,
உடனேநாம் கரைந்திடுவோம் காற்றில்! மீண்டும்
திடுதிப்பென் றேஇருப்போம் இலண்டன் தன்னில்,
திகழுருவம் பழையபடி நாமும் கொண்டே!
நெடுமதியர் நம்முன்னோர் கற்றி ருந்த
நேர்மாய வித்தைகள்போல் இதுந டக்கும்!

தரைமீதில் வாகனங்கள் சென்ற தென்றால்,
தரணியிலே புதுயுகத்தார் நம்ப மாட்டார்!
விரைந்திட்டே விண்வெளியில் வாக னங்கள்
வெகுவாகத் தாம்பறக்கும்; இங்கும், அங்கும்!
வரையின்றி ஓடும்,அவை எவ்வி டத்தும்
வந்துமோதிக் கொள்ளாத வகையிற் செல்லும்!
திரைகடல்கள் அருங்காட்சி யகமாய்த் தோன்றும்,
திகழ்மலைகள் மண்குமிழ்க ளாகத் தோன்றும்.

சங்ககாலக் கணியன்பூங் குன்ற னாரும்
சரியாய்த்தான் கண்டுரைத்தார், ''யாதும் ஊரே!''
இங்குலகில் ''யாவரும்''நம் ''கேளிர்'' என்னும்
எழிற்பாடல்! எனநாமும் வியக்கும் வண்ணம்,
பொங்கியிந்நாள் உளசாதி மதங்க ளெல்லாம்
பொக்கென்றே புதுயுகத்தில் போகும்! சாகும்!
எங்கெங்கும் ''மனிதசாதி'' ஒன்றே என்னும்
மாற்றங்கள் வாய்த்துவிடும் தமிழ ராலே!

பலகோள்கள் தமைஆயும் அறிஞ ருள்ளே
பகர்தமிழ ரேதலைமை யாய்,இ ருப்பர்!
நிலவுலகில் மட்டுமன்றி எந்தக் கோளில்
நிலைபெற்றி ருந்தாலும், அங்கெல் லாமும்
நலத்தமிழ ரே,இந்த நடப்பிற் கெல்லாம்
நனிமூலம் என,எவரும் போற்றி நிற்பர்!
உலகும்அறி வியலெல்லாம் தமிழர் தம்மின்
உயர்மூளை யாலேயே, என்பர் மக்கள்!

''நிலவுலகில்'' காப்பியினைக் குடித்து விட்டு,
நேர்இலண்டன் சென்று,சிற் றுண்டி உண்டு,
''நிலாவுலகில்'' பகலுணவை முடித்துக் கொண்டு,
நிம்மதியாய்ப் ''புதன்கோளில்'' சென்(று)உ றங்கி,
நிலவுமாலை வேளை''வெள்ளி''க் கோள டைந்து,
நிறைவியாழன் கோளினிலே இரவு தங்கி,
நலமுடனே மறுகாலை பூமி வந்து
நடப்புகளைத் தொடர்கின்ற மாயம் கூடும்!

இத்துறையில் நம்பிள்ளை ஒளிர வேண்டும்
எனறே,தீர் மானித்துக் கருவி லேயே
அத்தகைய உணர்வுகளை, ஆற்றல் தன்னை
அதற்களிக்கும் வசதி,வாய்ப்புப் புதுயு கத்தில்
மெத்தவேதான் அனைவர்க்கும் வாய்க்கும்! இந்த
மேலான ''அறிவுப்பு ரட்சி'' ஓங்க;
வித்தாகி விளைவாகித் தமிழ மாந்தர்
வெகுவாகப் பாராட்டு, பட்டம் கொள்வர்!



## 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 6)

- டாக்டர் பழனி இளங்கம்பன்

புண்ணியப் பூந்தமிழ்ப் பொற்குரல் எழுப்பிப்
புதுநடை பயில்வான் தமிழன்
புதுயுகத் தமிழன் பொற்பார் தமிழன்
பொதுமைத் தமிழன் ஆவான்.
மன்னிய புகழ்கொள் மாமறை திருக்குறள்
மணிக்கரம் அதனில் ஒளிர
மனம்சார் குறளின் மாணறம் யாவும்
மகிழும் வாழ்வில் மிளிர.

ஊனும் உயிரும் ஒண்டமிழ் என்றே
ஓயா தியங்கும் அவனோ
ஒவ்வொரு நொடியும் ஒண்டமிழ் ஓங்க
உலகப் பார்வையில் களிப்பான்.
வானின் விரிவை வாய்த்ததன் நெஞ்சின்
வளமை அதுவாய்க் காட்டி
வைய மதற்குப் புதுநெறி பழக்கும்
வரலா றதனைப் படைப்பான்.

விரும்பும் புதுப்புது துறைகளில் எல்லாம்
வெற்றிக் கொடியை நாட்டி
வியப்பின் விளிம்பில் எல்லையில் நின்றே
விளங்கப் போவதும் அவனே!
அரும்பும் நாளைய அறிவியல் உலகில்
ஆளப் போவதும் அவனே!
அகில மக்களின் அகத்தில் அன்பால்
அமரப் போவதும் அவனே!

யாதும் அவனூர் எவரும் உறவாம்
யாண்டும் செல்வான் அவனே
யாவையும் விளக்கும் திறனில் அவன்தமிழ்
யாவரையும் கவர் மொழியாம்.
ஓதும் அறிவியல் பிறயியல் அனைத்திலும்
உலகின் மொழி தமிழ்ஆக
ஒவ்வொரு தமிழனும் ஓரடி உயர்வான்
உண்மை ஆமிது உண்மை.

பார்வையில் விரிந்து பண்பினில் கவர்ந்து
பணிபுரி புதுயுகத் தமிழன்
பார்முழு தும்தமி ழகமாய் மாறப்
பாலம் அமைப்பான். எனவே
ஓர்குலைக் காயாய் உள்ள நற்றமிழர்
ஒற்றுமை பெரிதாம் என்றே
உலகம் ஓதும் விலகும் இருளே!
ஒளிர்வான் புதுயுகத் தமிழன்!



## 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 7)

- கவிமாமணி சி. **வீரபாண்டித் தென்னவன்**

உலகநாடு வரிசையிலே ஒருநாடாய்த் தமிழ்நாடும்
இலங்கிவரப் புதியநாட்டை இலெமூரியாப் பகுதியிலே
திலகமிடக் களமிறங்கித் துணிச்சலுடன் முழக்கமிடும்
பலம்நிறைந்த தமிழரவர் புதுயுகத்தின் தமிழினமே!

புலம்பெயர்ந்த தமிழருக்கும் புதியவாழ்க்கை ஒளியேற்றும்
நிலமாகத் தனைமாற்றி நிரந்தரமாய்க் குடியேற்றிக்
கலங்காமல் இருக்கவைக்கும் கவசமென உருவெடுக்கும்
பலம்நிறைந்த தமிழர்தாம் புதுயுகத்தின் தமிழினமே!

தாய்மொழியாம் தமிழ்மொழியைத் தனதுயிராய் மனமெழுதும்
வாய்மையுடன் இணைந்துவரும் வரலாறாய் நிறைந்துவரும்
தூய்மையுடன் குரல்கொடுக்கும் துடிப்புடனே விரல்சொடுக்கும்
சேய்கள்தாம் புதுயுகத்தின் செழிப்பான தமிழினமே!

அறிவியலின் அறிஞனாகி அறநெறியில் புனிதனாகிப்
பொறியியலில் புலவனாகிப் பொதுப்பணியின் திலகமாகி
நெறிமுறையின் ஒருவனாகி நியாயத்தின் மருகனாகிப்
பிறக்கின்ற அசல்வித்தே புதுயுகத்தின் தமிழினமே!

திசையெட்டும் வலம்வந்த திராவிடயாழ்ப் பாணனாக
விசையுற்று விழிப்புற்று வெளிப்பட்டு நிமிர்ந்திருக்கும்
தசைகறுத்த மெழுகுவத்தி தமிழினத்தின் புதுவிலாசம்
பசைத்தேக்கின் வலிமைகொண்ட புதுயுகத்தின் தமிழினமே!

வளரவரும் தமிழினமே வறுமையினி உனக்கில்லை
தளர்ந்தநிலை மறைந்துவிடும் தலைமைநிலை பிறந்துவிடும்
களமுன்றன் கரத்தினிலே கவனம்வை நிலத்தினிலே
வளமான புதுயுகத்தின் வருகைநீ மறவாதே!

அதிகாரம் விரைந்துன்னை அடையவரும் தடையின்றிச்
சதிகாரக் களைகளைந்தால் சரித்திரமுன் பெயர்சொல்லும்
புதுயுகத்தின் முதல்வனாகப் பொறித்திடுவாய் உனதுபெயர்
அதற்கின்றே விதைத்துவிடு அரும்பிவிடும் புதுயுகமே!

குலம்ஒன்று தமிழனென்று கரங்கோத்தால் அமுதமென்று
நிலம்போற்ற நிமிர்ந்துவிடு நெருங்கிவந்து வளர்ந்துவிடு
கலங்கரையாம் விளக்கம்நீ கடவுச்சீட் டிலக்கம்நீ
புலம்பெயர்ந்த தமிழருக்குப் புதுயுகமே உனதுவெற்றி!

சாதிமதப் பேதமின்றிச் சச்சரவு ஏதுமின்றி
வீதிகளில் மோதலின்றி வீசுகுண்டு ஓசையின்றிக்
காதுகளில் நல்லசெய்தி கேட்குமிந்த வருடத்தில்
பாதுகாப்பைப் பலப்படுத்து! புலருதுபார் புதுயுகமே!

அயல்நாட்டுக் கலாச்சாரம் அடியெடுத்து நடந்தாலும்
இயல்பான தமிழ்ப்பண்பு இமயமெனத் தலைநிமிர்ந்து
செயலாற்றும் சிறந்தோங்கும் சிறிதளவும் பயம்வேண்டாம்!
பெயக்கண்டும் நஞ்சுண்டார் பெயர்சொல்லும் குழந்தைகள்தாம்!

முகிலேறிப் பறந்தாலும் மழைநீரை மறவாமல்
தகுதியுடன் பிறந்தஇடம் தனைத்தேடி வருவதுபோல்
அகதியென்ற நிலைமாறி அனைவருமே வருவார்பார்
முகம்மலர்ந்து சுகம்நிறைய முளைக்குதுபார் புதுயுகமே!

கணினியிலே தமிழ்படிப்பார் குழந்தைகளும் அதைத்தொடர்வார்!
உணவுக்கே உழுதிடுவார் உழைப்பினையே வணங்கிடுவார்!
பணவீக்கம் அடையாத பொருளியலைக் கரம்பிடிப்பார்
குணக்குன்றாய்ப் புதுயுகத்தில் குடியிருப்பார் தமிழினமே!

பலமொழிகள் அறிந்தாலும் பயிற்றுமொழி தமிழிருக்கும்!
புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் பலருக்கும் இடம்கொடுக்கும்!
நலமருளும் திருநீறு நுதலினிலே நிறைந்திருக்கும்!
புலமைக்கு மதிப்பளிக்கும் புதுயுகத்தின் தமிழினமே!

விருந்தோம்பும் திறத்தாலே விடுதலையாம் பலத்தாலே
அருந்தமிழின் வளத்தாலே அயராத உழைப்பாலே
திருக்கோவில் பணியாலே தெளிவான நிலையாலே
பெருகுதுபார்! தமிழினமே புதுயுகத்தின் கரங்களிலே!

அறநெறிகள் அணிவகுக்க அறியாமைப் பிணிமறையச்
சிறப்பீனும் செயல்நிறையச் சிரித்தமுகச் சுகம்மலரப்
புறச்சூழல் தனைக்காக்கும் பொறுப்பாலே நலம்பெருகப்
பிறக்குதடா புதுயுகமே பறக்குதடா தமிழ்க்கொடியே!

## 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
### (ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 8)

- மட்டுவில் ஞானக்குமரன்

வையகமே உன் பேனாவை எடுத்தே
பதிந்து கொள்.
உனது காலப் பதிவேட்டிலே தமிழன் இனத்தை...!

கை குறுகி
மெய் கூனிய இனத்தின் இருள் மேகம் கிழிக்கப்
பெய்தது விழிப்பு எனும் பெரு மழை...!

உள்ள துறை எல்லாவற்றிலுமே
முத்திரை பதிக்கிறது தமிழன் இனம்

இவன் இல்லாத ஒரு துறையே இங்கே
இல்லாமல் இருந்தது...?

வான முகட்டிலும் பூமித் தகட்டிலும்
பொறிக்கப்பட்டுவிட்டது இவர்கள் பெருமை...!

கடவுளாலும் காக்க முடியாது
என ஏங்கியபோது
இப்படி எழுச்சி பெறுவர் இவர் என
எவர்தாம் நினைத்தார்?

அகலத்திலே தள்ளப்பட்டவர்களின்
கொடியோ இப்போ சிகரத்திலே!

தமிழனின் வேதனைகளே
இந்தச் சாதனைகளுக்குப் பசலையாகின...!
கங்கை கொண்டு
கடாரம் வென்றவனின் சந்ததியா
ஆரியமெனும்
கிடாரத்துள்ளே கவிழ்ந்து கிடந்தது...?

எங்கள் முன்னோர்களும் அங்கே செக்கிழுத்தார்கள்
சிறை சென்றார்கள்
பணிய மறுத்தே தூக்கையும் ஏற்றார்கள்.

பின்னை வந்தவனும் நீரும் அருந்தாமல் செத்தான்
நஞ்சை விழுங்கினான்.
உச்ச பட்சமாய் உடலையே
வெடியாக்கினான் ஈழத்திலே...!

தங்கள் உடலெனும் உளி கொண்டு
தமிழிற்குச் சிலை செதுக்கினர்.

இணைய தளத்திலே முதல் மொழியாகவும்
பண்பட்ட ஒரே மொழியாகவும் உயர்ந்த தமிழ்
சர்வதேச மொழியாகிப் போனது.

அதோ பத்தாவது உலகச் சாதனைக்காக
ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறான் ஒரு தமிழன்.

வானம் வசப்படுகிறது
ஆழ்கடலிலும் சோழன் காலத்தைப் போலவே
அதோ எங்கள் கப்பல்கள்...

எல்லாத் துறைகளிலுமே
அடக்குமுறை உடைத்துக்
குன்றென எழுந்தான் சாம்பல் மேட்டிலிருந்து
பீனிக்ஸ் பறவையாகத் தமிழன்.

மேகம் கிழித்த கதிர் போலே
மண்ணிலே வந்துதித்தான்
தமிழுக்கு ஒரு படைத் தலைவன்!
படைத்தலைவன் மட்டுமா?
பாட்டுடைத் தலைவனுமாய்ப் பிரபாகரன்...!

விண் வெளியிலும் தமிழன் பெயர்
ஆகா வாழ்க அப்துல் கலாம்
உனக்குச் சலாம் நூறு.

முத்தையா நீ
விளையாட்டிலே காட்டுகிறாயே வித்தையை
உலகச் சாதனை
இன்னும் உன் தோளிலே!

விழ விழ
எழுந்த புது யுகத் தமிழனுக்கு
இனி விழ இருப்பதெல்லாம் வெற்றி எனும் மாலைகளே...!



## 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
### (ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 9)

-ஆதிசிவன்

சுதந்திரத் தமிழ்நாட்டில் வாழ்வார் - வெற்றிச்
சுடரொளிக் கொடியேற்றி ஆள்வார்!
இதந்தரும் அரசியல் படைப்பார் - என்றும்
இன்பநிலைப் பேற்றினை அடைவார்!

மதவெறி நிறவெறி ஒழிப்பார் - நல்ல
மனிதநேயப் பூக்களாய் விழிப்பார்!
புதுயுகத் தமிழரும் அவரே - நாளை
பூத்திடும் இமயமும் அவரே!

கோடிமக்கள் கூடிவாழச் செய்வார் - கோவில்
கோபுரமாய்த் தாம்நிமிர்ந்தே உய்வார்!
பாடுதமிழ்ச் சங்கமெங்கும் வைப்பார் - பழைய
பண்பாடு மாறாமல் நிற்பார்!

வாடிவரும் மக்களையும் காப்பார் - தானும்
வளருநிலை மாறாமல் பூப்பார்!
நாடுகளின் பட்டியலில் சேர்ந்தே - நற்றமிழ்
நாடென்று பேசவைப்பார் வாழ்ந்தே!

அடையாளத் தாய்மொழியில் நாளும் - நூற்கள்
ஆயிரமே செய்திடவே வாழும்!
கொடையான சான்றோரைப் போற்றி - உள்ள
குறையகற்றும் ஆய்வுகளை ஏற்று!

தடையின்றிப் புத்தகங்கள் தோன்றத் - தாயாம்
தமிழ்மொழிக்கு நல்விழுதாய் ஊன்ற!
உடையவராய் நற்பணிகள் செய்வார் - நாளை
உதிக்கின்ற புதுயுகத் தமிழர்!

உழைப்பாலே சப்பானாய் ஓங்கி - ஊறும்
ஊக்கத்தால் வாழ்த்துகள் வாங்கி!
பிழையில்லாப் பேறுபல தாங்கி - இந்தப்
பார்போற்றும் நல்லரசாய்த் தேங்கி!

அழைப்புகள் தேடிவரச் சென்று - அந்த
ஐ.நா.வில் முன்னுரிமை வென்று!
பழையதமிழ் வல்லரசாய் நின்று - நாளை
பெருகிடுவர் புதுயுகத் தமிழர்!

பிறமொழிகள் ஐந்தாறு கற்பார் - பெற்ற
பைந்தமிழ் மறவாமல் நிற்பார்!
அறநெறி துறவாமல் செல்வார் - எந்த
அரட்டலுக்கும் அஞ்சாமல் வெல்வார்!

அறிவியல் பொறியியல் ஆள்வார் - என்றும்
அமைதிக்கு வித்தாக வாழ்வார்!
உறுதிக் கிலக்கணமாய் ஆவார் - நாளை
உதித்திடும் புதுயுகத் தமிழர்!

சமதர்மச் சிந்தனையைத் தேக்கி - பாழும்
சாதிபேதச் சாக்கடையைப் போக்கி!
சமுதாய வெற்றிதனைக் காண்பார் - பிரிக்கும்
சதியகற்றிச் சோதியாகும் மாண்பால்!

சமரென்றால் அஞ்சாத வீரர் - உலகச்
சரித்திரமாய் நிற்கின்ற தீரர்!
எமதருமை முன்னோர்கள் என்பார் - நாளை
எழுகின்ற புதுயுகத் தமிழர்!

சகலகலை வல்லவராய் வாழ்வார் - உலகச்
சரித்திரத்தில் முத்திரையைப் பொறிப்பார்!
சிகரங்கள் தாமென நிமிர்வார் - ஆளும்
சிம்மா சனத்திலே அமர்வார்!

முகவரி தமிழனென் றிருக்கும் - அந்த
முதல்நிலை விரைவிலே பிறக்கும்!
அகதியெனும் கண்ணீர் மறையும் - ஆளும்
அரசனெனும் நன்னிலை விடியும்!

மொழிவளத்தைக் காக்குமவர் மூச்சு - நல்ல
முத்தமிழைக் காட்டுமவர் பேச்சு!
தொழில்வளத்தைக் காட்டுமவர் தோற்றம் - வாழ்வில்
தூங்காமை சொல்லுமவர் ஏற்றம்!

விழிமகிழ்வில் இன்பநிலை துள்ளும் - நாளும்
வெற்றிவிழா நற்றொடராய்ச் செல்லும்!
எழுந்தது பாரீர் புதுயுகமே - அங்கே
இருப்பது பாரீர் தமிழினமே!



## 2–ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
## (ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 10)

-காசி பிச்சை

புதுயுகத் தமிழனே! புறப்படு! புறப்படு!
புரட்சிக்கு நேரம் இதுவன்றி வேறெது?
தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை தந்திடு!
தமிழ்த்தேச வரலாற்றில் புதுயுகம் படைத்திடு!

பிறந்தோம்! பெருஞ்செயல் புரிந்தோம்!
இறப்போம்! இறந்த பின்னும் வாழ்வோம்!
முத்தமிழ் நாட்டிற்கு மானம் பெரிதன்றி
மூச்சுப் பெரிதில்லை நன்குணர்வாய் தமிழ்மகனே!

தொடைநடுங்கி இருப்பவர்க்கு நொடிக்குநொடி சாவே
தோள்நடுங்கா துயிர்கொடுப்போர் அடைவதுமெய் வாழ்வே!
அடிமை விலங்கொடிக்க ஆர்த்தே எழுந்துவிடு!
ஆடுகள் இல்லிருக்கப் புலியாய்ப் பாய்ந்து எழு!

மொழியை அழிக்கமட்டும் முனைந்திடுவோர் தம்முயிரைக்
கழிவிரக்கம் கொள்ளாது களையாய் அழித்துவிடு!
வந்தாரை வரவேற்று வாழ்வளித்த தமிழ்மறவா
வந்தேறிக் கூட்டங்கள் அழித்தஉயிர் அறியலையோ?

செந்தாரைக் குருதியோடி மடிந்தார்கதை கேட்கலையோ?
செந்தீயில் சுட்டெரித்து வெந்தாரைக் காணலையோ?
கோவிலிலா ஊரில் குடியிருந்த தமிழர்களைக்
கழுவேற்றிக் கொன்றதற்குப் பழிவாங்கும் நாளிதுவே!

சூழ்ச்சி மொழிகட்கெல்லாம் உட்பொருளைக் கற்றபின்னும்
சோற்றுக்கோ வாழ்க்கை? பிள்ளைப் பேற்றுக்கோ வாழ்வு?
உறங்கிடும் கரும்புலியே சிலிர்த்தே எழுந்துவிடு!
மயங்கிய பாம்புநீ! சீறிப் பாய்ந்துவிடு!

களமிறங்கிப் போராடு; கவசமணிந்து போராடு!
கட்டுக் குச்சியாய்க் களமிறங்கு! ஒற்றைக் குச்சியாய்
உடைந்தது போதும்!
தலைவனைத் தேடித் தத்தளித்த காலம்போய்
தலைமகனாய் நின்று தகர்த்தெறிவாய்! உறுதிகொள்!

இனமும் மொழியும் இணையில்லாச் செல்வங்கள்!
இயன்றமட்டும் எடுத்தியம்பச் செய்துவிடு;
தேவையில்லாக் கடவுளரைத் தீக்குழிக்குள் வீழ்த்திவிடு;
சாதிகள் ஒழித்துவிடு! சமயங்கள் அழித்துவிடு!

பேதங்கள் நிறுத்தும் வேதங்கள் அழித்துவிடு;
ஆசாரச் சடங்குகள் அனைத்தையும் அழித்துவிடு;
வேரோடி நிற்கும் தீண்டாமை யொழித்துவிடு;
தடைகள் உடைத்துவிடு; மடமை யகற்றிவிடு!

புதுயுகத் தமிழா! தடை என்னடா தடை தடை?
உடைத்தெறி; அடிமைச் சங்கிலியை அறுத்தெறி!
உயிரை விடவா உடைமைகள் பெரிது?
உட்பகை அழித்திடு; நேர்பகை வென்றிடு!

ஈராயிரம் நரிகள் இணைந்தூளை யிட்டாலும்
ஓரரிமா தன்னின் உயர்முழக்கை வெல்வதில்லை!
தன்னுணர்ச்சி கெட்டழிந்த தாழ்ந்த தமிழ்க் குலத்தை
உன்றன் உயிரால் உயர்த்தி நிமிர்த்திவிடு!

சுட்டெரிக்கும் செஞ்சுடரே! அக்கினிக் குஞ்சுகளே!
வெட்டித் தலைகுவித்த வீரர்வழி வந்தவரே!
புறநானூறு பெற்றெடுத்த ஈழத்துப் புலிக்கூட்டம்
புதுயுகம் படைக்க எழும்புரட்சி மொட்டுகளே!

வீணர் இடும்பொடித்த வீரத்தாய்ப் பிள்ளைகளே!
வீண்பொழுதுக் கிடமில்லை வெட்டுண்ட வேங்கைநீ!
"செந்தமிழைத் தீர்ப்பாரைத் தீர்த்தல் முதல்வேலை
சிந்தட்டும் செங்குருதி ஆறு." உறுதிகொள்!

"செந்தமிழை, செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்.
வெந்தணல் ஒன்று விரைந்து வந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவும்" கரும்புலியே!

திட்டமிடு! நூறாண்டு வாழ்பவன்போல் திட்டமிடு!
செயலாக்கு! நாளைக்கே மடிபவன் போல் செயலாக்கு!
அன்னிய ஆதிக்கம் அழித்திடு நீயே
உன்னில் உயர்ந்தோர் ஒருவரும் இல்லை.



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 11)

-இ. அகன் (மி. அமலன்)

வாழ்க தாய்த்தமிழ்! வாழ்கவே தாயினம்!
வாழ்க பாரெலாம் வாழ்தமிழ் மாந்தரீ!
வாழ்வின் மாட்சியால் தாய்த்தமிழ்ச் சீர்த்தியைத்
தாழ்வு றாமலே காத்துநாம் போற்றுவோம்!

தமிழர் என்றமுன் மாண்பினம் நாமலோ?
தமிழ்நம் ஆருயிர்ச் சீர்வளர் தாயலோ?
தமிழில் வேறுசொல் சேர்ப்பதை நீக்கியே
நமது பேச்சிலும் ஏட்டிலுங் கொள்வமே!

பாரின் நாடெலாம் வாழ்தமிழ்ச் சுற்றமே
சீரின் வாழ்வினைத் தீதற ஆற்றுவோம்!
கூர்ந்த நுண்மதி, வீறுறு ஆற்றலும்
சேர்ந்து ஓங்கிடும் சீர்த்திகைக் கொள்வமே!

சூழ்ந்து கேடுசெய் புன்குலக் கேடுகள்
தாழ்வு மீவுறு பன்மத மூடமும்
வீழ்த்தி நாளுமே பேரற மாக்குறள்
வாழ்வுச் சீர்நெறி போற்றியே வாழ்வமே!

வாழும் நாட்டினை வாழ்கென வாழ்த்துவோம்!
ஆழ நன்றிமிக் கூர்வமே வாழ்வெலாம்!
வாழும் பேற்றினை ஈந்தஅந் நாட்டினர்
வாழ்க: வாழ்கெனப் போற்றுவோம் நாளுமே!

யாதும் ஊருமாய் யாவரும் சுற்றமாய்க்
காதல் கொண்டபூங் குன்றனார் போலவே...
ஏதும் உற்றிடாச் சீருற வாழ்வமே
சூதும், சூழ்ச்சியும், தீய்த்தற மோங்கவே!

வீர மாமுனி என்றஇத் தாலியர்
பாரின் முன்மொழித் தாய்த்தமிழ் நாடதில்
சீரின் முத்தமிழ் கற்றுநற் பாக்களால்
சீர்த்தி நூல்பல ஆக்கினார்; ஓர்வமே!

ஓங்கு கூரறி வோடரும் பல்கலை
வீங்கக் கற்பமே ஓங்கிசை கொள்வமே!
பாங்கு வாழ்வினால் வாழ்நில மாந்தரின்
ஓங்கு அன்பினைப் பெற்றுநாம் வாழ்வமே!

வாழும் நாடுள நம்தமிழ் மாந்தரை
வாழ்வு தாழ்விலும் தாங்குவோம் தோழரே!
காழ்ப்பும், சூழ்ச்சியும், ஆல்முனை யின்றியே
ஆழ்ந்த அன்பொடே வாழ்வமே தோழரே!

நமது தாய்நிலம், சுற்றமும் மேம்பட
நமது நற்பொருள் ஈந்துசி றப்பமே!
தமிழ்ம்மைச் சீரதன் ஒப்புர வாற்றியே
கமழும் பேர்புகழ் எய்துவோம் தோழரே!

"பெருமைக் குஞ்சிறு மைக்குமே நாம்செயும்
கரும மேஉரை கல்"எனத் தாய்த்தமிழ்
அரிய பேரறி வர்திரு வள்ளுவர்
உரைத்தல் கற்றறிந் தவ்வழி வாழ்வமே!

உலகின் நாடெலாம் முன்தமிழ் மாந்தரே
உலவி வாணிகம், போர்மறம் ஓங்கினர்!
விலக்கு சோம்பலை; வீறுறப் பாய்ந்தெழு!
நலமுற் றோங்குவோம் பல்துறை வல்லராய்!

கணினி, வானியல், ஆழ்கடல், பல்கலை
கணிதம், ஆய்ந்தறி வல்லுநர் ஆகுவோம்!
பணிகள் யாவிலும் நுண்ணறி வோங்கவே
அணிசெய் தால்பிறர் நம்வழி யாவரே!

உலகு எங்கணும் நாமுறை நாட்டினர்
நலமென் றேற்றிடும் பாங்குற வாழ்வமே!
உலகின் கூரறி வாளரே நாமறி!
புலரும் புத்துல கம்நம தாமறி!

புதுயு கம்புலர்ந் திட்டதே தோழரே;
அதுநம் கைகளுள் உள்ளதை ஓர்விரே!
எதுவும் கூரறி பண்பினால் வாய்க்குமே!
புதுயு கம்தமிழ்ப் பொற்புறும் காண்பமே!



2– ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 12)

-கே.பி. பத்மநாபன்

சிங்களத்தின் கடற்கரையில் பவனி வந்து
சீர்எகிப்து நதியோரம் அழகு செய்து
பங்கமில்லா கிரேக்கரோம சீன நாட்டில்
பண்டுமுதல் பண்டமாற்று யாரே செய்தார்?
வங்கத்தின் கடலோரம் வேர்பி டித்த
வையத்தின் தருநிழலாம் தமிழன் அன்றோ?
எங்கு(ம்)நிறை உயிர்வாயு போலே, என்றோ
இன்தமிழர் இவ்வுலகை அணைத்து நின்றார்.

வந்தவரை வரவேற்று வாழ்வ ளித்து
வாழ்ந்திட்ட நாடுகளின் வளம்பெ ருக்கிச்
சிந்தையினில் ஞானதீப ஒளியை ஏந்திச்
சென்றிட்ட இடமெங்கும் புகழைச் சேர்த்துச்
சொந்தமென அனைவரையும் கொண்ட·தாலே
சுற்றமது உலகமெலாம் என்றே வாழும்
செந்தமிழின் தவப்புதல்வர் செப்ப மிட்ட
சீரான வழியில்தான் ஞாலம் செல்லும்!

வள்ளுவனை வழிகாட்டி யாகக் கொண்டு
வாழ்கின்ற தமிழர்க்கு மாற்றம் இல்லை;
உள்ளுவதும் உரைப்பதுவும் உயர்ந்த தாக
உணர்ந்திட்ட தமிழ்நெஞ்சில் மாற்றம் ஏது?
முள்ளில்லா மலரான மனித நேயம்
முழுதாகக் கொண்டிட்ட தமிழர் நெஞ்சம்
எள்ளளவும் மாறாது என்றும், எங்கும்;
ஏனென்றால் தமிழன்தான் யுகத்தின் நாதன்!

அகவுகின்ற மயிலுக்குப் போர்வை ஈந்தும்
அசைந்தாடும் முல்லைக்குத் தேரை ஈந்தும்
சுகவீனப் புறாவுக்காய் உடலை ஈந்தும்
சுடர்விட்டார் மறத்தமிழர் அற்றை நாளில்;
அகலாது தமிழ்நெஞ்சின் மனித நேயம்;
ஆனதனால் அவர்க்கிந்த உலகின் மாற்றம்
அகன்றபெரு மலையாகத் தோன்றா தய்யா!
அன்பென்னும் கைப்பிடியில் அடக்கி வைப்பர்.

வாழநின்ற பயிரதனின் பசியு ணர்ந்த
வள்ளலார்தம் வழிவந்த தமிழ ரெல்லாம்
கூடியிங்குக் கைகொடுப்பர் பசிநோய் தீர;
குவலயத்தில் புதுயுகமே இவரால் மாறும்;
கோடிநன்மை கூடிவாழின் என்று ணர்ந்தோர்
கோடியிலே இருந்தாலென்? இடுக்கண் நீக்க
ஓடிவரும் உடுக்கையாக அவரி ருந்தால்
உலகத்தின் உருமாற்றம் அவர்தம் கையில்.

''அழிவுக்காய் அணுசக்தி'' என்னும் நாட்டை
அமைதிக்கா யென்றிங்கே மாற்றும் சக்தி,
அழியாத நிலைபற்றி அறிவு றுத்தும்
ஆன்மீகம் வளர்ந்திட்ட தமிழுக் குண்டு;
பழிக்கஞ்சாப் பாவங்கள் உலகில் செய்து
பாரதனை மாற்றிடவே நினைப்போர், நல்ல
வழிகாட்டும் தமிழினத்தைக் கண்டு விட்டால்
வழிதிருந்தி வாழ்ந்திடுவர்; மாற்றம் மாறும்.

மணித்துளிகள் நகர்வதிலும் மாற்றம் உண்டு;
மாதங்கள் நகர்வதிலும் மாற்றம் உண்டு;
கணினியதன் வேகத்திலும் ஓடும் காலம்;
கண்சிமிட்டும் நேரத்தில் உலகில் மாற்றம்;
அணிதிரளும் மாற்றங்கள் அகிலம் தன்னில்
அயராது நடந்தேறும்; உண்மை! ஆயின்,
பணிவாயம் மாற்றங்கள் தமிழர் பின்னால்
பதுங்கித்தான் நின்றுவிடும் புதுயு கத்தில்!

தீமைகளே நன்மைகளாய் மாறு தற்கும்,
தீயவர்கள் ஞானிகளாய் மாறு தற்கும்,
ஊமையராய் இருட்டினிலே ஒளிந்து நிற்கும்
உண்மைகளே சூரியனாய் மாறு தற்கும்,
ஆமைபோலப் பசிப்பிணிநோய் அடங்கு தற்கும்,
அகிலத்தில் சமதர்மம் ஒளிர்வ தற்கும்,
பூமியிலே புதுயுகத்தில், தமிழர் வேந்தர்;
புவியடக்கும் செங்கோல்தான் மனித நேயம்!



## 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 13)

-எஸ். பத்மநாபன்

புதுயுகத் தமிழன் தன்மேல் புனையொரு கவிதை என்று
கலியுகந் தன்னில் வாழும் கவிஞனின் காதில் சொன்னீர்!

வெந்ததைத் தின்று தீர்ப்போம் விதிவந்தால் செத்துப் போவோம்
கதியிங்குக் கடவுள் இல்லை கட்சியின் தலைவன் காப்பான்
நிதியில்லை என்பார்க் கெல்லாம் நீதியும் இல்லை யில்லை
மதியில்லை மானம் இல்லை மாற்றவோர் வழியும் இல்லை
விதியிதே என்று வாழும் வீணரின் கூட்டம் தன்னைத்
தமிழர்கள் கூட்டம் என்று தலைமீது தாங்கிப் பாட
அமிழ்தினும் இனிய மொழியை அடகுதான் வைப்பார் உண்டோ?

அறம்பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கும் வாழ்க்கை
அன்னை தந்தை ஆசான் இயற்கை ஆகிய நான்கும் தெய்வம்
சாதிகள் இரண்டு மட்டும் நீதிமுன் மகனும் கன்றே
நிச்சயம் நேர்மை வெல்லும் சத்தியம் நின்று காக்கும்
உயிரினும் மேலாம் தமிழே உறுதியாய் அதனைக் காப்போம்
என்றுதான் அன்று வாழ்ந்தார் இனிமையாய்த் தமிழர் எல்லாம்.

அண்டைநாட் டரசன் மீது ஆற்றொணாப் பகைதான் எனினும்
பெண்டிரில் சிறந்த ஔவை பேச்சினால் நட்புண் டாகும்
சண்டையில் பலரும் சாவார் சத்தியம் மட்டும் வாழும்
பண்டைய பெருமை எல்லாம் பகர்ந்திடின் பக்கம் போதா.

எந்தையும் தாயும் அன்று இருந்தவோர் தேசம் தன்னை
விந்தையாங் கதையைப் போல விருப்பமாய்க் கேட்டி ருப்பேன்
முந்தைநாள் அமைதி சாந்தம் முழுமையாய் அற்றுப் போகிச்
சந்தையின் இரைச்ச லைப்போல் சகலமும் விலைக்கே விற்கும்

மந்தைகொள் மாட்டி னம்போல் மனிதரும் மாறிப் போன
இந்தநாள் வாழ்க்கை மாறி எதிர்வரும் நாளி லேனும்
சிந்தையுள் சிறகடிக்கும் சிறந்த வோர்யுகம் மலரப்
புந்தையுள் நிறைந்தி ருக்கும் (சிவ)புத்தி ரன்பதம் தொழுவோம்

கானிலும் கடலிலும் கரைகடந் திருந்திட் டாலும்
மேனியில் மெலிய தாமோர் வேற்றுமை தெரிந்திட் டாலும்
தேனினும் இனிய தாமோர் செந்தமிழ் பேசு கின்றோர்
ஊனிலும் உயிரிலுமோர் ஒற்றுமை வளரக் காண்போம்.

விண்ணிலே சீறிப் பாயும் விரைவான ஊர்தி செய்வோம்
கண்ணிலே ஊறிப் பாயும் கருணையும் மிகவே கொள்வோம்
மண்ணிலே மனித நேயம் மறுபடி செழிக்கச் செய்வோம்
பண்ணிலே கீதம் பாடிப் பக்தியும் மிகவே கொள்வோம்

எண்ணிலே எழுத்தி லேநல் இலக்கியம் படைத்து வைப்போம்
பெண்ணினை பெருமைசெய் சட்டங்கள் இயற்றிக் காப்போம்
திண்ணெனத் தினவெடுக்கும் தோள்வலி பெருக்கிட் டாலும்
தண்ணெனக் குளிர்ச்சி யூட்டும் தருமங்கள் காத்து நிற்போம்!

*(வேறு)*

தானியம் தானம்பொருள் தகுந்தநற் கல்வி
மேனியை உறுதிசெய் மெல்லிய நல்வீரம்
வானினை வெற்றிகொள் வல்லியநல் அறிவு
தேனினை ஒத்தசீர் தெள்ளிய நற்குணங்கள்
கோனினைத் தந்துஇவ் உலகாளும் ஆண்மை.

காவெனக் கடவுள் கால் கவ்விடும் ஞானம்
சீவனை முக்திகொள் சிறப்பான மோனம்
போவன யாதெனினும் பொங்காத நெஞ்சம்
கோவெனத் தேவரும் குடிகொள்ளும் யாக்கை
பாவனை யில்லாநீர் பளிங்கென வாழ்க்கை
ஆவன அனைத்தும் அரும்பிடின் புதுயுகமே!

அழிகின்ற உடல்மீது அளவான பற்றுடனே
கழிகின்ற நாள்களிலே கடமை மிகக்கொண்டு
குழிதோண்டிப் பிறர்காலைப் பழிதீர்க்கும் குணம்நீக்கிப்
பழிதீண்டும் நடைமுறைகள் பயந்துமிகத் தினம்நீக்கிப்
பொழிகின்ற வான்மழைபோல் உலகுக்கே பயனதுவாய்ச்
செழிக்கின்ற தமிழ்பேசிச் சிறப்பாக அதைவ ளர்த்தால்
விழிக்கின்ற கண்ணெதிரே செழிக்கவரும் புதுயுகமே!



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 14)

-உதயை மு. வீரையன்

சங்ககாலம் பற்றியேநாம் பேசப் பேசச்
சலிப்படைந்து போவதில்லை! அதுதான் நந்தம்
தங்ககாலம்! தமிழர்களின் தந்தை காலம்!
தரணியெலாம் வியக்கின்ற தமிழர் காலம்!
திங்களொடு செழும்பரிதி கதிர்க ளோடு
செந்தமிழும் பழமைக்கும் பழமை யாகும்;
மங்காமல் மறையாமல் வாழ்வ தற்கு
மனிதகுல வரலாறு பாட மாகும்!

பாடங்கள் மறக்காமல் இருக்க வேண்டும்;
பண்பாடும் இழக்காமல் காக்க வேண்டும்;
ஊடகங்கள் வளர்ந்தாலும் அதனால் கெட்ட
ஊழல்கள் மலிந்தாலும் தடுக்க வேண்டும்;
தேடல்கள் இல்லாமல் வாழ்க்கை யில்லை;
திட்டங்கள் இல்லாமல் வளர்ச்சி ஏது?
ஆடல்கள் பாடல்கள் தமிழர் வாழ்க்கை!
அத்தனையும் வரலாற்றுப் பக்க மாகும்.

வரலாற்றுப் பக்கங்கள் சொல்வ தெல்லாம்
வரவேற்கக் காத்திருக்கும் இந்த வையம்!
உரமாக நாகரிகம் வளர்த்த வர்நாம்;
உலகமே வாய்பிளந்து வியந்த வர்நாம்;
இரவுக்கு நிலவாக வாழ்ந்த வர்நாம்;
இடிவீழ்ந்த மரமாகத் தாழ்ந்த வர்நாம்;
மரமாக இருந்தாலும் நிழலே தந்தார்;
மறையாக இருந்தாலும் அறமே தந்தார்!

அறவாழ்க்கை தமிழர்களின் அன்பு வாழ்க்கை;
அறம்பொருளே இன்பமென வாழ்ந்த வாழ்க்கை;
நிறைவாழ்க்கை தமிழர்களின் நேச வாழ்க்கை;
நெடுங்காலம் வாழ்கின்ற குறளின் வாழ்க்கை;
நிறம்எட்டும் வெண்மையிலே அடக்க மாகும்;
நெறியனைத்தும் பெண்மையிலே தொடக்க மாகும்;
புறம்சொல்லும் வீரத்தின் சொந்தக் காரன்;
புகழ்பெற்ற அகம்சொல்லும் விந்தைக் காரன்!

விந்தைகளோ ஏழென்று சொல்லு கின்றார்;
விரிவாகச் சிந்தித்தால் பிழையே யாகும்;
சிந்தைக்கே எட்டாத காலம் தொட்டுச்
செம்மொழியாய் வளர்ந்தோங்கி இன்று வாழும்
செந்தமிழே ஒருபெரிய விந்தை தானே!
சீர்தூக்கிப் பார்த்தாலே புரியும் ஆமாம்;
முந்தையோர் பாதையிலே முன்னே செல்வோம்;
முற்போக்குப் புதியயுகம் படைப்போம் வாரீர்!

படைப்பாற்றல் பெற்றவர்கள் தமிழர் என்று
பனுவல்கள் சான்றுகளாய் எழுந்து நிற்கும்;
கடல்கடந்து வெற்றிகளைக் குவித்த வர்கள்;
கலைகளிலும் பண்பாட்டை விதைத்த வர்கள்;
உடல்பொருளை ஆவியினைக் கொடுத்த வர்கள்;
உண்மைக்கும் உயர்வுக்கும் உழைத்த வர்கள்;
கொடைவள்ளல் படைவீரர் காலம் போலக்
கொதித்தெழுவோம் புதியயுகம் காண்போம் வாரீர்!

கண்ணாலே காண்பதெல்லாம் உண்மை யாமோ?
கரத்தாலே ஆய்ந்ததெலாம் பொய்மை யாமோ?
விண்ணையும் மண்ணையும் இணைக்கும் காலம்
விடிகிறது புதியயுகம் தமிழர் கட்கு!
எண்ணங்கள் செயலாகும்; எழுச்சி கொள்வோம்;
ஏக்கங்கள் தீர்ந்துவிடும்; இனிமேல் வெல்வோம்;
மண்ணாளப் பிறந்தவனே! மயக்கம் வேண்டாம்;
மறுபடியும் புதியயுகத் தமிழர் ஆவோம்!



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 15)

- பாவரிமா இளஞ்சித்திரன்

அடடா! எனஎன எழுந்தார்தமிழ் இனமாய்உயர்ந் திணைந்தார்
அவர்தாய்த்தமிழ் மொழிமீதினில் உயிராய்ப்பிறந் திருப்பார்!
கெடவா?எனச் சினந்தார்; ஒரு படையாயவர் திரண்டார்!
கிளர்ந்தார்; அணி அணியாய்க்களம் விரைந்தார்; முகம் சிவந்தார்!
எடடா! எனத் தொடுத்தார் கணை! முடித்தார்பகை அழித்தார்!
இனியார்?எவர்? வெல்வாரிலை! நெடுந்தோள்தலை நிமிர்ந்தார்!
நடடா! என நடந்தார்!தமிழ் நில ஆளுகை அளந்தார்!
நமையாள்தமிழ்க் கொடிஏந்தியே உலகாளவும் நின்றார்!

படைத்தார்தமிழ் நிலஆட்சியை; கொடிகோட்டையைக் கண்டார்!
பழம்பேரினம், முதல்தாயினம்; குடிவாழ்வினைக் கொண்டார்!
துடைத்தார்பழி; மனுபார்ப்பனன் நெறியாவையும் தீய்த்தார்!
தொடுவான்புகழ் குறள்நூலறம் கோலோச்சிட வைத்தார்!
உடைத்தாரிழி, பிரிவாயிரம் உளச்சாதிகள் மாய்த்தார்!
உணர்வாலொரு குலமாயினர்; தமிழ்ச்சாதியாய் மலர்ந்தார்!
புடைத்தார்;தனித் தமிழ்வாழ்வினைக் கெடுத்தார்தமைக் கெடுத்தார்!
புகழோங்கிட, பொருளோங்கிடப் புலர்காலையாய் விடிந்தார்!

பெயர்தூய்தமிழ்; நடைதூய்தமிழ்; பெருவாழ்வினில் - பேச்சில்
பிழையேஇலா, கலப்பேஇலா அமிழ்தாம்தமிழ் இருக்கும்!
உயர்வாயதை, உயிர்மானமாய் மிகப்போற்றவும் ஆனார்!
ஒருபேறென நினைத்தாரதைத் திருக்கோயிலாய் வைத்தார்!
இயல்நாடகம் இசையோடிரும் தமிழ்த்தாயினை வணங்கும்
எழில்மாந்தராய், தமிழ்நேயராய் முகம்தோன்றிட விழைந்தார்!
அயலாகியர் தொழிமாயையை அறவே ஒழித்திட்டார்!
அவர்தூய்த்தமிழ்த் திருவாயினில் தமிழ்பார்த்திருப் போமே!

*(வேறு)*

எத்தனை எத்தனை கலைகள் இருக்கும்?
இருக்கும் அறிவியல் துறைகள் எத்தனை?
புத்தம் புதிய நுட்பம் எத்தனை?
பொதுவிலொவ் வொன்றிலும் எத்தனை ஒட்பம்?

எத்தனை விரிந்த வானம்? அண்டம்?
　　எத்தனை கோள்கள்? கதிர்கள்? நிலவுகள்?
அத்தனை யையுமே தமிழில் படிப்பர்!
　　அன்னைத் தமிழில் புதிதை வடிப்பர்!

உலகம் இவரின் அறிவை நாடும்;
　　ஓடிவந் ததற்கு வாசல் நிற்கும்!
நிலவும் இயற்கைக் கூறுகள் சொல்லும்
　　நேர்த்தி, மெய்ம்மம் யாவையும் படிக்கும்!
நிலமும், நீரும், நெருப்பும், காற்றும்
　　நேரிவர் இட்ட ஆணையைக் கேட்கும்!
நலமே எங்குஞ் செழிக்க இருக்கும்!
　　நன்றிவர் மடியில் உலகம் சிரிக்கும்!

எட்டுத் திசையும் இவர்வசம் ஆகும்;
　　இயற்கை யாவும் இவர்கை அடங்கும்!
வெட்டும் மின்னல், இடியும் ஒடுங்கும்!
　　விரலசை விற்குப் புயலும் பணியும்!
கொட்டும் மழையும் முறையாய்க் கொட்டும்!
　　குளிரும், வெயிலும் தேவைக் கிருக்கும்!
எட்டி உதைப்பார்; நோயை மடிப்பார்!
　　இறவா மருந்தையும் கண்டு தருவார்!

வள்ளுவம் வழியில் மாந்தம் நடக்கும்;
　　வையம் பிறக்கும்! அமைதி நிலைக்கும்!
தெள்ளிய தூய அன்பின் விளைச்சல்
　　தேசம் எங்கும் செழித்துக் கிடக்கும்!
ஒள்ளிய அறிவினார்! பண்பினார் ஆக
　　உலகுலா வருவர் புதுயுகத் தமிழர்!
அள்ளிய எம்பழந் தமிழின் மாட்சி
　　ஆகா! என்றே உலகினில் ஒளிரும்!

*(வேறு)*

பச்சைத் தமிழராய்ப்பண் பாட்டில் குறையிலராய்,
அச்சம், மடமையற் றாராக; - உச்சநிலைப்
பொன்வாழ்வு வாழ்வர் புதுயுகத் தெம்தமிழர்!
இன்வாழ்வை எண்ணின் இனிது.

2–ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 16)

-மனோறா ஐயாத்துரை

பூவுல கெங்கும் ஒளிர்விடும் சுடரே!
புதுயுகத் தமிழர் வாழ்வு மலர
ஓங்கி ஒளிர்வாய் தனிச்சுடர் ஒளியே!
நிலையாய் வாழ, நெறிபல வகுப்பாய்!

புதுமைக்கும் பழைமைக்கும் பாலம் அமைத்துப்
புதுமெருகு ஊட்டி புதுப் பொலிவு பெற்றுச்
சீரும் சிறப்பும் சிறந்து விளங்கச்
செந்தமிழ் நம்மொழி தண்தமிழ் தாய்மொழி
தொன்மை மொழியிது தொலையாது என்றும்!

வீரம் காதல் இயற்கையைப் போற்றும்
உணர்வும் மொழியும் ஒன்று கலந்திடும்
சொல்வளம் பொருள்வளம் இலக்கியச் செறிவு
கற்பனைக் கட்டுரை கவின்பெறு கவிதைகள்
மலைம லையாக ஆக்கம் குவியும்

கணிதம் கணினி கணக்கியல் பொருளியல்
விஞ்ஞானத்தின் விந்தைகள் நிறைந்த
தொழில்நுட் பங்கள் பல்கிப் பெருகி
விமானம் கப்பல் இயந்திர சாலைகள்
புதுப்புதுத் தொழில்கள் நவநவ வளங்கள்
வேளாண்மை செய்து வேள்விகள் நடாத்த
செல்வம் கொழிக்கும் செந்தமிழ் நாடாய்!

கர்மவீரர்கள் செயல்திறன் விளக்கிடப்
புலன்களை வென்று புதுமைகள் காட்ட
அறியாமை சோம்பல் அறவே ஒழிப்பர்.
அறன்வழி நின்று அறம்பல செய்வர்.
சாத்திரம் கற்றுச் சாதனை படைப்பர்
இல்லை என்று சொல்வோர் இல்லாமல் செய்வர்

நோய்நொடிகளை நொறுக்கித் தள்ளுவர்
பிறர்நலம் பேணி மனநிறைவு எய்துவர்
ஒன்பது கோடி மக்கள் தொகையினர்
ஒன்பது ஆயிரம் கோடிகள் ஆவர்
தன்னைக் கட்டித் தானே ஆண்டு
தமிழ்நாடு கண்டு தமிழ்க்கொடி நாட்டுவர்
தமிழ்மொழி உலகப் பொதுமொழி ஆக்குவர்!

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தோர்
பாருல கெங்கும் கிளைகள் நாட்டுவர்
சாதி இனமத மொழியில் பேதம்
கடந்த மனித நேயம் பேணுவர்
சீரிய சிந்தனை செயல்திறன் மிக்க
இளைய சந்ததி கட்டியம் கூறுவர்
சந்திர மண்டலம் தாவிச் சென்று
தமிழுக்குத் தனியிடம் தேடிக் கொடுப்பர்!

விண்வெளி சுற்ற கொள்கலன் அனுப்பி
நுண்ணிய செய்தியை உடனடி யாகத்
தெரிந்து கொள்ளும் தேர்ச்சிமிகு தமிழர்
தமிழினம் பேணித் தமிழினம் காத்து
அகிலம் தன்னை (தன்னுள்) அரவ ணைத்திடுவர்

ஆடல் பாடல் அரும்பெரும் கலைகள்
கற்றுத் தெளிந்து காட்டுவர் காட்சிகள்
உலகச் சமய ஒன்றியம் அமைத்துப்
பூரண யோக சங்கம் நிறுவுவர்!

எங்கும் அன்பு அமைதி நிலவும்
நிறைவு மிளிரும் ஒழுக்கம் வாழும்
சாந்தி சமாதானம் எங்கும் நிலவும்
ஆனந்தம் எங்கும் (மின்) அலையாய்ப் பாயும்

பூரண நிறைவு பொலிந்து கிடக்கும்
கற்றோர் போற்றும் உதாரண மக்களாய்த்
தமிழர் திகழ்வர் புதுயுகம் தன்னில்
வாழ்க புதுயுகத் தமிழர் என்றென்றும்
தமிழ்மொழி வளர்க்கும் 'சுடரொளி' வாழ்க!



2–ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 17)

-அ.வை. அமுதன்

புதுயுகம் வேண்டும் ஆனால் போரிலா யுகமாய் வேண்டும்
மதுவெறியோடு சாதி மதவெறி மடிந்து போக வேண்டும்
பொதுநலம் பூத்தி ருக்கும் பொன்யுக மாக வேண்டும்
இதுசுக யுகமென் றெங்கும் ஏழையும் புகழ்தல் வேண்டும்!

அறிவியல் வளர்ச்சி கண்டோர் அணுக்குண்டு செய்துகொண்டு
குறியுடன் உயிர ழிக்கக் கொக்கரித் திடுவோர் எல்லாம்
வறியவர் பசியில் லாமல் வாழ்ந்திட வகைசெய் கின்ற
நெறியினில் சிறந்தால் இந்த நீணிலம் சொர்க்க மன்றோ?

அன்புதான் இனிய வாழ்வின் அடிப்படை எனத்த மிழ்த்தாய்
முன்புதான் சொல்லி வைத்த மூப்பிலா இலக்கி யங்கள்
பின்புவாழ் மாந்தர்க் கெல்லாம் பெருந்துணை யாகும் என்னும்
தன்மையே உலகில் வாழும் தமிழர்க்கும் பெருமை யாகும்!

பொங்குமா கடல்சூழ் கின்ற புவியினில் தமிழர் கூடி
எங்குதான் வாழ்ந்திட் டாலும் ஈடிலாத் தமிழ்ப்பண் பாட்டைப்
பங்குதான் போட்டுக் கொண்டு பாங்குடன் வாழ்ந்து வந்தால்
தங்கிடும் நலங்க ளோடு தலைமுறை செழித்து நிற்கும்!

ஆங்கிலக் குடும்பத் துக்குள் அயல்மொழி நுழைவ தில்லை
மாங்குயில் கூவும் சோலை மாத்தமிழ்க் குடும்பத் துக்குள்
பாங்கிலாப் பிறமொ ழிக்கால் பதிந்திட வைக்க லாமோ?
ஏங்கியே செந்த மிழ்த்தாய் எட்டியே நிற்க லாமோ?

ஆங்கிலம் கற்றுச் செல்வம் அதிகமாய்த் தேடி னாலும்
தீங்கினைத் தவிர்ப்ப தற்கும் சிந்தனை செழிப்ப தற்கும்
ஓங்கிடும் அமைதி தன்னை உள்ளத்தில் பெறுவ தற்கும்
தாங்கியே தமிழைப் போற்றித் தமிழர்கள் உயர வேண்டும்!

பிறமொழி எதுவும் வந்து பிறந்திடா முற்கா லத்தே
அறவழி சொல்லி மாந்தர் அனைவரும் வாழ்வ தற்குத்
திறவழி காட்டு கின்ற செம்மொழி நற்ற மிழ்த்தாய்
உறவினைத் தமிழர் வெட்டி ஒதுக்கினால் நலன்கள் உண்டோ?

நன்மையே எந்த நாளும் நல்கினால் பழமை போற்றித்
திண்மையே தருமே யானால் சேராமல் புதுமை நீக்கும்
தன்மையில் சிறந்து நிற்கும் தமிழராய் வளம்ப டைத்துப்
பன்முகப் புகழ்நல் வெற்றிப் பாதையில் நடக்க வேண்டும்!

காசுதான் வாழ்க்கை என்று கருதியே வருமா னத்தால்
மாசையே சுமந்து கொண்டு மாண்புறு மனித நேயம்
பாசந்தாம் நீக்கி வாழ்வைப் பாலையாய் மாற்றி டாமல்
தூசிலாத் தூய்மை யோடு தொடர்தலே தமிழர் வாழ்வாம்!

*(வேறு)*

காகம் போல் ஒற்றுமையைக் காக்க வேண்டும்
கலையுணர்வே வாழ்வென்னும் கருத்து வேண்டும்
தேகமது சிதையாமல் செழித்தி ருக்கச்
செம்மைதரும் பச்சிலைகள் தேட வேண்டும்
நாகரிக உச்சியிலே நடந்திட் டாலும்
நடைதவறி வீழ்ந்துவிடா நனவு வேண்டும்!
சோக மென்றால் சோர்ந்துவிடாத் துணிவு வேண்டும்
துணிவினிலும் பெருமையிலும் பணிவு வேண்டும்!

வையகத்தே தமிழரெங்கே வாழ்ந்திட் டாலும்
வளர்தமிழ்த்தாய் உறவுதனை மறந்தி டாமல்
பொய்யகத்தே கொள்ளாமல் புனிதம் காத்துப்
புகுந்திருக்கும் துறைகளிலே புகழைச் சேர்த்துக்
கையகத்தே கறையின்றிக் கட்டுப் பாடு
கண்ணியம்செய் கடமையுடன் காலம் போற்றி
நெய்யகத்தே நிறைந்தொளிரும் நெடுவி ளக்காய்
நிம்மதியே கொண்டோங்கும் நிலையே வேண்டும்!



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 18)

-ரிச்சர்ட்ஸ் பிரிட்டோ

அன்பாலே இணைகின்ற யுகமிங்கு வேண்டும்
அறிவாலே அகிலத்தைத் தமிழ்ஆள வேண்டும்
ஆகாயத் தெருவெல்லாம் நமதாக வேண்டும்
ஆனந்தக் கூத்தாடி அதிலோட வேண்டும்.

இருநூறு ஆண்டிதயம் இயங்கிடுதல் வேண்டும்
இனியேனும் எந்தமிழர் ஒன்றாதல் வேண்டும்
ஈயாத கையொன்று இல்லாமை வேண்டும்
ஈழத்துத் தமிழர்போல் இரும்பிதயம் வேண்டும்.

உயிருக்குள் உயிராகத் தமிழ்ஊற வேண்டும்
உலகிற்குச் சமநீதி நாம்சொல்ல வேண்டும்
ஊனங்கள் இல்லாத மனமெங்கும் வேண்டும்
ஊமைகள் வாய்கொண்டு பேசிடவும் வேண்டும்.

எறும்பாக எம்மக்கள் இயங்கிடுதல் வேண்டும்
எந்நாளும் வீழாமல் தமிழ்வாழ வேண்டும்
ஏறாத சிகரங்கள் நாம்ஏற வேண்டும்
ஏமாற்ற முடியாத தமிழ்ச்சாதி வேண்டும்.

ஐயங்கள் நமைநீங்கித் தெளிவாக வேண்டும்
'ஐ' என்று வியக்கின்ற சாதனைகள் வேண்டும்
ஒழிந்ததடா சாதிஎனும் இசைகேட்க வேண்டும்
ஒளியேற்றி வழிகாட்டும் தமிழ்க்கைகள் வேண்டும்.

ஓடிவரும் நதியெல்லாம் உறவாட வேண்டும்
ஓநாய்கள் இல்லாத சமுதாயம் வேண்டும்
ஔவைபோல் எம்பெண்கள் கவிபாட வேண்டும்
ஔடதங்கள் நாம்கண்டு நோய்தீர்க்க வேண்டும்.

கடைக்கோடித் தமிழர்க்கும் நல்வாழ்வு வேண்டும்
கலையாவும் செழித்திங்கு நிலைகொள்ள வேண்டும்
''ங''ப்போலே கம்பீரம் தமிழர்க்கு வேண்டும்
ஙகரங்கள் அழியாமல் மொழிகாக்க வேண்டும்.

சதிகண்டு வெல்கின்ற மதிநுட்பம் வேண்டும்
சகிப்பிற்கும் அளவுண்டு அதைஎண்ண வேண்டும்
ஞயமான செயலாலே மனம்வெல்ல வேண்டும்
ஞமன்கோலாய் எடையிட்டு விடைகாண வேண்டும்.

தரணிக்குத் தமிழர்தாம் தலையாக வேண்டும்
தமிழுக்கு உலகெங்கும் முடிசூட வேண்டும்
நல்மாற்றம் எவையேனும் நாம்ஏற்க வேண்டும்
நடிக்காமல் நேர்கொண்டு மெய்பேச வேண்டும்.

பண்பாடு மாறாத தமிழ்நேசம் வேண்டும்
பசிதீர நம்கையால் வழிகாண வேண்டும்
மதமில்லா ஆன்மீகம் நாம்காண வேண்டும்
மதியாலே விஞ்ஞானத் தமிழ்காண வேண்டும்.

யமனாக நமக்குள்ள குறைதீர வேண்டும்
யந்திரமாய் இல்லாத வாழ்விங்கு வேண்டும்
வரலாறு நமையேற்க வழிகாண வேண்டும்
வருகின்ற யுகமெல்லாம் நமதாக வேண்டும்.



2–ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 19)

-நடராசன் பாண்டுரங்கன்

வல்லவராய் வாழ்ந்தவர்கள்; மண்ணகத்தில்
வரலாற்றில் நிலைத்தவர்கள் முப்பொழுதும்
நல்லவராய் நடந்தவர்கள் நவில்வதற்கு
நற்சொற்கள் சொன்னவர்கள் வறுமைமிக்க
அல்லல்பட்(டு) அழுதவர்க்குக் கைகொடுத்து
அடைக்கலமே என்றவர்கள்; இன்று ஏனோ?
செல்லரித்த பண்பாட்டுச் சிதைவுகொண்டு
சிந்தைதனில் அழுவதனை என்ன சொல்ல?

பள்ளியிலே பலகலைகள் கற்றதெல்லாம்
பைந்தமிழே; வேற்றுமொழி ஊறுகாய்போல்!
துள்ளிவிளை யாடுகின்ற நேரம் கூடத்
தூயதமிழ்ப் பாட்டெடுத்து ஆடினார்கள்
அள்ளியள்ளித் தந்தவர்கள்; சோம்ப லின்றி
அயராமல் உழைத்தவர்கள்! இன்றுமட்டும்
கள்ளிப்பால் போல்திரிந்த மனத்தி னோடு
காலொடிந்து கிடப்பதனை என்ன சொல்ல?

வறுமையிலும் தன்னிலையில் தவறிலாது
வசித்தவர்கள்! இறைமைக்கே பயந்தவர்கள்,
சிறுமைகண்டு சினந்தெழுந்து தீமை மாய்த்த
சிந்தையுடன் வாழ்ந்தவர்கள்; செம்மையுறப்
பெருமையுடன் தமிழ்வளரத் தினமுழைத்த
பெற்றியாளர்! கடல்கள் தாண்டி
உரிமையுடன் கொடிபறக்க வீரஞ் செய்த
உத்தமர்கள் இன்றுமட்டும் உறங்கலாமா?

தாய்மொழியில் கல்விபயில்! தமிழ னென்னும்
தன்மான உணர்வுகொள்! நிலையுயர
ஆய்ந்தெழுது பலநூற்கள்! அவைகளெங்கும்
அஞ்சாது முழங்கிடு! புதுக்கவிதை
வாய்த்திடுக இதழ்களெல்லாம்! மரபுசார்ந்த
வளமிக்க இலக்கியங்கள் வளர்த்திடுக!
தேய்ந்துவிழும் பழம்புகழை நிமிர்ந்தெழுப்பித்
தேயமெங்கும் பரப்பிடுக! தமிழே வாழும்!

அறிவியலில் இதழியலில் அணுவிஞ்ஞான
ஆற்றல்களில், விண்வெளியில், தமிழனென்னும்
செறிவுடைய முத்திரைகள் பதியும்; அந்தச்
சிந்தனையில் தமிழர்குலம் வளர்ந்து செல்லும்
அறிவுடைய படைப்புகள் கணிப்பொறியில்
அயராது எழுந்துவரும்; விந்தையோடு
பொறியியலில் தமிழர்கள் மாற்றம் செய்யப்
பூத்துவரும் அறிவியலும் தமிழை வாழ்த்தும்

மதம்கடந்த மனிதநேயம் தமிழர்மனத்தில்
மலர்ந்துவர சமத்துவத்தைத் தமிழ்வளர்க்கும்!
உதவாத சாதிஇனச் சனிய னெல்லாம்
ஒழிந்துவிடும்; தமிழ்ச்சாதி உலகை ஆளும்!
இதுபுதிது எனும்படிக்குத் தமிழன் உலகில்
ஏராளம் விதிசெய்ய உலகம் மாறும்!
புதுயுகத்தில் தமிழரெல்லாம் உலகை மாற்றும்
பூரிப்பில் பூமிமணம் வியந்து நிற்கும்.

அரசியலில், புவியியலில், மருத்து வத்தில்,
அடடா!நம் தமிழரெல்லாம் புரட்சி செய்ய
அரசுகளும் விரைந்துவந்து விருது நல்கும்;
அந்நாளே புதுயுகத்தில் தமிழர் வெற்றி!
பரவுகின்ற இசைகளிலும் தமிழின் சுரமே
பண்பாடும்; அப்பாட்டில் உலகம் சிரிக்க
பரிதியவன் வெளிச்சமெனத் தமிழும் ஒளிரும்!
புதுயுகத்தில் தமிழரசே உலகை வெல்லும்!



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 20)

- சீனி. கர்ணராசா

புதுயுகத் தமிழர்
புதுமைகளின் படைப்பாளர்!
எதிலும் வெற்றியாளர்!
ஒப்பிலாப் புரட்சியாளர்!
எப்போதும் எழுச்சியாளர்!

புதியதோர் உலகம் படைப்பவர்!
அரியதோர் ஆட்சி செய்பவர்!
சூரியனைப் பிளந்து
சூரத்தனம் செய்பவர்!
சந்திரனின் தேய்வைச்
சரி செய்பவர்!

நீராலும், நெருப்பாலும்,
வண்ண வண்ண ஆடைகள்
நெய்து அணிபவர்!

வான்வெளியில் பறந்து சென்று
மழைமேகங்களைத் தள்ளி வந்து
தம்வயல்களில் மழை பொழியச் செய்பவர்!

இமயத்தைத் தூக்கி வந்து
நம் கடலில் நட்டு வைப்பவர்!

மனித மரணத்தை ஒத்திவைக்க
மாமருத்துவம் கண்டவர்!

கல்லுக்கும் தமிழ் உயிரைப் புகுத்துவர்
புதுயுகத் தமிழர்!
கடவுளைக் கண்டுபிடிப்பர்-
புதுயுகத் தமிழர்!

கடல் நீரில்
விவசாயம் நடத்துவர்-
புதுயுகத் தமிழர்!
உடலின் உயரத்தை
உயர்த்திக்கொள்வர்-
புதுயுகத் தமிழர்!

நோயற்ற உடலும்
பசியற்ற வயிறும்
பகுத்துப் படைப்பர்
புதுயுகத் தமிழர்!

எல்லாக் கிரகங்களிலும்
தொழில் செய்வர்-
புதுயுகத் தமிழர்!

எல்லையில்லா இயற்கையில்
எங்கும் வாழ்வர்-
புதுயுகத் தமிழர்!

புதிய படைப்புகளைப்
பெருக்கிடுவர்-
புதுயுகத் தமிழர்!

பூமியைப் புரட்டிப்
பலபொருள்களைக் காண்பர்-
புதுயுகத் தமிழர்!

ஒற்றுமையை உயர்வாகவும்
தமிழை உயிராகவும்
உள்ளத்தில் ஏந்தியவர்
புதுயுகத் தமிழர்!

வானத்தில் வரலாறு எழுதுவர்-
புதுயுகத் தமிழர்!
எதிர் காலத்தையே
இயக்குவர் - புதுயுகத் தமிழர்!

எல்லோரும் எல்லாம்
தெரிந்திருப்பர் - புதுயுகத் தமிழர்!

எல்லோரும் எல்லாம்
வைத்திருப்பர் - புதுயுகத் தமிழர்!



**2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004**
**(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 21)**

-பொன்னரசு

புதுயுகம் பிறந்தது பூமழை பொழிந்தது!
        புண்ணியத் தமிழரின் புன்னகை மிளிர்ந்தது!
நதிநீர் எல்லாம் பொதுநீர் ஆனது!
        நட்புடன் உலகோர் செம்மொழி பயின்றனர்!
எதிலும் எங்கும் ஏற்றசெந் தமிழால்
        எல்லாப் பல்கலைக் கழகங்கள் தோறும்
மதிமிகு மணிமுடி செங்கோல் ஓச்ச
        மல்லிகை சூடிய மங்கையர் வாழ்த்தினர்!

எதுவரை கல்வியோ அதுவரை தொடர்ந்தது
        ஏற்றநல் புதுமைகள் மாற்றம் இன்றியே
பொதுத்தமிழ் மூலமே புகட்டிட லாயினர்;
        பொன்வான் ஆய்வே எங்கும் சிறந்தது!
மதுவினை மக்கள் மறந்தனர்; ஆடவர்
        மங்கையர் தமக்குச் சரிநிகர் என்றனர்;
புதுவிதி வகுத்துச் சாதியை ஒழித்தனர்;
        புதுப்புது கணிப்பொறி பூமியை அளந்தது!

வான்மழை மாதம் மும்மாரி பொழிந்தது
        வற்றாக் காவிரி வைகை நதிகளில்
மீன்இனம் துள்ளி மகிழ்ந்தது மகிழ்ந்திட
        மீண்டும் புகாரில் வாணிபம் பெருகின;
காண்போர் களித்தனர்; காவிரி நதியுடன்
        கங்கை இணைந்து களிநடம் புரிந்தது!
தேன்எனத் தென்றலில் மான்போல் மக்கள்
        துள்ளித் திரிந்தனர் புதுயுகத் தமிழர்!

தீவிர வாதக் கொடுமைகள் ஒழிந்தன!
கொடியோர் எல்லாம் திருந்திய தாலே!
ஆவியைப் போக்குதல் அன்பிலாச் செயலென
அறிந்தார் அறவோர் அறிவுரை யாலே!
தாவிப் பெருகிய வறுமையும் ஒழிந்தது!
தன்நிகர் அற்றஅவர் உழைத்தத னாலே!
மேவிய தொழில்கள் பெருக்கினர் அரசினர்;
மேதினி எல்லாம் கையூட் டொழிந்தது!

வல்லவர் நல்லவர் ஆனபின் னாலே
கொள்ளை கொலைகள் நாட்டில் இல்லை;
உள்ளோர் தேவைக் கதிகம் உள்ளதை
உவந்து கொடுத்தார் இல்லா தவர்க்கு!
நெல்லும் கரும்பும் நல்அரண நிலத்தில்
நீர்நிலை பொங்கப் பொழிந்தது வாய்மை!
கல்லும் உருகும் காவியம் சிறந்தது!
களிப்பில் திளைத்தனர் புதுயுகத் தமிழர்!

பதிவுகள் என்பது பைந்தமிழ் மொழியில்
பற்றுள பெற்றோர் ஊரின் பெயரே!
சதிசெய் சாதிக்கு ஒதுக்கீ டில்லை!
சமயச் சடங்கின் சட்டை கிழிந்தது!
சிதையா அறிவியல் கல்வியே இலவசம்!
சீரும் சிறப்பும் ஊரார் உலகோர்
விதைத்தார் மனத்தில் வேர்விட்டு முளைக்க
விரும்பித் தேர்ந்தார் புதுயுகத் தமிழர்!

வளமிகு செல்வமும் ஒழுக்கமும் கல்வியும்
வான்மழை பொய்யா தேன்தமிழ் நிலத்தில்
உழவும் தொழிலும் செழித்தவை மிளிர்ந்திடப்
பல்வகை இயந்திரப் பொறிகளின் துணையால்
நலமிகு விளைச்சல் நாடே பெற்றிட
நல்லறச் சான்றோர் ஆட்சியில் மக்கள்
இல்லறம் கண்டனர் வள்ளுவர் நெறியில்
இன்பமே பெற்றனர் புதுயுகத் தமிழர்!



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 22)

- சு. பாலகிருட்டினன், மதுரை

உலகத் தமிழா... உணர்வாய் எழடா...
உவகையாய் நில்லடா!
நம்மொழி செம்மொழி எனச் சொல்லடா.
நம்தமிழ் என்றுமார் தட்டு,
நாளும் இதற்குச் சீர்கட்டு.
புதுயுகத் தமிழா புலர்ந்தது பொழுது
புதுமை தரநீயும் புதுத் தமிழால் பழகு!
தமிழுக்கு என்றும் தனிச் சிறப்பு
தமிழன் என்பதில் சற்றே செருக்கு.
தயங்காமல் சொன்னால் தமிழின்மேல்ஓர் கிறுக்கு.
தரணியிலிதைச் சொல்ல வெட்கம் என்ன இருக்கு?
சொல்லலாம் நிறைய செம்மொழியின் சிறப்பு
சொல்வதற்குத் தானே இம்மானிடப் பிறப்பு.
இனியைமான நம் மொழி தமிழ்
இணையிலாத செம்மொழி எனச்சொல்.

தமிழா... தலை நிமிர்ந்து நில்
தமிழால் உனை உணர்ந்து செல்
தமிழை நீ தாராளமாகத் தாலாட்டு
தவறாமல் பாரெல்லாம் அதனைச் சீராட்டு.
தமிழ் கூறும் நல்லுலகம். இதில்
தாயே உனக்கொரு மகுடம்
காலத்தால் அழியாது நம்மொழி,
களிப்புடன் அதனைக் கண்டு களி.
நம்மை நம் தாய் தாலாட்டினாள்.
நம் தாய் தந்த தமிழைப் பாராட்ட வேண்டாமா?
ஓர் நல்ல கவிஞன் கவிதையைப் பதிய
வைத்துவிட்டும் போகிறான்.
அந்தக் கவிதையால் கவரப்பட்ட காலம்
இந்தக் கவிஞனைக் காவியமாக்கிவிடுகிறது.
காவிய நாயகர்களைக் காண்போமா...

அவர்கள் கவியை நாட்டிற்குக் காட்டுவோமா!
தமிழை எப்படி வளர்க்கலாம்,
தாயை எப்படி வளர்க்கலாம்,
கம்பன்போல் காதல் நோக்கலாம், காவியமாக்கலாம்,
காதலாகி நாமும் கசிந்துருகலாம்,
வள்ளுவனாய் ஈரடி படைக்கலாம்,
வானளாவ நாமும் உயரலாம்.
பாரதிபோல் தமிழின் சாரதியாகலாம்,
பாரதமே தலை வணங்கும் கீர்த்திபெறலாம்.
பூவான தமிழைப் புரட்சிக் கனியாக்கிய...
பாரதிதாசன்போல் தமிழ் நேசன் ஆகலாம்
கவிதை என்ற சொல்லின் விரிவே,
கண்ணதாசனின் விதை என்பது தானே.
விட்டுக் கொடுக்காத கவிஞன்...
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமாகலாம்.

வைரமுத்துவின் வைரவார்த்தைகள்போல்
வையகத்தில் வீரம் விதைக்கலாம்
தமிழின் தலைவன் கலையுலகின் முதல்வன்,
கலைஞர்போல் தமிழால் இளைஞர் ஆகலாம்
தொட்டுத் தொடரட்டும் தமிழ்க் காதல்,
பட்டுப் படரட்டும் தமிழால் சாரல்.
தமிழ் தந்ததால் கவிதை வந்தது,
கவிதை வந்ததால் காதலும் பிறந்தது
காதல் பிறந்ததால் காமம் வந்தது,
காமம் கொன்றதால் தமிழே சிறந்தது.
உள்ளே தமிழன் வெளியே மனிதன்...
உறங்கியது போதும் வெளியே வா
உள்ளே தமிழன் அதனால் மனிதன்...
புதுமானுடம் செய்வோம் மகத்தாய்வா...
புதுயுகத் தமிழா புத்துணர்ச்சியாய் நடடா, பேச்சால்
ஆதலினால் காதல் செய்,
அன்பாய், தமிழாய் உய்.



## 2–ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
## (ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 23)

- தமிழருவி கோவை கோகுலன்

கரையேறி மீன்துள்ளிக் கனிசுவைத்த கிளிபேசும்
நிறைமாதசூல் சுகமாய் நின்றதோர் நிலைநிகழும்
காற்றில் கதிர்சாய்ந்து கழநியெங்கும் நீர்வழியும்
மேற்றிசையில் கதிர்எழுந்து மேதியினில் ஒளிசிந்தும்
சந்தை கூடும் மாந்தரெல்லாம் மனமகிழ்ந்து
சிந்தைகுளிர் சீர்வரிசை தன்னைச் சீதனமாய்ப் பெறுவர்
விந்தைநிகர் மொழிவளத்தை விண்ணதிர முழங்கி
முந்தைமாந்தர் நினைவுகொண்டு எண்திசையும் வெல்வார்
சங்கம் வைத்த தமிழ்வளத்தையொரு சரித்திரமாய் ஆக்கிச்
சிங்கமெனச் சிலிர்த்தெழுந்து சீர்வேகம் காண்பார்
எங்கும்புகழ் எதிர்காலச் செம்மொழியின் நிலையைத்
தங்கிவிட்ட வாழ்க்கையெனத் தடம்பதித்துச் செல்வார்
பரணியோடு பத்தெண் பாட்டுடைக் கீழ்க்கணக்கும்
தரணியெங்கும் தான்மணந்த அகமோடு புறமெடுத்தே
அகத்தியமும் ஔவையின் தமிழோடு நிகண்டுகளும்
ஐம்பெரும் காப்பியத்தை அணிகலனாய்ப் பூட்டித்
தொல்காப்பியமும் தொகைவரி எட்டெனவே கூட்டித்
தொன்மைபுகழ் சொல்லூறும் திருமறைகள் காட்டிப்
பாங்குடனே பயின்றுவந்த பல்வேறு காப்பியங்கள்
தேர்ஏறிச் சீர்கொணர்ந்த தேம்பா வணிகளோடும்
சீர்விருந்தாம் திகட்டாத சித்தர்தம் சொல்மருந்தும்
கனித்தமிழ் கொஞ்சி வந்த கம்பனது மொழிக்கட்டும்
கவித்தமிழ் மிஞ்சுகின்ற குறவஞ்சிக் குதூகலமும்
இத்தனையும் சேர்ந்ததொரு தமிழியம் இங்கிருக்க
இனிவேறு மொழிவந்து இங்கிருத்தல் என்ன நீதி?
அனல்தின்று நீர்எதிர்த்த அன்னைத்தமிழ் அருமொழியை
அந்நியமாய் ஆக்கிவிடல் ஆகிவந்த பழியன்றோ?

தூங்கிவிட்ட புலிகள்நாம் இனித்துவளாது விழித்தெழுவோம்
ஏங்கிநின்ற நாள்களையே எதிர்கொண்டு விரட்டியே
வீங்கிவந்த ஏக்கங்கள் விட்டு நம்மை விலகியோட
வாங்கிவைத்த புகழ்கொண்டே வலிதாய் முறியடிப்போம்
வீட்டுக்குள் குடைபிடித்து வீதிகளில் பாய்விரித்து
வீணதுவாய்த் திரிந்ததாலே வியாபார விலையானோம்
புண்ணியத்தைப் புதைகுழியில் மூடியபின், பாவங்களைப்
பல்லக்கில் ஏற்றியன்றோ பழிசுமந்து பலியானோம்?
கவித்தமிழ்க் காவலரே கன்னல்மொழிச் சோதரரே
காலத்தால் அழியாத தமிழ்மொழியின் தனியினமே
தோகைவரி மயில்களெனத் தோளிணைத்துத் திரண்டிடுவோம்
தொன்மைமிகு தமிழ்த் தாயின் தாள்பணிந்து வணங்கிடுவோம்
வயதில்லா வளர்தமிழின் வான்புகழ் வள்ளுவத்தை
வருங்காலம் உணர்ந்திடவே உலாவரச் செய்திடுவோம்
பழங்காலப் பரணிவீரர் பாய்ந்தெழுந்து பெருகிடவே
பழிதுடைக்கும் படைதிரட்டி விடைகொண்டு வெல்வோம்
நான்குயுகம் கண்டவேதம் நாணுகின்ற வகையில்
நல்லதொரு புதுயுகத்தைப் புத்துலகாய்ப் படைப்போம்.
புதுயுகத்துத் தமிழரெனப் பூமிதன்னில் நிலைப்போம்
புலர்காலைக் கதிர்களெனச் செம்மொழியை வளர்ப்போம்.
புகழ்வானப் பூக்குவியல் பூந்தென்றல் புவிமேவும்
பூமேனியின் சந்தனமும் புதுப்புனுகு சவ்வாதும்
கார்மேகக் கருங்கூந்தல் கவிபாடும் கண்ணழகும்
கூர்வாளாம் விற்புருவம் கனிந்துருகும் கண்பார்வை
மார்தவழும் மழலையோடு மாரணைக்கும் மதியழகும்
நெல்மணிகள் தலையாட்டும் நேர்த்திமிகு வயலழகும்
கற்குன்றின் கதைமாற்றும் கவின்மிகுந்த சிற்பமும்
களமறவன் போரிட்டுப் பெறுகின்ற பெருவெற்றி
இளமங்கை இன்பமுறக் காணுகின்ற தனிக்கனவும்
பனிதூங்கும் இளங்காலை பாங்குமிகு தாமரையும்
கனிசுவைக்கும் சிறுகிளியின் சிருங்கார மொழியழகும்
இனியெங்கள் தமிழ்மொழிக்குத் தாலாட்டிச் சுகமளிக்கும்

தனிவழியில் தாள்பணிந்து தரணியதில் தலைநிமிர்த்தும்
மூத்ததமிழ் முத்துவிசை திசையெங்கும் புகழ்பரப்பும்
முன்னோர்கள் வைத்தவிதம் முன்வந்தே முதலாக்கும்
சூல்கொண்ட சுந்தரத் திருமேனி முகத்தழகைச்
சுந்தரத்துத் தமிழ்வடிவாய்ச் சுடரொளியெனத் தான்வீசும்
மால்கொண்டல் வாசனவன் திருவாயின் சிரிப்பழகை
மறுபதிப்பில் மொழியழகாய் மறுமணமும் தான்பரப்பும்
முச்சங்க வரலாற்றை முன்வந்து வழிநடத்தி
மூச்செங்கள் மொழியெனவே முன்மொழிந்து முன்னேற்றும்
வள்ளுவத்தின் வழிகாட்டும் வசந்தவாசல் திறந்துவைத்து
வருங்கால நல்லுலகை நற்றமிழால் விழிதிறக்கும்
மொட்டவிழ்ந்த பூக்களென மொழிவாசம் வீசிக்
கட்டவிழ்ந்த களிறுகளாய்க் களிநடனம் புரிவோம்
விட்டகுறை விதிவசத்தை விலகிடவே வைத்தே
எட்டுகின்ற புகழனைத்தும் எடுத்தேகி வருவோம்
சென்றயுகத்துச் செல்லரித்த செந்தமிழின் சிறப்பைச்
செம்மொழியில் மீண்டுமொரு செகப்புரட்சி செய்வோம்
புதுயுகத்துத் தமிழரெல்லாம் புத்துணர்வு பெற்றே
புதுப்பிறவி தானெடுத்துப் பூவுலகை வெல்வோம்
சாய்ந்திருந்த சங்கத்துத் தமிழெடுத்து நிமிர்ந்தே
வேய்ந்திருக்கும் கூரையாக்கி வேற்றுலகைப் படைப்போம்
ஓய்ந்திருக்கும் தமிழரெல்லாம் ஒருமுகமாய் எழுந்தே
மேய்ந்துவந்த கூலிகளை வேரறுத்து மாய்ப்போம்
பன்னாட்டு மொழியரங்கில் பைந்தமிழ் எழுந்தே
பார்போற்றும் இலக்கியத்துப் பரிதியென வாழ்ந்து
பூத்திட்ட புதுயுகத்துத் தமிழரென முழங்கியிங்கே
புதியதொரு தமிழ்உலகைத் திட்டமுடன் படைப்போம்!



## 2–ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
## (ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 24)

- கவியருவி கந்ததாசன்

### ஆசிரியப்பா

பழமைச் சீருடன் புதுமைப் பொலிவுடன்
தழைத்திடச் செய்ய தமிழினம் நாளும்
புதுயுகத் தமிழர் பொறுப்புடன்
புத்துணர் வோடே உழைத்திட வேண்டுமே!

### எண்சீர் விருத்தம்

அருமைமிகு தாய்மொழியாய்த் தமிழைப் பெற்றே
ஆற்றலுடன் அவனிதனில் வாழு கின்ற
பெருமைமிகு தமிழினமும் புவியில் வாழும்
பழைமைமிகு இனங்களிலே ஒன்றே ஆகும்!
இருளதனைக் கிழித்தோங்கும் கதிரோன் போன்றே
இணையற்ற திறன்கொண்டார் தமிழ ராவர்!
கருணைமிகு அன்போடு காதல் வீரம்
கொண்டாடி வளர்த்திடுதல் தமிழர் பண்பாம்!

பொதுமறையாம் திருக்குறளைத் தந்த தோடு
புகழ்மிக்க இலக்கியங்கள் படைத்து அன்றே
மதுரையிலும் மறைந்திட்ட புவியில் தானும்
முச்சங்கம் தமைக்கண்டு தமிழைக் காத்தார்!
புதுமைமிகு இலக்கியங்கள் தமிழில் நாளும்
படைக்கின்றார் இந்நாளும் காணு கின்றோம்!
புதுமைவளர் இலண்டனுடன் பாரி லெங்கும்
பைந்தமிழ்க்குச் சங்கங்கள் கண்டார் இன்று!

வெற்றிபல பெற்றிட்ட வேந்தர் மூவர்
மக்களுக்கு நல்லாட்சி தந்த தோடு
கற்றறிந்தார் தம்மோடு கலைகள் காத்துக்
கற்கோயில் பலகண்டு காலம் வென்றார்!
நற்றமிழர் இந்நாளும் இறைவன் போற்றித்
தமிழகத்தில் மட்டுமன்றி தரணி யெங்கும்
சுற்றமுடன் ஆலயங்கள் அமைத்த லோடு
சிறப்போடு கலையனைத்தும் காத்த லுண்மை!

அந்நாளில் தமிழர்கள் கடலைத் தாண்டி
அயல்நாடு தாம்சென்றார் பொருளைத் தேடி!
இன்றும்நாம் காண்கின்றோம் பொருளைத் தேடி
எண்ணற்றோர் அயல்நாடு செல்லு கின்றார்!
எந்நாடு சென்றாலும் சேர்ந்த நாட்டில்
ஏற்றமுடன் தாமுழைத்துத் தழைத்த லோடு
அந்நாடும் உயர்ந்தோங்க ஆர்வ மோடே
அயராது தாமுழைத்தே நலன்கள் சேர்ப்பர்!

சிங்கப்பூர் தன்னோடே இலங்கை தன்னில்
செந்தமிழும் ஆட்சிமொழி! மலேசி யாவில்
அங்குள்ள பாராளு மன்றந் தன்னில்
ஆள்கின்ற மொழிகளிலே தமிழும் ஒன்றாம்!
எங்குமுள தமிழினமும் மகிழும் வண்ணம்
எழுச்சிமிகு பாரதத்தை ஆள்வோர் இன்று
சங்கத்தமிழ்ச் சீருணர்ந்தே அதனை இன்று
செம்மொழியாய் அறிவித்துச் சிறப்புச் சேர்த்தார்!

தொன்றுதொட்டே இன்றுவரை தமிழர் வாழ்வில்
நிகழ்ந்திட்ட நிகழ்ச்சிகளை ஆய்ந்துப் பார்த்தே
இன்றுள்ள புதுயுகத்துத் தமிழர் நாளும்
ஏற்றமுடன் தமிழ்வளர்த்தல் செய்வ தோடே
இன்பமுடன் தமிழினத்தைத் தரணி தன்னில்
இனிதாக வாழ்வித்து வளர வைக்க
நன்மைதரும் வழிபலவும் தேடிக் கண்டு
தெளிவோடும் துணிவோடும் உழைத்தல் வேண்டும்!

தமிழகத்தின் புதுயுகத்துத் தமிழர் தாமும்
தமிழ்மொழியே தமிழகத்தை ஆளும் வண்ணம்
தமிழ்மொழியைத் துறைதோறும் மணக்கச் செய்து
தமிழ்வளர்த்துத் தமிழினத்தைக் காத்தல் வேண்டும்!
தமிழகத்தில் உழவோடு தொழில்கள் தம்மைச்
சிறப்புமிகு அறிவியலின் துணையி னோடு
தமிழகத்தின் வளம்பெருக்கி நலன்கள் சேர்த்துத்
தரணிதனில் பெருமையுறச் செய்தல் வேண்டும்!



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 25)

-இரா. கணேசன்

தமிழா தமிழா உணர்வெங்கே?
தடமா புரண்டது உன்வீரம்?
அமுதாய் உண்ட நம்மொழியில்
ஆங்கிலம் கலப்பது முறைதானா?

விதையாய் விழுந்த மண்ணெல்லாம்
விருட்சமானது நம் இனமே!
அதையா வீழ்த்த நினைக்கின்றான்?
அவன்அடிபட் டோட வேண்டாமா?

உலகம் முழுவதும் நம்மக்கள்
ஒன்பது கோடித் தமிழர்களாம்
ஓங்கும் இனியும் நம்கூட்டம்
ஒழுங்கு தமிழில் வாய்மொழிந்தாய்!

பண்பா டென்றால் எந்நாடும்
பார்க்கும் தமிழர் நடை, உடையை
வெண்பா ஒன்றைச் சொன்னாலே
மண்பா அனைத்தும் மண்டியிடும்.

சங்கம் வைத்து வளர்த்த தமிழ்
அங்கக் குருதியில் கலந்ததுவே
சங்கமம் ஆகிடப் புறப்படுவாய்
சடுதியில் புதுயுகத் தமிழர்களாய்.

எங்கும் இலக்கியம் வெற்றி பெறும்
ஏங்கும் தமிழன் மகிழ்ச்சியுறப்
பங்கு நமக்கும் உண்டென்று
பாய்ந்து வா பைந்தமிழா!

கனிமொழி தேன்மொழி என்றெல்லாம்
கனிவுற மொழிதல் போதாது.
துணிவுடன் தமிழை வாய்மலர்ந்தால்
இனிஎவன் மொழிக்குத் தடையாவான்?

கண்ணியம் கொண்ட நம்மொழியை
அன்னியன் யாசகம் வாங்கித்தான்
அனைத்து மொழியும் உயிர்த்ததுவே
மின்னிட வேண்டும் செம்மொழியே!

கணினிகள் உலகம் என்றாலும்
கனிவுடன் நிற்கும் செந்தமிழே!
இணையத் தளங்கள் ஆனாலும்
இன்பத் தமிழே ஓங்கிடுமே!

ஆவணம் படிவம் கடிதமெலாம்
அழகு தமிழில் வரைந்திடுவோம்!
பாவென இசைந்து நாவசைத்தால்
பைந்தமிழ்த் தாயைத் துதித்திடுவோம்!

நோவே அண்டாது தமிழ்படித்தால்
நோன்புகள் இருக்கச் சமமாகும்
மாண்புறக் கவிஞர் தமிழாலே
மாஉலகில் புனிதம் பெற்றனவே!

அன்னையை மம்மி என்றழைத்துத்
தாயைப் பேயாய் ஆக்காதே!
தந்தையை டாடி என்றழைத்துப்
பிதாவை வேதாளமெனச் சொல்லாதே!

வாழி, வாழியென வழியனுப்பு
டாட்டா சொல்லிக் கொடுப்பானேன்?
தொலைபேசித் தொடர்பில் வணக்கம்சொல்
தொலையட்டும் ஹலோ போலித்தனம்!

உழைப்பால் பாரில் இணைந்திடுவோம்
விதைத்தால் அங்கும் தமிழ் விதைப்போம்
காசினி வியக்க நம்மொழியைக்
கண்போல் நாமும் காத்திடுவோம்!

தமிழா! தமிழால் ஒன்றாவோம்
தரணியில் தமிழேயென உயர்ந்திடுவோம்!
புனிதம் பெற்றவர் நாமென்றே
புதுயுகத் தமிழர்கள் சங்கமிப்போம்!



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 26)

-கவிஞர் இரா. இரவி

நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும் இனி
நடப்பவைகள் நன்மைகளாக அமையட்டும்!

விலைமதிப்பற்ற மனித உயிர்கள் இனி
விவேகமாக மதிக்கக் கற்றுக் கொள்ளட்டும்!

வெடிகுண்டுகளும் துப்பாக்கிச் சண்டைகளும்
வேரோடும் வேரடி மண்ணோடு ஒழியட்டும்!

நோபல் பரிசு தரும் நோர்வேக்கு இனி
நேர்மைப் பரிசை அய்க்கிய சபை வழங்கட்டும்!

சமாதானத்திற்கான வாயிற் கதவுகள் இனி
சர்வசதா காலமும் திறந்தே இருக்கட்டும்!

உலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் இனி
உன்னத இலங்கை நாட்டிற்குத் திரும்பட்டும்!

உயிர்கள் பலியானது போதும் இனி
ஒரு உயிர் கூடப் பலியாகாமல் தடுப்போம்!

இன வெறியாட்டங்கள் போதும் இனி
இன வெறிக்குத் தீ மூட்டி வைப்போம்!

மனிதன் விலங்காய் மாறியது போதும் இனி
மனிதனை மனிதனாய் மாற்றிக் காட்டுவோம்!

பேதங்கள் காட்டியது போதும் இனி
பேதமற்ற சமத்துவச் சமுதாயம் அமைப்போம்!

அன்பு என்ற ஆயுதத்தால் இனி
அகில முழுவதும் ஆட் கொள்வோம்!

உலகப் பொதுமறை திருக்குறள் வழி இனி
உலக மனிதர்கள் யாவரும் நடப்போம்!

தமிழர்கள் இழந்த உரிமைகள் இனித்
தமிழர்களிடம் தானே வந்தே சேரட்டும்!

பிரிந்திட்ட பாசப் பறவைகளை இனிப்
பிணைத்திட சர்வதேசத் திட்டம் வகுப்போம்!

கூனிக் குறுகி வாழ்ந்தது போதும் இனிக்
கூன் நிமிர்த்தி வீறுநடை போடுவோம்!

உடலளவில் அயலகத்தில் வாழ்ந்தது போதும் இனி
உள்ளத்தளவிலும் உடலளவிலும் ஈழத்தில் வாழ்வோம்!

அந்நியக் கலாச்சாரத்தால் சீரழிந்தது போதும் இனி
அன்னைக் கலாச்சாரத்தால் சீரோடு சிறப்புறுவோம்!

மழலைகள் தாய்மொழி மறந்தது போதும் இனி
மீண்டும் தமிழ்மொழி பயிற்றுவிப்போம்!

தமிழினம் பட்ட கொடுமைகள் போதும் இனித்
தரணி போற்றிடப் பெருமைகள் குவிப்போம்!

இலக்கண இலக்கியங்களை இளைஞர்களுக்கு இனி
இணையத்தின் வழியில் கற்றுக் கொடுப்போம்!

தமிழின் பெருமை தமிழரின் பெருமை இனித்
தரணிக்குப் புரிந்திடப் பறை சாற்றிடுவோம்!

அந்நியரிடம் கண்ட மடமைகளை இனி
அந்நிய மண்ணிலேயே விட்டுவிடுவோம்!

அயலரிடம் கண்ட கட்டுப்பாடுகளை இனி
அப்படியே மனத்தில் பதித்து நடப்போம்!

அழகு தமிழ் வளர்க்க இனி
அனைவரும் ஓரணியில் திரண்டிடுவோம்!

அற்புதப் பிறமொழி இலக்கியங்களை இனி
அமுதமொழித் தமிழில் மொழி பெயர்ப்போம்!

நாடோடிகளாய் நாடுகள் நடந்தது போதும் இனி
நாட்டிற்குத் திரும்பிப் பெருமை நிலை நாட்டிடுவோம்!

சுற்றுலாத் தலமான சுந்தர இலங்கை இனிச்
சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாகட்டும்!

''போர்'' என்ற சொல்லே இனிப்
பார் முழுவதும் இல்லாமல் போகட்டும்!

வன்முறை விடுத்து எல்லோரும் இனி
நன்மறை வழி நடக்கட்டும்!

மதவெறி மனத்திலிருந்து மாய்ப்போம் இனி
மனித நேயம் மனத்தினில் வளர்ப்போம்!



## 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
### இலங்கைப் பிரதேசம்
### (முதற் பரிசு பெற்ற கவிதை)

**-கணேசன் சேந்தன்,** *யாழ்ப்பாணம்*

கடலலையும் வந்துகரை மடிதடவிப் போகும்
கதிரொளியைக் கண்டுமலர் கண்சிமிட்ட லாகும்
அடல்செறிந்த மலைமகனை ஆற்றுநங்கை மேவும்
அனலெறிந்த போதுமிளந் தென்றல்குளிர் காயும்.

தாயணைக்கும் பாசமெனத் தண்ணிலவு காயும்
தவழுகின்ற காற்றினூடு தமிழ்கலந்து பாயும்
தீயெரித்த பின்னும்வனம் திரும்பவுமே தழைக்கும்
திகழுபுவி பொலிவளங்கள் சேர்ந்தழகை இழைக்கும்.

அண்டவெளி மண்டலத்தில் அலையுமெங்கள் கோளில்
ஆதிமுதல் மனிதனவன் அடியெடுத்த நாளில்
கண்டெடுத்த நாகரிகக் கலைகளுக்குள் ஒன்றாய்க்
காலமதை வென்றதிந்தத் தமிழனமும் நன்றாய்!

புல்நுனியின் மீதமரும் பனிவடிவை மிஞ்சும்
பூமடியில் மதுநுகரும் வண்டழகை விஞ்சும்
சொல்நயமே யெம்தமிழின் சோகைமிகு சொத்தாம்
சுரந்தொழுகி நவமியற்றும் செய்கையதன் சத்தாம்!

முரசறைந்து சங்கொலிக்க முன்னரெங்கள் ஆட்சி
மூவகையில் கொடிபறக்க முடிநிமிர்ந்த மாட்சி
அரசிதென்று உம்பர்கூட அயரநின்ற காலம்,
ஆளவந்த இனமிதென்று ஏற்றமுற்ற கோலம்!

இன்றுவெறும் ஏட்டினிலே ஏனடங்கிப் போச்சு?
எந்தமிழும் ஏதமுற்றே இழுக்குததன் மூச்சு!
கொன்றொழிக்கும் கூட்டமொடு குடிமனைக்குள் வாழ்ந்தே
கொள்ளிவைக்கும் பேய்களாலும் குலையுந்தமிழ் தாழ்ந்தே!

காலமென்ற நதியினோர நாணல்போல யாண்டும்
காற்றிலாடிக் கரைகடக்கும் நதியிலாழ்ந்து மீண்டும்
கோலஞ்செய்து நிமிர்வதென்ற கொள்கைதன்னை விட்டுக்
கொண்டுபோகும் வெள்ளமோடு போகிறோமே பட்டு!

நாடழிந்து நலமிழந்து நாதிகெட்டுப் போனோம்
நாம்வணங்கும் தாய்நிலத்தை விட்டகதி ஆனோம்
வேடமிட்டு வாழவேண்டி வேளைவந்த தேனோ?
வெட்கமின்றி நாங்கள் வாழும் தன்னலத்தால் தானோ?

கல்விவேள்வி யெங்குமெங்கள் கைகளின்னும் மேலே
ககனவெளிக் கேதுஎல்லை யென்றுபோவ தாலே
வல்லபிறர் விழிகளெங்கள் வளர்ச்சிகண்டு விரியும்,
வந்தனையும் திருஷ்டியாலே பண்புகொஞ்சம் சரியும்!

மொழிகலந்து மெய்வளைந்து மோகனமாய்ப் பேசி
முகத்தினையும் வேறதாக்கி முடிக்குந்தீந்தை பூசிப்
பழியிதடா தமிழிற்கென்று பதறுவோரைத் தாண்டிப்
பாதியான ஆடையோடு புதுமைதனை வேண்டி!

நெறிகடந்த தமிழரிங்கு நிலையழிந்து விட்டார்!
நினைவிருந்த கட்டுக்கோப்பின் களையிழந்து கெட்டார்!
செறிவிழக்கும் மொழிகளுள்ளே தமிழுமொன்றாம் தமிழா!
செம்மொழியா யா(க்)கியினிச் சேர்வதென்ன புகழா?

எம்மினத்தை மொழியையெங்கள் ஏற்றமிகு நாட்டை
எச்சிலாக்க வருபவரை எதிர்த்தவர்க்குச் சாட்டை
செம்மையாக வீசிடவே செருக்களங்கள் ஏறும்
சீலர்களால் தமிழிற்கின்னும் சீவனுண்டு. தேறும்!

தமிழென்ற அமிர்தமிங்குத் தனிமைமிக்க மொழியாம்
தமிழரெங்கள் பலமதொன்றே அதனைக்காக்கும் வழியாம்
நிமிர்ந்தஞான அறிஞரோடு நெருப்பையொத்த படையும்
நிற்பதனால் தமிழினந்தான் நினைத்ததனை அடையும்!

உருண்டுஓடும் யுகத்தின்வழி ஓடுகின்ற போதும்
உதிக்குமெதிர் காலமிங்கு உணர்வுகொண்டு ஓதும்
திரண்டதனால் தமிழர்வென்ற தீரமதன் நாதம்
திசைகளெங்கும் ஒலிக்கவின்று செய்வமொரு வேதம்!

ஒருபுறத்தில் தமிழர்வாழ உயிரையூற்றும் வீரர்
உணர்வினாலும் அறிவினாலும் தமிழ்வளர்க்கும் தீரர்
இருப்பிலுள்ளார்! புதுயுகம்வாழ் என்னருமை நண்பா!
இவர்க்குநீர் அணிலானாலே எழுமேதமிழ் தெம்பாய்!!



## 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
## இலங்கைப் பிரதேசம்
## (இரண்டாம் பரிசு பெற்ற கவிதை)

- மருத்துவர் **ஆர். முரளீஸ்வரன்,** *மட்டக்களப்பு*

விழுகின்ற செல்லில் வீடொன்றின் தகர்ப்பு
வெடியொலி சொல்கின்ற ஒருவனின் மரணம்
அழுகை யொலிதரும் உள்ளத்து வலிகள்
அனைத்தும் தாங்கி வாழ்கின்ற இனமிது.

பனம்பழம் விழுந்த தோப்புகள் நடுவில்
பிணங்கள் விழுந்த ஈழத்தின் இனமிது
பனங்கிழங் கெடுத்த மண்ணின் ஆழத்தில்
தினமொரு புதைகுழி காண்கின்ற இனமிது.

பாச உறவை இதயத்துள் பூட்டிப்
பாசறை புகுந்த புலிகளின் இனமிது
தேசப் படத்தை மாற்றி வரைய
ஆயுதத் தூரிகை தேடிய இனமிது.

இலைகளை இழப்பினும் கிளைகளை இழப்பினும்
ஆல மரங்கள் அழிவது மில்லை
வேர்களைக் காத்து வேறிடம் நாட்டி
விழுதுகள் மீட்கின்ற அகதிகள் இனமிது.

சங்கத் தமிழர்க்குக் கடற்கோள் எதிரி
ஈழத் தமிழர்க்குச் சிங்களம் எதிரி
எங்கும் எதிரிகள் எத்தனை வரினும்
எதிலும் வெல்வோம் இனிவரும் யுகத்தில்.

வெள்ளையர் தேசத்து வீதிக ளெல்லாம்
விளங்கா மொழிகளைச் சொல்கின்ற போது
உள்ளமும் உதடும் ஒன்றாய்த் தமிழ்சொல்ல
உறுதிகள் எடுப்போம் இனிவரும் யுகத்தில்.

இதுவரை தமிழர் சாதிகள் மதமென
இழுபறிபட்டே இழந்தது கோடி
புதுயுகப் பாதையில் புறப்பட்டு நடப்போம்
பொங்கு தமிழாய் ஒருவழி தேடி.

கலியுகம் மாற்றித் தமிழ்யுகம் செய்வோம்
முராரிகள் மாற்றி முரசொலி செய்வோம்
வலிகள் தாங்கி வலிமைகள் கொள்வோம்
வருகின்ற யுகத்தில் தமிழ்வெல்லச் செய்வோம்!

தமிழ்மொழி நாணயம் எமக்கெனச் செய்வோம்
வள்ளுவன் உருவத்தை அதிலே பதிப்போம்
தமிழுக்குத் தேசம் இணையத்தில் படைப்போம்
தமிழுக்கு ஒன்றெனில் ஒன்றாய்த் திரள்வோம்!

எட்டாம் அதிசயம் தமிழினில் செய்வோம்
ஐந்தாம் வேதம் தமிழினில் சொல்வோம்
எட்டுத் திசைகளும் போதா தென்றால்
இன்னொரு கிரகத்தில் தமிழ்கொண்டு செல்வோம்!

ரோமில் கூடத் தமிழனாய் இருப்போம்
ரஷ்யப் பனியினைத் தமிழ்மொழி பெயர்ப்போம்
தேம்சின் கரையினில் தமிழ்ப் பாட்டிசைப்போம்
சீனத்துச் சுவர்களில் திருக்குறள் வரைவோம்.

புலம்பெயர் தேசத்தில் தமிழினை விதைப்போம்
புலம்பெயர் வானத்தில் தமிழ்கொண்டு பறப்போம்
புலம்பெயர் நதிகளில் கலைத்துடுப் பெடுத்துப்
பண்பாடென்னும் படகினில் விரைவோம்!

பிள்ளைகள் கவனிக்க நேரங்கள் அற்றுப்
பெற்றவர் வாழ்வைத் தனிமையில் விட்டே
உள்ளத்தை இரும்பாய் இயந்திரப் படுத்தி
ஓடிடும் வாழ்வை மாற்றி யமைப்போம்!

வீழ்ந்ததில் பெருமை நயாகரா வீழ்ச்சி
சாய்ந்ததில் பெருமை பைசா கோபுரம்
ஆழ்ந்ததில் பெருமை டைட்டானிக் கப்பல்
அழிந்ததில் எழுந்தோம் அதுஎம் பெருமை!

மடிந்தவர் தியாகங்கள் துணையாய் வரட்டும்
முன்னோர் சரித்திரம் துணையாய் வரட்டும்
விடியலை நோக்கித் தமிழினம் நடக்கையில்
வருகின்ற யுகங்கள் வழித்துணை வரட்டும்!



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
இலங்கைப் பிரதேசம்
(மூன்றாம் பரிசு பெற்ற கவிதை)

-சிவனு மனோகரன், ஹட்டன்

அழுக்குச் சுமக்கும்
ஆத்மாக்களே!
சலவை செய்யாமலே...
சபிக்கப்பட்ட....
கடிகார மனங்களுக்குக்
கடிவாளம் இடுங்கள்!
கால மாற்றங்களில்
கொஞ்சம் கரைந்து பார்க்கலாம்!

மரபுகள் மீறி
மனிதங்கள் உரசும்
மாட்சிமை வேண்டுமா!
இலக்கணம் மீறி
இதயங்கள் நனைக்கும்
கவிதைகள் வேண்டுமா?
புதுயுகத் தமிழனே புறப்படு!
புதுமையாய் ஒருவிதி செய்வோம்
புயம் உயர்த்திப் பூரிப்புக் கொள்வோம்!

சடங்குகள் எனும்
சாக்கடை உடைத்துச்
சாகரம் தன்னில்
சங்கமம் வேண்டுமா!
நிலவுகள் தொடும்
நீண்ட வளர்ச்சியில்
வெளிவட்டம் வரைந்து
வெளியேற வேண்டுமா?
புதுயுகத் தமிழனே புறப்படு!
புதுமையாய் ஒருவிதி செய்வோம்
புயம் உயர்த்திப் பூரிப்புக் கொள்வோம்!

புழுதி படிந்த
புதுமையின் உன்னதங்களுக்குப்
புத்துயிர் வேண்டுமா?
ஓடி முடிந்த காலங்களின்
அடித் தடம் அழித்தே
அறிவியல் உலகில்
அங்கம் வேண்டுமா?
புதுயுகத் தமிழனே புறப்படு!
புதுமையாய் ஒருவிதி செய்வோம்
புயம் உயர்த்திப் பூரிப்புக் கொள்வோம்!

அசுரமாய்ப் பரவும்
அந்நிய மோகங்கள் எம்
தாயக மோகனத்தில்
மோதித் தலை மறைத்துக்
கொள்ளட்டும்!
புதுயுகத் தமிழனே புறப்படு!
புதுமையாய் ஒருவிதி செய்வோம்
புயம் உயர்த்திப் பூரிப்புக் கொள்வோம்!

காற்றின் முகவரியாய்
மானுட மலர்களின்
மணம் பரப்பி மலர்ச்சி காண்போம்!
புதுயுகத் தமிழனே புறப்படு!
புதுமையாய் ஒருவிதி செய்வோம்
புயம் உயர்த்திப் பூரிப்புக் கொள்வோம்!

தரிசு நிலங்களாய்த் தலை காட்டிய
எம் தமிழினத்தின் தலையெழுத்தை
மாற்றிடுவோம்
புதுயுகத் தமிழனே புறப்படு!
புதுமையாய் ஒருவிதி செய்வோம்
புயம் உயர்த்திப் பூரிப்புக் கொள்வோம்!

## 2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
## இலங்கைப் பிரதேசம்
### (ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 1)

-ஏ.சி. இஸ்மாலெவ்வை, சம்மாந்துறை

நேற்றுப் பார்த்த உலகத்தை
நினைத்தும் பார்க்க முடியாமல்
இன்று பார்க்கும் வேளையில்
எத்தனை மாற்றம் தெரிகின்றது
எல்லாத் துறையும் மாற்றத்துக்
கிலக்காய் ஆகி நிற்கிறது,
பூகோளம் ஓர் கிராமம் போல்
புது உலகாகி மிளிர்கிறது.

தேசப்படத்தில் ஆங்காங்கே
சிதறிக் கிடந்த தமிழரினம்
அறிவும் திறனும் ஆக்கங்களும்
அதிகரித்தனவா யிருந்தாலும்
தன்பலமறியா யானையைப் போல்
தனக்குள் அடங்கி முடங்கியது.

இந்து சமுத்திர மத்தியிலே
எரிந்த தீயின் சுவாலையினால்
வெந்து நொந்து குடிபெயர்ந்து
வெவ்வேறு திக்கில் கால் பதித்துப்
பாசக் கரங்களின் அரவணைப்பில்
புலம்பெயர் சமூகம் தோன்றியது.

உரிமைக்கான போராட்ட
உணர்வுகளாலே ஏற்பட்ட
போர்த்திறன், தமிழர் படைப்பலமும்
போர்களாற் பெற்ற வெற்றிகளும்
உலகத் தமிழரை உயர்வாக்கி
உலகம் அறிய வைத்தனவே.

புதிதாய் மாறிய இவ்வுலகம்
புதிய யுகத்தில் இருக்கிறது.
புதிய யுகம்வாழ் தமிழர்கள்
பொறுப்பை அதிகம் சுமந்தவராய்
மாறும் பூமியின் கெடுபிடிக்குள்
மரபு தனித்துவம் பிறழாமல்
வாழ வேண்டிய கடப்பாட்டில்
வாழ்க்கை நடாத்த வேண்டியுள்ளார்.

புதுயுகத் தமிழர் உலகத்தின்
போக்கின் பார்வைக் கிலக்காகிக்
கண்காணிக்கப் படுபவராய்க்
கவனத்துடனே வாழ்கின்றார்.

அகதி நாமம் கொண்டோர்கள்
அவ்வந் நாட்டு அரசுகளின்
கொள்கைப் பிடிக்குள் அகப்பட்டு
குரல்வளை நசுங்கி இருக்கின்றார்
சொந்த நாட்டில் போராடிப்
பந்த பாசம் உடைமைகளைப்
பறிகொடுத் தேங்கி வாழ்கின்றனர்!

புதுயுகத் தமிழர் உலகத்தின்
போக்கின் பார்வைக் கிலக்காகிக்
கண்காணிக்கப் படுபவராய்க்
கவனத்துடனே வாழ்கின்றார்.
அணைக்கும் உலகக் கண்களுக்கோ
அருவருப்பூட்டும் வண்ணத்தில்
செயல்கள் பலவற்றைச் செய்வதனால்
சீற்றம் படிந்தும் வாழ்கின்றார்!

இப்படிப் பற்பல கோலத்தில்
இருக்கும் புதுயுகத் தமிழர்கள்,
பாம்பு தின்னும் ஊர்சென்றோர்
பார்த்து நடுத்துண் டுண்ணாமல்
சங்கமுதலாய் இன்றுவரை
தகைசால் பெரியார் எமக்கீந்த
கலைகள், இலக்கியக் காவியங்கள்
காட்டிய வாழ்வை வாழ்ந்திடணும்!

பழையன தழுவிப் புதியவற்றைப்
பக்குவமாக உட்புகுத்தி
உலகின் தேவை யாவற்றிலும்
உயர்தொழில் நுட்பம் கொண்டவராய்
வாண்மை பெற்றோர் வங்கியென
வழங்கல் செய்தால் வெற்றி வரும்
வாண்மை பெறுவோம் எத்துறையும்
வழங்கல் செய்வோம் புகழ்பெறுவோம்.

**2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004**
**இலங்கைப் பிரதேசம்**
**(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 2)**

-மு. ஷியாம்குமார், திருக்கோணமலை

கங்குல் விலகி யோடவொரு
காலை புலரும் - நாளை
தங்கத் தமிழீழமெனும் - திரு
நாடு மலரும் - இனிச்
சங்கு, பறை கொட்டித் தமிழ்ச்
சாதி முழங்கும் - வெற்றி
எங்குமெனச் சொல்லி
வெடியோசை எழும்பும்.

எட்டுத் திசை யாவும்
எங்கள் இராச்சியமே - இனி
முட்ட வரும் எவர்
நிலையும் பூச்சியமே!
கட்டுப்பாடு இல்லாத
காற்றைப் போல - நாங்கள்
தொட்டுத் தொட்டுப் பேசுவோமே
வானின் மேலே!

எல்லாமே இனியெங்கள்
கைகளி லென்று
சொல்லுமே பூங்காற்று
வாசலில் வந்து!
புல்லர்கள் படை யாவும்
தீயில் வேகும் - தமிழ்
பல்லாண்டு வாழ்கவெனக்
கவிகள் பாடும்!

வேரிழந்து ஓடியவர்
வீடு வருவார் - எம்மை
ஊரிலிருந்தோட வைத்தோர்
ஓடிவிடுவார் - வெற்றிப்
பேரிகைகள் கொட்டும் ஒலி
வானைப் பிளக்கும் - இனிக்
காரிருள் கலைந்தோடப்
புது வாழ்வு பிறக்கும்.

கொற்றத் திருவாசல்
கதவு திறக்கும் - தமிழ்
முற்றமெல்லாம் இனி
வெற்றி ஜொலிக்கும் - நல்
சுற்றம் புடைசூழ எம்
தலைவன் வருவான்
கொற்றக் குடையின் கீழிருந்து - அவன்
அரசு புரிவான்.

ஈழக் கடல் மட்டுமல்ல
ஆழக் கடலெங்கும் - எங்கள்
கடற் சேனைகளின்
கப்பல் உலா போகும்
சோழன் ஆண்ட காலத்தோடு
போன "பொற்காலம்" கரி
காலனது காலத்திலே
மீண்டுமெமைச் சேரும்.

சிந்தையிலே மானமற வீரரையே வைப்போம்
நிந்தனைகள் செய்ய வரும் நீசரில் தீ வைப்போம்
வந்தனங்கள் சொல்லித் தலை வாசலிலே நிற்போம்
வல்லமையின் வடிவாயிருந்து
வையகத்தை வெல்வோம்.



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
இலங்கைப் பிரதேசம்
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 3)

-காத்தாங்குடி பாத்திமா

தமிழனின் வாசகம் தாயக யாசகம்
தனித்தொரு இனமழிக்கத் தமிழெனும் ஒலியழிக்க
ஆமியும் கூடினர் அரக்கரும் கூடினர்
மானிடம் அழிந்தது மதவெறி பிறந்தது
ஆண்டவன் தமிழன் அவனிலை வீழ்ந்து
அவனியில் அவனை அழித்திடத் துடித்தனர்
ஆண்டவன் மீண்டும் ஆண்டிட வருவான்
அந்தவோ ருண்மையை அனைவரும் மறந்தனர்!

தாரணி தன்னில் தலைநிமிர் தமிழா - உன்
மார்பினில் குண்டென்ன மலையே வரினும்
வீரவேட்கையும் - வெகுண்டெழும் சினமும்
போரிலே காண்பித்துப் புகழுண்டாய் தமிழா
உலகப் படையினர், பகைவரைக் காணினும்
ஓடி ஒளிந்தவர் - உயிரை மதித்தவர்
போயினர் - புதைந்தனர் பூமியில் மறைந்தனர்
பூமியில் வீரமாய்ப் புதுயுகம் படைக்கப்
புதுயுகத் தமிழா விரைந்துநீ எழுந்தனை
வீரம் நமக்குள் விளைந்துதான் போனது
போரா? அதிலும் புதுத் தெம்புள்ளது
சோரம் போகாத் தமிழனே உன்னில்
சோழனும், சேரனும், பாண்டியும் உதித்தனர்
வீரத் தமிழனே உன் விவேகம் கண்டு
விளைந்த நிலத்துடன் உலகமே நோக்கிப்
பார்தனில் உனக்கொரு படைநிலம் வேண்டிப்
பரந்து - திரண்டுனைப் பாராட்டி நின்றனை!

ஈழத் தமிழனின் இவ்வீரம் கண்டு
எங்கெலாம் தமிழனின் இனிமை ஒலியோ
அங்கெலாம் உனக்கெனப் புதுயுகம் படைக்க
ஆராத்தி அழைக்க - அணிபலவுண்டு
புயலுக்குப் பின்னர் அமைதியுண்டு

பேரழிவுக்குப் பின்பொரு தெளிவுமுண்டு
உயரிய பலவுயிர் சிதைந்து போக - அது
உரமாகி உனக்கெனப் புதுயுகம் படைத்தனை!

தமிழனைச் சாடும் இழிநிலை வேண்டாம்
தமிழனின் வேட்கையில் தலைதாழ வேண்டாம்
தமிழனின் தாகத்தைத் தீர்க்கும் வழியே
தரணியில் நிம்மதி தந்திடும் வாழ்வு
தமிழனே உன்னை வீழ்த்த நினைத்தவர்
தலைதனைத் தாழ்த்திப் பேச்சுக் கழைக்கும்
தருணமே வந்தது தமிழினம் எழுந்தது
தமிழனால் புதுயுகம் படைக்க முடிந்தது!

தமிழனே உன்னிடம் தலையுளோர் உண்டு
தன்னைத்தான் ஆளும் தரமும் உண்டு
உமியென, கடுகென, உன்னை நினைக்கும்
உணரா மாந்தரும் உன்னிடை வீழ்ந்தனர்.
தேனையும் வெல்லும் தெவிட்டாத் தமிழைத்
தெள்ளி எடுத்துச் செம்மொழி யாக்கியோர்
மானையும் வெல்லும் மானத் தமிழனின்
வீரம் சொல்லியே விளைச்சல் பெருக்கினர்!
தமிழன் எதையும் தாங்கும் மனத்தோன்
தனது கரத்தால் உலகையே ஆள்வான்,
சாவையும் தனக்கெனச் சங்கையாய்க் கொள்வான்
சாதகம் கொள்வரை ஒய்வதும் கொள்ளான்
தமிழனே உன்னிடம் விளைச்சலோ மிகுதம்
தாய்ப்பாலின் வெண்மை உன்வீரத்தின் வண்ணம்
வருத்தி நின்றவர் வா என்றழைக்க
வைத்தது உன்னிடம் வாழ்ந்திடும் வீரம்!

புகழுறு தமிழா புதுயுகம் படைப்பாய்
புதைந்தவர் எழுந்திடப் புதுப்பா யிசைப்பாய்
அகமெலாம் மகிழ அக்காட்சி காண,
ஆண்டவா எனக்குநீ அருள்தர வேண்டும்.



2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004
இலங்கைப் பிரதேசம்
(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை - 4)

-ஆ. பொன்ராசா, மன்னார்

புதுயுகத் தமிழர் மாண்பு கூறுதல் எளிதேயல்ல
தொன்மைகள் விழுமியங்கள் பண்புகள் என்றிவ்வாறு
பண்பாடு கொண்ட எம்மைச் சுருங்கவேகூறல் நன்றோ?
காலத்தின் கோலத்தாலே பலயுகம் கண்ட நம்மை
ஒருயுகம் கேட்டுநின்று அமைவது நன்றேயல்ல.
புதுயுகத் தமிழர் என்றால் பலயுகம் அவருக்குண்டு
என்பதை மறந்துபோதல் நேர்மையே அல்ல என்பேன்.

யுகம்பல வாழ்வுகண்டு முத்திரை பதித்தோர் நம்மோர்
மொழித்திறன் பேசுகின்ற இலக்கியம் பலவும் கண்டோர்
ஆயினும் நாங்கள் இன்று புதுயுகத் தமிழர் காண்போம்
தமிழீழத் தமிழர் என்றும் தமிழ்நாட்டுத் தமிழர் என்றும்
மலையகத் தமிழர் என்றும் புலம்பெயர் தமிழர் என்றும்
தமிழையே மறந்துபோன கலப்பினத் தமிழர் என்றும்
தாய்மொழி தமிழாய்க் கொண்ட சோனக மக்கள் என்றும்
பல்வேறு பாகுபாடு கொண்டு நாம் வாழுகின்றோம்.

சாதிகள் பலவுமுண்டு சமயங்கள் சிலவுமுண்டு
செல்வந்தன் ஏழையென்ற பேதமும் எம்முள்ளுண்டு
வீரரும்உண்டு நம்முள் கோழைகள் சிலருமுண்டு
திருந்திய மனிதர் உண்டு திருந்தமாட்டா தவருமுண்டு
ஆயினும் நாங்கள் எல்லாம் தமிழர்கள் என்றுமுண்டு
இந்தியத் தமிழகத்தில் ஆரியர் அட்டகாசம்
தமிழீழத் தமிழருக்கோ சிங்களர் நெருக்குவாதம்
மலையகத் தமிழருக்கோ மாண்புறு வாழ்வு இல்லை
புலம்பெயர் தமிழருக்கோ நிறவெறி நிலைமை என்று
பலபட்ட தொல்லைகண்டு வாழ்கின்ற நிலைமைதானோ?

மண்ணை விட்டகலேன் என்று மாண்டவர் பலபேர்
மேலும் உடைமைகள் உறவிழந்து போனவர் பலபேர்
புலம்பெயர் வாழ்வுகண்டும் புதியதோர் சூழல் கண்டும்
தம்மண்ணை மறவா மக்கள் மதிப்பதற் குரியோராவர்

வீட்டிலே அடுப்பு மூள விடுதலை ஞானம் தோன்ற
கல்வியில் உயர்வு கண்டு கௌரவமாக வாழக்
கோழையும் வீரனாகக் கொள்கையில் பிடிப்புத் தோன்ற
அடிப்படைத் தேவையாவும் இலகுவில் தீர்த்து வாழ
நாட்டினில் நம்மைச் சுற்றி நடப்பதை விழிப்பாய் காணத்
தாயக மீட்புக்காகத் தம்கடன் ஆற்றி நிற்க
தன்னலன் அகன்று நாட்டின் நலனதை எண்ணிநிற்கப்
புலம்பெயர் தமிழர் செய்த உதவிகள் உயர்ந்ததன்றோ

தமிழீழத் தமிழருக்குச் சோதனைக் காலம் காண்பீர்
பரீட்சையில் தேறிவிட்டால் நிம்மதி வந்தே தீரும்
நிலம்தனை மீட்டுக்கொள்ள வழிவகை காணவேண்டும்
இருப்புக்கே அச்சுறுத்தல் இருப்பதை ஒழிக்க வேண்டும்
தமிழகத் தமிழர் கூட உதவிடா நிலையில் நின்றால்
கருத்தினைக் கடுமையாகக் கூறவே தடைகள் என்றால்
கொள்கையை விட்டு நாங்கள் தூரவே போகமாட்டோம்
எம்கடன் ஆற்றி நிற்போம் உறுதியாய் மேலும் நிற்போம்
சாதிக்ள் அகற்றி நிற்போம் சமய பேதங்கள் தீர்ப்போம்
உண்மையை உணர்த்தி நாமும் உயர்ந்தவராகி நிற்போம்.

பிரதேச வேறுபாட்டைக் கருதிநாம் வாழமாட்டோம்
பெண்களை அடிமையாகப் பார்ப்பதை விலக்கி வைப்போம்
ஆணுக்குப் பெண்கள்என்றும் சமத்துவம் என்று சொல்வோம்
ஆன்மீக நாட்டம் கொண்டு அன்பினை வளர்த்துக் கொள்வோம்.
சமூகத்தின் விடுதலைக்காய்ச் சாகசம் பலவும் செய்வோம்
மொழியினை நேசிப்போம் நாம் இலக்கிய வழிகள் காண்போம்
கலைகளை மதிப்போம் கண்ணும் கருத்துமாய் அதை வளர்ப்போம்
குலமது ஒன்றே என்போம் தேவனும் என்றே என்போம்
தொழில்பல வளர்த்து நாங்கள் உயர்ந்திடும் வழிகள் காண்போம்
கடல்வளம் காண்போம் மேலும் மண்வளம் சிறக்கச் செய்வோம்
உழைப்பவர் கைகள் மீது நல்லூதியம் கிடைக்கச் செய்வோம்
உலகத்தின் பார்வை தன்னை நம்மீது விழவும் வைப்போம்.



**2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - 2004**
**இலங்கைப் பிரதேசம்**
**(ஆறுதல் பரிசு பெற்ற கவிதை – 5)**

**-எஸ்.ஆர். ஐங்கரலிங்கம்,** *வவுனியா*

***(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)***

பொன்னுல கந்தனில் பொற்பென நாடெங்கும் பொலிந்த தமிழினமே
மின்னலெ னத்தமிழ் மேதினி மீதினிலே விளங்கு விளக்கமதோ
கன்னலுந் தேன்பால் கனியும் இனித்தசுவை கவின லங்குதமிழ்
அன்னத மிழ்மொழி யஞ்சீர் தமிழினமாய் அலங்க ரித்திலங்கே.

(வேறு)

செம்மொழி யாகியே சீர்த்த தமிழ்மொழி சீரெழச் செகம்வாழி
அம்மொழி யெம்மொழி யம்மின மெம்மினம் அகிலம திசயிக்கும்
எம்மிடந் தருமநூல் இன்திருக் குறளுடன் இதம்பெருங் காப்பியங்கள்
கம்பரா மாயணங் காண்புரா ணம்பல கவினிலங் கிடுமினமே.

(வேறு)

தமிழர் கலையாய்மெய்ச் சாத்திரஞ் சோதிடந் தக்க வானியலும்
அமிழ்தாய் அருஞ்சித்த மருத்துவம் அறுப தொடுநான் காய்க்கலைகள்
எமதின் தமிழ்தொன்மை எம்மொழிக் கீடென எவரி யம்பவலார்
தமியள் தமிழ்த்தாயாள் தனியிலக் கணவணி தன்னகந் தான்சிறப்பே.

*(வேறு)*

முருகுத மிழ்மொழி முந்துந்த மிழினம் மூலைமு டுக்குள் மோக வழகெனவே
பெருகுத மிழ்ச்சனம் பேருலக மெங்கணும் பெட்பெனப் பெருக்கமாய்ப் பேசுநா டெங்கணுமே
பெரும்போர்ப் பிரச்சினை பிரிந்துமே யிலங்கையால் பிறபிற நாடெலாம் பெயர்ந்து நிரந்தரமாய்
அரும்பெற வாழ்வதை யத்தனைபே ரறிவரே அகிலமெ லாம்பரந் தாற்றுவரும்பணியே.

*(வேறு)*

எந்திர வுலகினில் தந்திரத் தமிழராய் இனியராய்ப் புதியராய் ஏற்றமுற்றார்
சொந்தமாய்த் தொல்லுல கெங்கணுந் தொடர்புறத் துரிதமாய்ப் பரந்தத - மிழின்சொல்
சந்ததம் வாழிய தமிழ்மொழி தழைத்துமே தமிழினந் தகையுறச் சால்புறவே
உந்துபு துயகத் தமிழராய் ஒளிர்ந்துமே ஒருப்பட உவந்துமே யுருப்படவே.

(வேறு)

சாதிம தங்களாய்த் தாங்கள் பிரிவிலாச் சண்டை சளப்பிலாத் தமிழ்ச்சனமாய்
நீதிநெ றிக்கொரு நீர்ம்மை நிலைத்திட நீண்ட புகழ்நிகர் நிறைதமிழர்
ஓதியோ திப்படித் துலகுநா டுர்களில் ஓங்கு புகழ்தமி ழோரிவரே
சோதித மிழ்தனைச் சொந்தத் தமிழ்தனைச் சோர்வ கலத்துணை துலக்குவமே.

(வேறு)

வானொலி தொலைக்காட்சி கணினி மயமென வண்மைத் தமிழினை வாழவைப்போம்
தேனிகர் தீந்தமிழ்செந் திறனாய் வளர்கவே சேர்ந்து தமிழராய்ச் சீர்ந்துழைப்போம்
ஏனினி யெங்களின்த மிழிடர் கேடுற இனவன் முறையாய் இழிவடைவான்
மானமும் வீரமுமாய் மலிந்த தமிழினம் மலர்ந்து புதுயுகம் வகைபொலிவே.
பொறாமைக் குணத்தினைப் போக்கித் தமிழரே பொலிந்த பரந்த புகழ்பரப்பி
நிறைந்த மனத்துடன் நிலைத்த வினமென நிரம்பப் புவியோர் நினைந்திடவே
மறைந்த தமிழறி ஞர்புல வர்களை மதித்து வணங்கித் தமிழ்வளர்ப்போம்
சிறந்த பயிற்சியாற் சீர்படை வீரராய்த் திகழ்ந்து செறிந்தசெந் தமிழினமே.
பெரும்பொரு ளீட்டிய பெற்றித் தமிழராய்ப் பெருஞ்செல் வந்தரெனப் பெரிதுழைப்போம்
அருமைவிஞ் ஞானமும் ஆங்கிலஞ் செந்தமிழ் அருங்கணி த்ந்தொழில் நுண்ணறிவாய்
ஒருமைமெய்ஞ் ஞானமும் உண்மைக் கலைபல உகந்தநுண் எந்திர ஓரறிவும்
நிரம்பிய எங்களின் நிலைத்த புதுயுகம் நிறைந்த தமிழராய் நீள்புகழே.

(வேறு)

திரைகடல் ஓடியுந் திரவியந் தேடத் தெரிந்த தமிழினமே
செந்தமிழ்த் தேயந் திகழ்ந்திடச் செய்குவமே
அருந்தடப் பேர்மொழி அகிலத் தாதி யகல்வர லாற்றுமொழி
ஆனைகு திரைய திகாலாட் படையரசாய்ப்
பெரும்பட வன்றுமே பிணைத்தபெ ரும்புகழ் பேச்செழுத்தானமொழி
பெண்மைப்பெற்றிப் பேறிஞர்மரே
பிரியமெ னவாகப் பேணியே வளர்த்த பேர்சீர்ப் பெருமொழியாய்ப்
பேசுபு துயுகத் தமிழாய்ப் பிசகிலையே.

(வேறு)

சேரனுஞ் சோழனும் பாண்டிய னுஞ்செஞ் சீரிலங் கைவேந்தன் இராவணனும்
நேரெனச் சீரென நிறைந்தசிற் றரசர் நின்றுவ ளர்த்தசெந் தமிழணங்கை
ஊரெனப் பேரென ஓரெனச் சீரென உன்னத மாகவே யுழைத்துவளர்ப்
பாரெனப் பற்பல பேரறி ஞர்பலர் பண்புது யுகத்தமி ழர்பாரே.

தமிழறி ஞர்தாமு மன்று சமணருஞ் சார்ந்துசை வத்து நாயன்மார்கள்
இ(ை)மயகி ரிமுனிகள் இங்ஙன் எழிலுயர் எத்தனை யெத்தனை வண்ணமுற
அமிழ்தெனச் செந்தேன்த மிழ்தனை அந்நியம் ஆணம தங்களின் குருமாரும்
அமையவ ளர்த்ததால் அல்லவோ நாங்களும் அப்புது யுகவின மாற்றினமே.
புதுயுகத் தமிழர் புன்னகை பூப்பமே பூவுல கில்நிகர் எங்களுக்கார்
புதுயுக வாழ்வாய்ப் பொலிசெந் தமிழ்தனிப் பொன்னர சாகப் பொலிந்திலங்க
இதமென நிதமெனச் சதமென யாமெலாம் எப்படி யேனு முழைப்பதற்காய்க்
கெதியெனக் கதியெனக் கிளர்ந்தெ ழுந்துமே கெட்டிக் காரராய்க் கிளைந்தொருங்கே.

*(வேறு)*

தமிழர் கலாசாரந் தனிபண் பாடுள் சார்சுதே சவிளை யாட்டுகளும்
தமிழர் விவசாயங் கைத்தொழில் வர்த்தகம் தக்கவு யர்படிப் பத்தனையும்
தமிழர்க் கெனவெந்தி ரமயஞ் சார்ந்ததாய்ச் சாற்றுச கலதி றன்தகவாய்
எமையு யர்த்தியாம் புகுயுகத் தமிழராய் ஏற்றமாய்த் தோற்றமாய்ப் போற்றுவமே.

*(நேரிசை வெண்பா)*

புத்தம் புதுயுகப் பொற்றமி ழர்நாங்கள்
மொத்தத் திறனாய் விளங்குவமே - எத்தனையோ
விந்தை மிகச்செய்தே மேலாந் தமிழரெனச்
சிந்தை களித்திருப்போர் சேர்ந்து.

# அகல்விளக்காய் அரும்பணிகள் ஆற்றும்
# இலண்டன் சுடரொளி வெளியீட்டுக்கழகம்

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாடியது போல 'தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, வருமானம் இவை உண்டு, தான் உண்டு' என்று கடுகு உள்ளத்தோடு செயல்படாமல், 'தூய உள்ளம், அன்பு உள்ளம், அளப்பரிய அகன்ற உள்ளம், தாயுள்ளம்' கொண்டு தமிழுக்கும் தமிழர்க்கும் தொண்டாற்றி வருபவர்களே இலண்டனில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள்.

இவர்களின் அரிய முயற்சியில் உருவான, 'இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம்' தமிழ்மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, பாரம்பரியம் முதலானவற்றைப் புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்களிடையே வளர்ப்பதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு பணியாற்றி வருகிறது.

அண்மையில் இக்கழகம் நடத்திய 'இரண்டாவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி-2004' மாபெரும் முத்திரையைப் பதித்துள்ளது. உலகளாவிய நிலையில் 426 கவிஞர்கள் அதில் பங்கேற்றனர். 270-க்கும் மேற்பட்ட தமிழகக் கவிஞர்களும் பங்கேற்றனர். முதல் மூன்று பரிசுகளோடு 24 ஆறுதல் பரிசுகளைப் பெற்றவர்களும் தமிழகக் கவிஞர்களே. அதிலும் முதற்பரிசைத் தட்டிச் சென்றிருப்பவர் கவிவேந்தர் கலைமாமணி கா. வேழவேந்தன் என்னும் தகவல் இலக்கிய ஆர்வலர்கள் நெஞ்சங்களில் தேனைப் பாய்ச்சவே செய்யும்.

இலண்டன் வரும் தமிழறிஞர்களை உரையாற்றச் செய்து பெருமைப்படுத்துவதில் இக்கழகம் மோனையைப் போல் முன்னிற்கிறது.

பன்னாட்டுத் தமிழர்களுக்குப் பெரிதும் பயன் தரும் வகையில், தமிழ் தந்த தாதாக்கள், செந்தமிழ் வளர்த்த செம்மல்கள், ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா, அகதிகளின் சோக வரலாறு, புதுயுகத் தமிழர்கள் முதலான நூல்களை வெளியிட்டுள்ளது. மேலும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை வெளிக் கொணருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது.

இக்கழகத்தின் நாற்பெரும் தூண்களாக விளங்கும் தலைவர் பொன். பாலசுந்தரம், செயலாளர் ஐ.தி. சம்பந்தன், நிதிப் பொறுப்பாளர் - மருத்துவர் எஸ். நவரத்தினம், மருத்துவர் எஸ். ஞானச் செல்வன் ஆகியோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

'சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் பெயரும் புகழும் எட்டுத் திக்கிலும் பரவ வேண்டும் என்பது என் வேணவா; பரவும் என்பது என் ஆழ்ந்த நம்பிக்கை.

- பேராசிரியர் முனைவர் **இரா. மோகன்,**

*காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*